பெருநகர சென்னை மாநகராட்சி மன்றம்
திருவள்ளுவராண்டு 2057, ஆடி மாதம் 13 – ஆம் நாள்,
2026-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 29ஆம் நாள்
புதன்கிழமை காலை 10.00 மணிக்கு ரிப்பன் கட்டிடத்தில்
உள்ள மன்றக் கூடத்தில் நடைபெற்ற சாதாரண மன்ற கூட்ட
நிகழ்ச்சிகள்

மாண்புமிகு மேயர்

முதலில் தமிழ்த்தாய் வாழ்த்து.

(அவையில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது)

திருக்குறள். 13 – "அடக்கம் உடைமை" என்கிற அதிகாரம். குறள் எண். 127.

" யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. "

ஒருவர் எதை காத்திட முடியாவிட்டாலும், நாவையாவது அடக்கி காத்திட வேண்டும். இல்லையேல் அவர் சொன்ன சொல்லே அவர் துன்பத்துக்கு காரணமாகி விடும்.

2026-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 29-ஆம் நாள் புதன்கிழமை இம்மன்றத்தின் சாதாரண கூட்ட நிகழ்ச்சிகள் தொடங்குகின்றன.

(தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழியினை மாண்புமிகு மேயர் அவர்கள் படிக்க மன்ற உறுப்பினர்கள் அனைவரும் திரும்ப சொல்லுதல்)

தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்திய குடிமகனாகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டு விட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாக கொண்டு எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ, சமூக வேற்றுமையை மனம், வாக்கு, செயல் என்கிற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

அரசியலமைப்பின் அடிப்படை கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற, சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியலமைப்பின்பால் எனக்குள்ள முழு பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.

(இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்கள் ஆணையர் இருக்கையில் அமர்தல்)

அனைவருக்கும் வணக்கம்

திராவிட முன்னேற்ற கழகம் உலக தமிழர்களின் வாழ்வோடும், எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் தமிழ்நாட்டின் நலனிலும், தமிழ்நாட்டின் வரலாற்றோடும் பின்னி பிணைந்துள்ளது. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோர் வழியில், சங்கு சுட்டாலும் வெண்மைத்தரும். அது போல, திராவிட முன்னேற்ற கழகத்தின் அடிப்படை கோட்பாடுகளில் இருந்தும், கொள்கைகளில் இருந்தும், சமரசம் செய்து கொள்ளாமல், என்றென்றும் மக்கள் மனதில் நீக்கமற நிறைந்திருக்கும் அன்பு தளபதி திரு.மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் உள்ள திராவிட முன்னேற்ற கழகத்தின் வெற்றி பயணம் தொடர பாடுபட வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் இருந்த ஐந்து ஆண்டுகளில் மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளின் காரணமாக, தமிழ்நாடு தலை நிமிர்ந்தது என்பது ஒன்றிய அரசின் நிதி ஆயோக் சமீபத்தில் அறிக்கை வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையில், இந்தியாவில் தலைசிறந்த மாநிலமாக தமிழ்நாடு உருவாகுவதற்கு உள்கட்டமைப்பு, வணிகச்சூழல்கள், வளங்கள், அரசின் கொள்கைகள், ஒழுங்குமுறை எளிமை, நிறுவன சூழல், நிதி நிலைத்தன்மை, சுற்றுச்சூழல் மீள்திறன் போன்ற அனைத்து நிலைகளிலும், தமிழ்நாடு முதன்மை மாநிலமாக திகழ்ந்துள்ளது. முதலீட்டை ஈர்க்கும் மாநிலமாக தமிழ்நாடு திகழ்வதற்கு சிறந்த துறைமுக உள்கட்டமைப்பு, நம்பகமான மின் விநியோகம், முதலீட்டுக்கு உகந்த வணிகச்சூழல், வலுவான ஏற்றுமதி செயல்திறன்

முக்கிய காரணங்களாக இருந்துள்ளது என்று ஒன்றிய நிதி ஆயோக் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதன் மூலம் தமிழ்நாடு ஒரு முன்னேறிய மாநிலமாக உயர்வதற்கு திராவிட மாடல் அரசு தான் காரணம் என்பதை இந்த நேரத்தில் பெருமையுடன் தெரிவித்து கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாட்டின் முன்னாள் துணை முதலமைச்சராக இருந்த திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டு துறையில் ஆற்றிய பங்கு அளப்பரியது. அவரது சீரிய முயற்சியில் தமிழ்நாடு எண்ணற்ற சாதனைகளை படைத்துள்ளது என்பதை பெருமையுடன் தெரிவித்து கொள்கிறேன்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் 2006 முதல் 2011 வரை பதவியில் இருந்த திராவிட முன்னேற்ற கழகம், சென்னை மாநகராட்சி மகப்பேறு மருத்துவமனை, அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு நல்ல தமிழில் பெயர் சூட்டினால் மாநகராட்சியின் சார்பில் 'தங்க மோதிரம்' பரிசாக வழங்கப்படும் என அறிவித்தது. 23.04.2014 அன்று மாண்புமிகு தளபதி திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் அழகு தமிழில் பெயர் சூட்டிய குழந்தைகளுக்கு 'தங்க மோதிரம்' அளித்து சிறப்பித்துள்ளார்கள் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

கேள்வி நேரம்

முதலில், மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. ச. சங்கர் கணேஷ் அவர்கள், வார்டு எண் – 151.

திரு. ச. சங்கர் கணேஷ்

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, சக மாமன்ற உறுப்பினர்களே மற்றும் அனைத்து துறையினை சார்ந்த அதிகாரிகளுக்கும் முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

கேள்வி:

151வது வார்டு, போரூர், நேதாஜி நகரில் மீட்டெடுக்கப்பட்டுள்ள அரசுக்கு சொந்தமான சுமார் 18,000 சதுர அடி கொண்ட நிலத்தில்

பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான சமுதாய நலக் கூடம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு மேயர்

பதில்:

மண்டலம்–11, வார்டு–151 நேதாஜி நகரில் அரசுக்கு சொந்தமான சுமார் 15,000 சதுரடி நிலம் கண்டறியப்பட்டுள்ளது. இந்நிலத்தில் தற்போது சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பணிகள் நடைபெற்று வருகிறது. அப்பணிகள் நிறைவு பெற்ற பிறகு, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்த பின்பு சமுதாய நலக்கூடம் அமைக்க சாத்திய கூறு ஆராய்ந்த பிறகு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது.

திரு. ச. சங்கர் கணேஷ்

நன்றி.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி.க விமலா கர்ணா அவர்கள் வார்டு எண் – 194.

திருமதி.க விமலா கர்ணா

மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும். மன்ற கூட்டதை சிறப்பித்து கொண்டிருக்கும் அனைவருக்கும் என்னுடைய பணிவான காலை வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

கேள்வி :

மண்டலம்-15, வார்டு-194ல் சர்வே எண்.280ல் அடங்கிய பொன்னி தெரு. அன்னை தெரெசா தெரு பகுதிகளில் நீண்ட காலமாக மக்கள் வசித்து வருகிறார்கள். இங்கு கடந்த திராவிட மாடல் ஆட்சியில் பட்டா வழங்கப்பட்டுள்ளது. தற்போது இந்தத் தெருக்களில் சாலை அமைக்க வேண்டியும், மழைநீர் வடிகால்வாய் அமைக்க வேண்டியும் நடவடிக்கை எடுக்கப்படுமா? என்பதை தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேயர்

பதில்:

மண்டலம் 15, வார்டு –194க்குட்பட்ட பொன்னி நகர், அன்னை தெரசா நகர் ஆகிய பகுதிகளில் உள்ள இடமானது வருவாய் துறைக்கு சொந்தமான இடமாகும்.

அந்த இடத்துக்கான பட்டா, சிட்டா, அடங்கல் FMB sketch மற்றும் A – Register ஆகியவற்றின் விவரத்தினை அனுப்பி வைக்குமாறு வட்டாட்சியர் சோழிங்கநல்லூர் அவர்களுக்கு 24.07.2026 அன்று கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அவ்வறிக்கை பெற்றவுடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது.

திருமதி. க. விமலா கர்ணா

நன்றி பாராட்டுதல்

194 ஆவது வார்டில் உள்ள 3 குளங்களை தூர்வாரி, சீரமைத்து தர வேண்டும் என்ற நீண்ட நாள் கோரிக்கைக்கு மாண்புமிகு மேயர் அவர்கள் 2026 பிப்ரவரி மாத நிதிநிலை அறிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்தமைக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி விவரங்கள்:

- அனுமன் காலனி, வையாபுரி குளம் – ரூ. 2 கோடி 92 இலட்சம்
- ஷாலிமார் கார்டன் கற்பகவிநாயகர் கோயில் குளம் – ரூ. 2 கோடி 94 இலட்சம்
- கங்கையம்மன் கோயில் குளம் – ரூ. 2 கோடி 74 இலட்சம்

தெரு பெயர் பலகைகள்

தெரு பெயர் பலகைகள் நன்றாக இருந்தாலும், உள்ளிருக்கும் எழுத்துக்கள் சேதமடைந்துள்ளன. 67 பெயர் பலகைகள் வைப்பதற்கான நிதி ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. QR Code பணிகள் முடிவுற்ற பின் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டு பணிகள் நடைபெற வேண்டிய நிலையில் உள்ளன. இதற்காக மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், ஆணையர், வட்டார துணை ஆணையர் (தெற்கு), 15வது வார்டுகுழு தலைவர்

திரு. எ. மதியழகன், மண்டல அலுவலர், மழைநீர் வடிகால்வாய் துறை அதிகாரிகள் அனைவருக்கும் 194 ஆவது வார்டின் சார்பாக மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி. ப. வேளாங்கண்ணி அவர்கள், வார்டு எண்.53.

திருமதி. ப. வேளாங்கண்ணி

மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும். வடக்கு வட்டார துணை ஆணையர் அவர்களுக்கும், மண்டல அலுவலர் அவர்களுக்கும், நிலைக்குழு தலைவர் அவர்களுக்கும், வார்டுகுழு தலைவர் அவர்களுக்கும், அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்ளும், பத்திரிகை மற்றும் ஊடகத்துறையினை சார்ந்த நண்பர்களுக்கும் என்னுடைய முதற்கண் வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

திராவிட முன்னேற்ற கழக தலைவர் தளபதி அவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி கருணாநிதி அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்கட்சி தலைவர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

கேள்வி

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, வார்டு 53-ல் அடங்கிய சிதம்பரம் நகர் 5வது தெரு. போஜராஜ நகர் மற்றும் கீரைத்தோட்டம் ஆகிய பகுதிகளில் சாலை அமைக்கும் பணியை மேற்கண்ட ஒப்பந்ததாரர், அப்பணிகளை பாதியிலே நிறுத்தி விட்டு சென்று விட்டார். அதனால், அப்பகுதி மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். பாதியில் நிறுத்தப்பட்ட சாலை பணிகள் எப்போது முடித்து தரப்படும்?

மாண்புமிகு மேயர்

பதில்:

மண்டலம் –5, வார்டு–53ல் உள்ள சிதம்பரம் நகர் 5வது தெரு, போஜராஜ நகர் மற்றும் கீரைத்தோட்டம் ஆகிய தெருக்களில் Inter Locking Paver Blocks பதிக்கும் பணிக்காக திருவாளர் Kumar Builders ஒப்பந்ததாரருக்கு 20.05.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி வழங்கப்பட்டு பணி

நடைபெற்ற நிலையில் பொதுமக்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்ததால், ஒப்பந்ததாரர் பணியை தொடர்ந்து மேற்கொள்ளவில்லை.

ஒப்பந்ததாரர் தொடர்ந்து பணியை மேற்கொள்ள கடந்த 01.08.2025 மற்றும் 23.07.2026 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், இப்பணிகள் விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது.

திருமதி. ப. வேளாங்கண்ணி
துணை கேள்வி:

கார்படா சாலை உருது நடுநிலைப் பள்ளி

பள்ளி கட்டிடம்

- கார்படா சாலை பகுதியில் உருது நடுநிலைப் பள்ளி கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

வசதி குறைபாடுகள்

- பள்ளியில் மின்சாரம் இல்லை.
- கழிப்பிட வசதி இல்லை.

மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

- அடிப்படை வசதிகள் இல்லாததால் மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.

கோரிக்கை

- உடனடியாக மின்சாரம் மற்றும் கழிப்பிட வசதி ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நன்றி.

மாண்புமிகு மேயர்

நன்றி. அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு.கே.ஆர். கதிர்முருகன்அவர்கள், வார்டு எண் – 170.

திரு.கே.ஆர். கதிர்முருகன்

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, இணை ஆணையர் அவர்களே, சக மாமன்ற உறுப்பினர்களே அனைவருக்கும் வணக்கம்.

கேள்வி

170 வது வார்டுக்குட்பட்ட ஸ்ரீராம் நகர், பள்ளிப்பட்டு, களிக்குன்றம் ஆகிய இடங்களில் சுமார் 2000 குடும்பங்களுக்கு மேல் வசித்து வருகிறார்கள். இவர்களில் பள்ளிக்கு, கல்லூரிக்கு மற்றும் பணிக்கு செல்பவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தினமும் CLRI பேருந்து நிலையத்திற்கு செல்வதற்காக சர்தார் பட்டேல் சாலையை கடக்க வேண்டிய நிலை இருக்கிறது. அப்படி கடக்கும் நேரத்தில் அடிக்கடி சிறிய மற்றும் பெரிய விபத்துக்கள் ஏற்படுகிறது. இந்தச் சாலை நெடுஞ்சாலை துறையின் கீழ் உள்ளது. இந்தச் சாலைக்கு நடுவில் ஸ்ரீராம்நகர் நுழைவாயிலில் இருந்து எதிர்புறத்தில் உள்ள CLRI பேருந்து நிலையம் வரை இரும்பு நடை மேம்பாலம் அமைத்து கொடுத்தால் மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். இதனால் பல விபத்துகளை தடுப்பதோடு, மக்களும் பாதுகாப்பாக இருப்பார்கள். இதனை கருத்தில் கொண்டு நடை மேம்பாலம் அமைக்க ஆவண செய்ய வேண்டும்.

மாண்புமிகு மேயர்

பதில்:

மண்டலம்.13, வார்டு-170ல் மாமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ள சர்தார் பட்டேல் சாலை நெடுஞ்சாலை துறையை சார்ந்தது.

எனவே, மேற்கண்ட பொருள் தொடர்பாக கடந்த 24.07.2026 அன்று நெடுஞ்சாலை துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது. நெடுஞ்சாலைத்துறை துறையுடன் இணைந்து விரைவில் பணிகளை முடித்து தருமாறு இணை ஆணையர் (பணிகள்) அவர்களை கேட்டு கொள்கிறேன்.

திரு.கே.ஆர். கதிர்முருகன்

நெடுஞ்சாலைத்துறை மத்திய கைலாஷ் பகுதியில் புதிய பாலம் கட்டப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

தலைமை பொறியாளர் (நெடுஞ்சாலைத்துறை) அவர்களை நேற்றைய தினம் சந்தித்தோம். அவர், Proposal பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக வழங்கப்பட்டால், அது நெடுஞ்சாலைத்துறையின் நிதிநிலை அறிக்கையில் சேர்க்கப்படும் என தெரிவித்தார். இந்த வாய்ப்பை பயன்படுத்தி, தேவையான பரிந்துரைகளை செய்ய வேண்டும்.

மாண்புமிகு மேயர்

இது தொடர்பாக ஆணையர் அவர்களின் கவனத்திற்கு எடுத்து செல்லப்படும் என தெரிவித்து கொள்கிறேன்.

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. பரிதி இளம்சுருதி அவர்கள், வார்டு எண். 99.

திரு. பரிதி இளம்சுருதி

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களே, நிலைக்குழு தலைவர்கள், வார்டு குழு தலைவர்கள், சக மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

கேள்வி:

சாஸ்திரி நகர் மற்றும் புல்லாபுரம் பகுதிகளில் பொதுக் கழிப்பிடம் கட்டுமான பணி:

சாஸ்திரி நகர் மற்றும் புல்லாபுரம் பகுதிகளில் Head Office Contractor மூலம் மேற்கொள்ளப்படவிருந்த பொது கழிப்பிடம் கட்டுமான பணிகள் இதுவரை தொடங்கப்படாமல் உள்ளன.

எனவே, பணிகள் எப்போது தொடங்கப்படும்?

பணிகள் தாமதமாவதற்கான காரணம் என்ன?

பணிகள் எப்போது முழுமையாக நிறைவு செய்யப்படும்?

என்பதை தெளிவுபடுத்தி, விரைந்து பணிகளை தொடங்க நடவடிக்கை எடுக்குமாறு அன்புடன் கேட்டு கொள்கிறோம்.

மேற்கண்ட இரு மக்கள் நலப் பிரச்சினைகளுக்கும் விரிவான பதிலும், உரிய நடவடிக்கையும் எடுக்குமாறு பணிவன்புடன் கேட்டு கொள்கிறோம்.

மாண்புமிகு மேயர்

பதில்:

மண்டலம் 8. வார்டு 99ல் சிறப்பு திட்டங்கள் துறை மூலம் புல்லாபுரம் மற்றும் சாஸ்திரி நகர் ஆகிய பகுதிகளில், பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகளை கருத்தில் கொண்டு கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் (DBFOT) முறையில் தனியார் கூட்டமைப்பு நிறுவனத்துடன் ஒருகிங்ணைந்து புல்லாபுரம் (பெண்கள்), புல்லாபுரம் (ஆண்கள்) ஆகிய இடங்களில் ஏற்கனவே சிதிலமைடந்த கழிப்பறைகள் மண்டலம்–8ன் மூலம் இடிக்கப்பட்டு, மீண்டும் அதே இடத்தில் கழிப்பறை கட்டும் பணி முறையில் Mile Stone lll தொகுப்பில் எடுக்கப்பட்டுள்ளது. இப்பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது.

சாஸ்திரி நகர் பகுதியில் உள்ள காலி மனையில் புதிய கழிப்பறை கட்டுமான பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

மேற்படி மூன்று கழிப்பறை பணிகளும் ஆகஸ்ட் மாதம் முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும் என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது.

திரு. பரிதி இளம் சுருதி

ஒரு சிறிய திருத்தம். இது காலிமனை நிலம் அல்ல; Maintenance Contract மூலமாக பழைய கழிப்பிடம் இடிக்கப்பட்டது. Special Projects மூலமாக மண்டலம் 8ல் எந்த இடத்திலும் புதிய கழிப்பிடம் கட்டப்படவில்லை. தாத்தா இரட்டைமலை சீனிவாசன் சாலை, சாலைமா நகர், ஓட்டேரி பகுதியில் சிதிலமடைந்துள்ள பொது கழிப்பிடத்தையும் புதிதாக கட்டி தர வேண்டும்.

துணை கேள்வி

கடந்த மாத மாமன்ற கூட்டத்தில், தாத்தா இரட்டைமலை சீனிவாசன் சாலை, திடீர் நகர் பகுதியில் மாநகராட்சி மூலதன நிதியிலிருந்து இரண்டு பொது கழிப்பிடங்கள் கட்டுவதற்காக பூஜை நடைபெற்றது. சிலர் ஆதரித்தும், சிலர் எதிர்த்தும் இருந்த நிலையில், சமரசம் செய்து பணிகள் தொடங்கப்பட்டு, திறப்பு விழா நடைபெற்றது. அந்தத் திறப்பு விழாவிற்கு 8வது மண்டல வார்டுகுழு தலைவர் திரு. கூ.பி. ஜெயின் மற்றும் மாமன்ற உறுப்பினராகிய என்னையும் அழைக்கவில்லை. மாமன்ற உறுப்பினராக இருந்து தொடர்ந்து

வலியுறுத்தியும், மக்களுக்காக போராடியும், அந்தக் கழிப்பிடங்கள் கட்டப்பட்ட நிலையில், எங்களை அழைக்காததற்கான காரணம் தெரிய வேண்டும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

மாநகராட்சி பணிகள், கட்டிடங்கள் திறக்கும் போது சம்பந்தப்பட்ட வார்டின் மாமன்ற உறுப்பினர்களும், நிலைக்குழு தலைவர்களும், வார்டுகுழு தலைவர்களும் கண்டிப்பாக அழைக்கப்பட வேண்டும்.

மாண்புமிகு மேயர்

சம்பந்தப்பட்ட நிலைக்குழு தலைவர், வார்டுகுழு தலைவர் மற்றும் மாமன்ற உறுப்பினர் ஆகியோரை கண்டிப்பாக அழைக்க வேண்டும்.

திரு. கூ.பி. ஜெயின், வார்டுகுழு தலைவர், மண்டலம் – 8 (குறுக்கீடு)

மாண்புமிகு மேயர் அவர்களே, 102வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி கே. ராணி அவர்களது வார்டில் மோகன்வில்லா பூங்கா மேம்படுத்தும் பணிகள் நடைபெற்றன. ஆனால், அந்த மாமன்ற உறுப்பினருக்கும், தனக்கும் எந்தத் தகவலும் தெரிவிக்கப்படவில்லை.

மதிப்பிற்குரிய துணை மேயர்

தகுந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. பரிதி இளம் சுருதி

மத்திய வட்டார துணை ஆணையர் அவர்கள் நல்ல ஒத்துழைப்பினை நல்கி வருகிறார். காலை நேர கள ஆய்வுகளுக்கும் வருகிறார்.

2026–2027 ஆம் ஆண்டிற்கான மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி இதுவரை ஒதுக்கீடு செய்யப்படாததற்கான காரணம் தெரியவில்லை. விரைவாக நிதி விடுவிப்பு செய்தால், மாமன்ற

உறுப்பினர்கள் தங்கள் பணிக்காலத்தில் மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவேற்ற உதவும்.

மாண்புமிகு மேயர்

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி மாநகராட்சி Capital நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த நிதி விடுவிக்கப்படாதது குறித்து ஆணையர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. தற்பொழுது பணிகள் தொடங்கப்பட்டால், ஆறு மாத காலத்தில் திட்ட பணிகளை முடித்து திறந்து வைக்க ஏதுவாகும். இது தொடர்பாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயலர் அவர்களின் கவனத்திற்கும் எடுத்து செல்லப்படும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் மேற்கொள்ள வேண்டிய புதிய திட்டங்கள் இருந்தால், அதற்கான மதிப்பீடு தயாரித்து, வார்டு குழுவின் ஒப்புதல் பெற்று அனுப்ப வேண்டும். திட்ட மதிப்பீடுகளை தயாரித்து அனுப்பினால், நிதிநிலைக்கேற்ப ஒவ்வொன்றாக நிறைவேற்றி தரப்படும். மாநகராட்சியில் கடும் நிதி பற்றாக்குறை உள்ளது. அத்தியாவசிய தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். வார்டுகுழு கூட்டத்தின் ஒப்புதல் பெற்று, மதிப்பீடுகளை அனுப்ப வேண்டும். இது தொடர்பாக இணை ஆணையர் மற்றும் வட்டார துணை ஆணையர் மூலமாக மண்டல அலுவலர்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி. பா. யாழினி அவர்கள், வார்டு எண் 135.

திருமதி. பா. யாழினி

மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும், இங்கு அமர்ந்திருக்கும் மாமன்ற உறுப்பினர்கள், நிலைக்குழு தலைவர்கள்,

வார்டுகுழு தலைவர்கள் அனைவருக்கும் எனது காலை வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

கேள்வி:

மண்டலம்–10, வார்டு–135–ல் உள்ள 11வது நிழற்சாலையில் பாஷியம் கட்டுமான நிறுவனத்தால் 20 அடுக்குமாடி, சுமார் 250 குடியிருப்புகள் கொண்ட கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அந்தக் கட்டுமான இடத்தில் உள்ள மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட திறந்தவெளி நிலம் ஏன் இதுவரை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவில்லை.

OSR இடத்தின் முன்புறம் 11வது நிழற்சாலையில் உள்ள நுழைவாயில் 3 அடி மட்டுமே நுழைவாயில் வைக்கப்பட்டுள்ளது. கட்டுமானத்தின் உட்புறமாக பெரிய அளவில் Gate வைக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி உடனடியாக OSR நிலத்தினை கையகப்படுத்தி அதில் பூங்காவாக மேம்படுத்தி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும் என்கிற அப்பகுதி மக்களின் கோரிக்கையை மாநகராட்சி நிறைவேற்றி தருமா என கேட்டு கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

பதில்

மண்டலம்-10, கோட்டம்- 135ல் உள்ள அஷோக் நகர், 11-வது நிழற்சாலையில் பாஷ்யம் கட்டுமான நிறுவனத்தின் மூலம் புதியதாக கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்தில் ஆய்வு செய்ததில் 475.03 ச.மீ இடம் OSR இடமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திலிருந்து OSR ஒதுக்கீட்டிற்கான ஆவணங்கள் கிடைக்க பெற்றவுடன், மேற்படி OSR நிலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் எடுத்து கொள்ளப்பட்டு, மன்ற உறுப்பினர் கோரியபடி பூங்கா அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது.

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி. சுகன்யா செல்வம் அவர்கள், வார்டு எண் – 109.

திருமதி. சுகன்யா செல்வம்

திருக்குறள்

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு

விளக்கம்

நாடாளும் மன்னனுக்கு விரைவாக செயலை செய்தலும், அதனை அறியும் அறிவும், செய்யும் துணிவும் என்று மூன்று திறனும் நீங்காமல் இருக்க வேண்டும்.

மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும், என்னுடைய இனிய காலை வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

கேள்வி:

109 வது வார்டில் SILT CATCH PIT, CHUTE PIPE, சாலை பள்ளம் மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டி உள்ளது. இவைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி திறந்தவெளி ஒப்பந்தமாக உள்ளதால் எந்தப் பணிகளையும் செய்ய இயலாத நிலையில் உள்ளது. பராமரிப்பு பணிக்கான நிதி ரூபாய் பத்து இலட்சம் எப்போது அளிக்கப்படும். அதுவரையில் நாங்கள் மக்களிடம் என்ன பதில் கூற வேண்டும் என்கிற பதிலும் எங்களுக்கு அளிக்குமாறு கேட்டு கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

பதில்:

மண்டலம்-9, வார்டு 109ல் Silt Catch pit மற்றும் Chute pipe அமைக்க தூர்வாரும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி ஆணை வழங்கும் நிலையில் உள்ளது. பணி ஆணை வழங்கப்பட்டவுடன் விரைவில் துவங்கப்பட்டு பணிகள் முடிக்கப்படும்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்திலிருந்து மண்டலம்-9 பராமரிப்பு பணிகளுக்காக 34 கணக்கு தலைப்புகளில் 2026-2027ஆம் ஆண்டிற்கு ரூ.58.84 கோடி நிதி ஒதுக்கப்படுள்ளது.

23.07.2026 அன்று கணக்கின்படி, ரூ.10.81 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டு ரூ.48.03 கோடி மீதம் உள்ளது.

வார்டு ஒன்றிற்கு ரூ. 10.00 இலட்சம் நிதி என்பது சிறப்பினமாக வழங்குவது ஆகும். இந்நிதி வழங்குவது குறித்து பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது.

திருமதி. சுகன்யா செல்வம்

நன்றி தெரிவிப்பு

கடந்த நான்கரை ஆண்டுகளாக 109வது வார்டில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து பணிகளுக்கும் மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மரியாதைக்குரிய ஆணையர், வட்டார துணை ஆணையர் (மத்தியம்), மண்டலம்–9 அதிகாரிகள் அனைவருக்கும் எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், காலை உணவு திட்டத்தை "பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டம்" என பெயர் மாற்றம் செய்தமைக்கு எனது நன்றியினை என்னுடைய சார்பாகவும், இந்திய தேசிய காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாகவும் தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

நன்றி, அடுத்து மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி.K.அஸ்வினி கருணா அவர்கள், வார்டுஎண்196.

திருமதி.K.அஸ்வினி கருணா

மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களுக்கும், மாமன்ற கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்பித்து கொண்டிருக்கும் அனைத்து, நிலைக்குழு தலைவர்கள், வார்டுகுழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் மற்றும் ஊடக துறையினை சார்ந்த நண்பர்களுக்கும் எனது இனிய காலை வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

கேள்வி

196வது வார்டு மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட உள்ள அங்கன்வாடி மையம் தேவையின்றி

அன்னிய தலையீட்டால் செயல்படுத்த மாநகராட்சி முன் வரவில்லை. இதனை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் WP 1814/2025 என்னால் வழக்கு தொடரப்பட்டு தற்போது காவல்துறை பாதுகாப்புடன் உடனடியாக பணிகளை துவங்க உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இப்போதாவது மாநகராட்சி அங்கன்வாடி மையம் கட்ட துரித நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு மேயர்

பதில்:

மண்டலம்-15, வார்டு-196ல் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியிலிருந்து அங்கன்வாடி மையம் கட்டும் பணி மேற்கொள்ள ஆட்சேபனை இருந்ததை தொடர்ந்து, மன்ற உறுப்பினர் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு எண். W.P.crl No.1814/2025ற்கு 13.07.2026 நாளிட்ட தீர்ப்பின்படி, காவல்துறை பாதுகாப்புடன் அங்கன்வாடி மையம் கட்டுமான பணி துவங்க காவல் துறையின் பாதுகாப்பு அளிக்க கோரி T-15 கண்ணகி நகர் காவல் நிலையம் உதவி ஆணையர் (சட்டம் & ஒழுங்கு) அவர்களுக்கு 24.07.2026 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. காவல் துறையின் பாதுகாப்புடன் விரைவில் பணி துவங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்து கொள்ளப்படுகிறது.

திருமதி.K.அஸ்வினி கருணா

நன்றி.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. ர. ஜெய்சங்கர் அவர்கள், வார்டு எண்.17.

திரு. ர. ஜெய்சங்கர்

மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும் என்னுடைய காலை வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

கேள்வி:

கொசப்பூர் உட்பட்ட அம்பேத்கர் நகரில் இன்னும் 4 சாலைகள் அமைக்க வேண்டி உள்ளது. இதனை நான்கு ஆண்டுகளாக கேட்டு கொண்டு இருக்கிறேன். இதுவரை எந்த நடவடிக்கையும்

எடுக்கவில்லை. மற்றும் கொசப்பூர், பெரியார் நகர், அரியலூர் ஆகிய பகுதிகளில் சந்துகளிலும் சாலைகள் அமைக்க வேண்டி உள்ளன.

மாண்புமிகு மேயர்

பதில்:

மண்டலம்–2, வார்டு–17ல் உள்ள கொசப்பூர், அம்பேத்கர் நகரில், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மூலமாக பாதாள சாக்கடை கழிவுநீர் குழாய் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

அப்பணிகள் முடிவுற்றவுடன் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தால் பணிகள் நிறைவு சான்றிதழ் (Completion Certificate) வழங்கிய பின்னர் பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக சாலை வெட்டுகள் சீரமைக்கப்படும்.

மேலும், கொசப்பூர், பெரியார் நகர், அரியலூர் ஆகிய பகுதிகளில் உள்ள குறுகிய சாலைகளை அமைப்பதற்கு மதிப்பீடு தயார் செய்து உரிய நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஆதாரம் பெற்ற பின்னர், சாலைகள் அமைக்கப்படும் என்று தெரிவித்துகொள்ளப்படுகிறது.

துணை கேள்வி

வார்டு எண் 17, பெரியார் நகர் மற்றும் காந்தி நகர் பகுதிகளில் கால்வாய் பணிகள் நடைபெற்று கொண்டிருந்தது. தற்போது 90% பணிகள் முடிவடைந்துள்ளன; மீதமுள்ள 10% பணிகள் இன்னும் முடிக்கப்படவில்லை. பருவமழை நெருங்குவதால், துரிதமாக கால்வாய் பணிகளை முடிக்க வேண்டும்.

நன்றி தெரிவித்தல்

மாதவரம் மண்டலம் மற்றும் மணலி மண்டலத்தை இணைக்கும் சாலையாக 17, 23, 24 ஆவது வார்டுகளுக்கிடையில் புழல் ஏரி கால்வாய் செல்கிறது. கடந்த 50 ஆண்டுகளாக பருவமழைக் காலத்தில் மாதவரம் வழியாக செல்ல முடியாத நிலை இருந்தது. தற்போது நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இதற்காக மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மரியாதைக்குரிய ஆணையர் ஆகியோருக்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

திரு. த. சந்தியநாதன், மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.145 (குறுக்கீடு)

பெருநகர சென்னை மாநகராட்சியின் மாதாந்திர கூட்டத்திற்கு தலைமையேற்று நடத்தி கொண்டிருக்கும் மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களுக்கும், சக மாமன்ற உறுப்பினர்களுக்கும், பத்திரிகை மற்றும் ஊடக துறையினை சார்ந்த நண்பர்களுக்கும், 145 ஆவது வார்டு பொதுமக்களின் சார்பாக வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

கடந்த 4 ஆண்டுகளில் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி மூலம் பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. இந்த ஆண்டு நிதி விடுவிக்கப்படவில்லை. இந் நிதி வழங்கப்பட்டால் மக்களுக்கு பயனுள்ள திட்டங்களை செயல்படுத்துவோம். மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி மாமன்ற உறுப்பினர்களுக்கு இந்த ஆண்டு வழங்கப்படுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

நெற்குன்றம் பல்லவன் நகரில் அரசு பள்ளி, சத்துணவு கூடம் மற்றும் கழிப்பிடம் ஆகியவை சிறப்பாக கட்டி கொடுத்தமைக்காக 145வது வார்டு பொதுமக்களின் சார்பாக எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

திருமதி. உமா ஆனந்தன் (குறுக்கீடு)

தேர்தல் நடத்தை விதிமுறைகள் காரணமாக ஏப்ரல், மே மாதங்களில் நிதி பயன்படுத்த முடியவில்லை.

மாண்புமிகு மேயர்

ஒவ்வொரு ஆண்டும் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி வழங்கப்பட வேண்டும் என்பது சட்டம். இந்த ஆண்டு நிதி நெருக்கடி காரணமாக ஒரு மாதம் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. விரைவில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசு செயலர் அவர்களிடம் ஆலோசனை செய்து நிதி பெற்று தரப்படும் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

திரு. த. விஸ்வநாதன் (குறுக்கீடு)

திராவிட மாடல் ஆட்சியில் மாமன்ற உறுப்பினர் நிதி ஒழுங்காக பயன்படுத்த முடிந்தது. அதற்காக திரு. த. சத்தியநாதன் அவர்கள் நன்றி தெரிவிக்க வேண்டும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

ஏற்கனவே அ.இ.அ.தி.மு.க மாமன்ற உறுப்பினர் திரு. ர. ஜெய்சங்கர், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் மாமன்ற உறுப்பினர் திருமதி. சுகன்யா செல்வம், பாரதிய ஜனதா கட்சியின் மாமன்ற உறுப்பினர் திருமதி. உமா ஆனந்தன் ஆகியோர் நன்றி தெரிவித்துள்ளனர். கழக தலைவர் வழிகாட்டுதலின்படி திராவிட மாடல் ஆட்சி சிறப்பாக செயல்பட்டது என்று அவர்கள் பதிவு செய்துள்ளனர்.

மாண்புமிகு மேயர்

நன்றி. அடுத்து நேரமில்லா நேரம். திருமதி சர்பஜெயாதாஸ், தலைவர், நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) அவர்கள் / மாமன்ற உறுப்பினர், வார்டு எண் 44.

திருமதி சர்பஜெயாதாஸ்

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, பத்திரிகை மற்றும் ஊடக துறையினை சார்ந்த நண்பர்களே – உங்கள் அனைவருக்கும் என் வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் பொற்கால ஆட்சியில், கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம், மகளிர் விடியல் பயண திட்டம், காலை உணவு திட்டம், தாயுமானவர் திட்டம், புதுமை பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம் போன்ற மக்கள் நல திட்டங்களின் மூலம் தமிழ்நாடு அனைத்து துறைகளிலும் பல்வேறு முன்னேற்றங்களை அடைந்தது. இத்திட்டங்கள் தொடரும் வரை மாண்புமிகு ஸ்டாலின் அவர்களின் பெயர் என்றும் ஒலித்து கொண்டே இருக்கும் என்பதை பெருமையுடன் தெரிவித்து கொள்கிறேன்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் கழகம் பொறுப்பேற்று கடந்த நான்கு ஆண்டுகளில் பல்வேறு அடிப்படை வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, 44வது வார்டில்:

- சாலை பணிகள்
- மழைநீர் வடிகால்வாய் பணிகள்
- தெருவிளக்குகள் அமைத்தல்

- பூங்கா மற்றும் விளையாட்டு திடல் அமைத்தல்
- அங்கன்வாடி கட்டிட பணிகள்
- நியாய விலை கடைகள்
- நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையம் மற்றும் Health and Wellness Center அமைத்தல்

மேலும், பிறவி குறைபாடுகள், மனவளர்ச்சி குறைபாடுகள், கற்றல் தாமதங்கள் ஆகியவற்றை ஆரம்பத்திலேயே கண்டறிந்து, குழந்தைகளுக்கு முறையான பயிற்சிகள் வழங்குவதற்காக *Sensory Therapy Park with Early Intervention Center* அமைக்கப்பட்டுள்ளது.

அதே போல், காமராஜர் தெருவில் பழைய பள்ளி கட்டிடம் இடிக்கப்பட்டு, புதியதாக *சிங்கார சென்னை 2.2* திட்டத்தின் மூலம் ரூ. 4.5 கோடி மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறேன்.

மேலும், பெண்களுக்கான பிரத்தியேக உடற்பயிற்சி கூடம் (*She Gym*) கட்டப்பட்டு, இதன் மூலம் பெண்கள் பெருமளவில் பயனடைந்து வருகின்றனர்.

இவ்வாறு திராவிட மாடல் ஆட்சியில் பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை இம்மாமன்றத்தில் பெருமையுடன் தெரிவித்து கொள்கிறேன்.
இத்துடன், சில கோரிக்கைகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன்.

கடந்த காலங்களில் பெருநகர சென்னை மாநகராட்சியில் ஒவ்வொரு வார்டுக்கும் பராமரிப்பு பணிக்காக ரூ. 10.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. தற்போது அந்த நிதி மீண்டும் வழங்க வேண்டும். தினந்தோறும் பல்வேறு பிரச்சனைகளை நாங்கள் சமாளிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, இரண்டு வாரங்களுக்கு முன்பு 44வது வார்டில் உள்ள *அம்மா உணவகத்தில்* மோட்டார் பழுது ஏற்பட்டது. அப்போது என் சொந்த செலவில், வார்டு உதவி பொறியாளர் மூலமாக அந்த மோட்டார் பழுது சரி செய்யப்பட்டது. ஆய்விற்கு செல்லும் போது காணப்படும் சிறு குறைகளையும் நம்மால் சரி செய்ய முடியாத நிலை உள்ளது. எனவே, இந்த நிதியை உடனடியாக விடுவிக்குமாறு பணிவுடன் கேட்டு கொள்கிறேன்.

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

தாங்கள் தான் நிதிநிலைகுழு தலைவர்.

திருமதி சர்பஜெயாதாஸ்

நான் *Proposal* தான் அளிக்க முடியும். மாண்புமிகு மேயர் அவர்கள் தான் அனுமதி *வழங்க வேண்டும்.*

BOV வாகன ஓட்டுநர்களுக்கு முறையான பயிற்சி அளிக்க வேண்டும். சில விபத்துக்கள் நடைபெற்று, காவல் துறையினர் விசாரணை மேற்கொள்ளுகின்ற போது *License* கேட்கிறார்கள். ஆனால், *BOV* வாகன ஓட்டுநர்களிடம் உரிமம் இல்லாததால், வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றன. மேலும், பயிற்சி இல்லாத காரணத்தால், *Rash Driving* செய்கிறார்கள் என்று மக்களிடமிருந்து புகார்கள் வருகின்றன. குறிப்பிட்ட நபர்கள் மட்டுமே இந்த வாகனங்களை ஓட்டுவதால், அவர்கள் விடுப்பு எடுத்தால் வாகனங்கள் *Stationed* ஆக நிற்கின்றன. எனவே, *BOV* வாகனங்களை முறையாக ஓட்டுவதற்கான பயிற்சி மற்றும் உரிமம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு கொள்கிறேன்.

மேலும், 44வது வார்டு, *வட சென்னை வளர்ச்சி திட்டத்தின்* கீழ் 15–க்கும் மேற்பட்ட சாலைகளில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மூலம் குடிநீர் மற்றும் கழிவு நீர் குழாய்கள் மாற்றியமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. சில சாலைகளில் பணி முடிவடைந்தும் தடையின்மை சான்றிதழ் வழங்கப்படாத காரணத்தினால், சாலை சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள இயலவில்லை. எனவே, பணி முடிக்கப்பட்டுள்ள அனைத்து சாலைகளுக்கும் தடையின்மை சான்றிதழ் உடனடியாக வழங்கப்பட வேண்டும். மேலும், *First Phase* பணி முடிந்த பின்னரே *Second Phase* பணி துவங்கப்பட வேண்டும். ஒரே நேரத்தில் எல்லா சாலைகளும் தோண்டப்பட்டால் மக்களுக்கு சிரமம் ஏற்படும்.

மேற்படி 44வது வார்டில் உள்ள பெரியார் நகர் மேற்கு பகுதியில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு சொந்தமான இடத்தில் குடியிருக்கும் சுமார் 500 குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகள் வழங்கப்படவில்லை. எனவே, அப்பகுதி மக்களுக்கு மேல்முறை *Committee Resolution* வரும் வரை, *Conditional Electricity* வழங்க

அரசுக்கு பரிந்துரை செய்யுமாறு பணிவுடன் கேட்டு கொள்கிறேன். அவர்களுக்கு அடிப்படை வசதிகளான குடிநீர் மற்றும் கழிவுநீர் வசதிகளும் இல்லை. இருந்தாலும், அவர்கள் சமாளித்து வாழ்ந்து வருகிறார்கள். எனவே, *Electricity, Conditional connection* வழங்கப்பட வேண்டும். *Solar Panel* மூலம் தற்பொழுது மேலாண்மை செய்து வருகிறார்கள்.

மாண்புமிகு மேயர்

எத்தனை வீடுகள் உள்ளன?

இணை ஆணையர் (சுகாதாரம்)

Electricity, Conditional Connection வழங்கப்படுகிறது.

திருமதி சர்பஜெயாதாஸ்

அதற்காக ஒரு குழு உள்ளதாக தெரிவிக்கிறார்கள்.

இணை ஆணையர் (சுகாதாரம்)

இதற்கான High Level Committee தலைமை செயலர் அவர்களின் தலைமையில் உள்ளது.

திருமதி சர்பஜெயாதாஸ்

Solar Panel மூலம் சமாளித்து வருகிறார்கள். ஆனால், மழைக்காலங்களில் *Solar Panel* சரியாக *Charge* செய்ய முடியாததால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, *Electricity, Conditional connection* வழங்கப்பட வேண்டும்.

மாண்புமிகு மேயர்

இது குறித்து TANGEDCO துறையினருடன் ஆலோசிக்கப்படும்.

திருமதி சர்பஜெயாதாஸ்

எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

மரியாதைக்குரிய பொது சுகாதார நிலைக்குழு தலைவர் டாக்டர். திருமதி. கோ. சாந்தகுமாரி அவர்கள், மாமன்ற உறுப்பினர், வார்டு எண் 81.

டாக்டர். திருமதி. கோ. சாந்தகுமாரி

நேற்றும், இன்றும், என்றும் தமிழ் மொழியின் சிறப்பையும், தமிழ்நாட்டின் உரிமையையும், தமிழ் மக்களின் நலனையும் தன் மூச்சாக கொண்டு, திராவிட மாடல் ஆட்சியின் வழியாக அனைத்து துறைகளிலும் எண்ணற்ற சாதனைகள் படைத்த எங்கள் கழக தலைவர், மாண்புமிகு முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களை வணங்குகிறேன்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்றத்தை சீரும் சிறப்புமாக வழிநடத்தி வரும் மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பளித்த ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, நியமனக்குழு உறுப்பினர்களே, மாமன்ற உறுப்பினர்களே, அதிகாரிகளே, ஊடக துறையினை சார்ந்த நண்பர்களே உங்கள் அனைவருக்கும் எனது காலை வணக்கத்தினை தெரிவித்து கொண்டு என் உரையை தொடங்குகிறேன்.

மருத்துவ சேவைகள் துறை மற்றும் பொது சுகாதார துறைகளில் கீழ்க்கண்ட காலி பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

- மண்டல மருத்துவ அலுவலர் காலி பணியிடம் – 7
- மருத்துவ அலுவலர்கள் காலிப் பணியிடம் – 108
- மகப்பேறு மருத்துவர் (Gynaecologist) – 8

- மயக்கவியல் நிபுணர் (Anaesthetist) – 29

  காலிப்பணியிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாததால் சேவையின் தரம் பாதிப்படைந்துள்ளது. விரைவில் பணியிடங்களை நிரப்ப வேண்டும்.

வார்டு 81 மற்றும் 85 இணைக்கும் இரயில்வே சுரங்கப்பாதை

2024 நவம்பர் மாதத்தில் பணி ஆணை வழங்கப்பட்டது. 20 மாதங்கள் கடந்தும் பணி நிறைவு பெறவில்லை. மாணவர்கள், பொதுமக்கள், முதியவர்கள், வாகன ஓட்டிகள் கடும் சிரமம் அடைந்து வருகின்றனர். மழைக்காலம் தொடங்குவதற்கு முன் பணிகளை முடிக்க வேண்டும்.

மாண்புமிகு மேயர்

வட்டார துணை ஆணையர் அவர்கள் ஆய்வு செய்து மழைக்காலத்திற்கு முன்பாக பணிகளை முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

T.I. Bridge நடைபாதை:

T.I. Bridge பாலப்பகுதியில் சாலை விரிவாக்க பணி நடைபெற்று வருகிறது. நடைபாதை வசதி இல்லாததால் பொதுமக்கள் சிரமம் அடைந்து வருகின்றனர். தற்காலிக நடைபாதை அமைத்து தர வேண்டும்.

மண்டலம் 4, 7 மற்றும் 8-ல் BOV வாகனங்கள் பற்றாக்குறை

நீண்ட காலமாக **BOV** வாகனங்கள் இல்லாததால் தூய்மை பணியாளர்கள் சிரமம் அடைந்து வருகின்றனர். நிலைக்குழு கூட்டத்தில் இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் கவனத்திற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளன. விரைவில் தீர்வு காண வேண்டும்.

சோழம்பேடு சாலை ஆக்கிரமிப்பு (Ward-81)

ஓராண்டு காலமாக தனியரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. வட்டாட்சியர் அவர்கள் ஆய்வு செய்து Public Road என அறிக்கை அளித்துள்ளார். வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. வழக்கினை விரைந்து முடித்து ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும். அகற்றப்பட்ட இடத்தில் மக்கள் பயன்பாட்டு திட்ட கட்டிடம் அமைத்து தர வேண்டும்.

சக்திமான் இயந்திரம் சரிவர வேலை செய்வது கிடையாது. 3 மணி நேரம் கூட வேலை செய்யாமல், 50% மட்டுமே பணி மேற்கொள்கிறது. 50 சதவிகிதம் ஓய்வு என்று சொல்லி தொழிலாளர்கள் சென்று விடுகிறார்கள். நிர்ணயிக்கப்பட்ட 8 மணி நேர பணிநேரம் பின்பற்றப்படுவது கிடையாது. இந்த இயந்திரத்தை இயக்கும் பணியாளர்கள் சரிவர வேலை செய்ய தகுந்த அறிவுறுத்தல்கள் வழங்க வேண்டும்.

முன்பு *Empanelled Bulk Waste Service Providers* சிலர், சில இடங்களில் சட்டவிரோதமாக (Illegal Dumping) குப்பைகளை கொட்டியதாக புகார்கள் வந்தன. இதனை தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சி, **Urbaser & Ramky** நிறுவனங்களுக்கு பெரும் தொகையை வழங்கி, Bulk Waste–களை எடுப்பதற்கு அனுமதி அளித்தது. ஆனால், அவர்கள் கூட முறையாக கையாளவில்லை என புதிய புகார்கள் வந்த வண்ணம் உள்ளன.

மதிப்பிற்குரிய துணை மேயர்

புகார்கள் காரணமாக அந்த நடைமுறை ரத்து செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே இருந்த நடைமுறைகள் தொடரும்.

டாக்டர் திருமதி கோ. சாந்தகுமாரி

பெருநகர சென்னை மாநகராட்சி, *Empanelled Bulk Waste Service Providers*–களிடமிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையை பெற்று, மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள குப்பை கிடங்குகளில் கொட்டுவதற்கு அனுமதி வழங்கலாம். இதன் மூலம் மாநகராட்சிக்கு

கூடுதல் வருவாய் கிடைக்கும். மேலும், Urbaser & Ramky நிறுவனங்களுக்கு வழங்கப்படும் தொகையை கணிசமான அளவில் குறைக்க முடியும்.

Urbaser & Ramky நிறுவனங்களால் வழங்கப்படும் Disposal of Unsegregated Waste / Segregated Waste விவரங்கள், அதற்கான Challan விவரங்களுடன் வழங்கப்பட வேண்டும்.

டாக்டர். திருமதி. கோ. சாந்தகுமாரி

கோயம்பேடு மார்க்கெட் கழிவு பிரிப்பு:

கோயம்பேடு மார்க்கெட்டில், **சீனிவாசா Waste Management** நிறுவனம் திடக்கழிவு மேலாண்மை பணியை மேற்கொண்டு வந்தாலும், பிரிப்பு அளவு மிகவும் குறைவாக உள்ளது. ஆய்வின் போது 200 டன் குப்பைகளில், 20 டன் மட்டுமே பிரித்து வழங்கப்படுவது தெரிய வந்தது. **காய்கறி மற்றும் பழக் கழிவுகளை அப்பகுதியிலேயே பிரித்து வழங்கும் நடைமுறையை** மாநகராட்சி கட்டாயப்படுத்த வேண்டும். KDG கிடங்கில் ஈரக் கழிவுகள் தேங்குவதால் சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது.

மதிப்பிற்குரிய துணை மேயர்

மாமன்ற உறுப்பினரின் கருத்துக்களை அடிப்படையாக கொண்டு, கண்காணிப்பு குழு அமைத்து கண்காணிக்க வேண்டும். கண்காணிப்பு குறைபாடுகள் காரணமாக, குப்பை அளவீடு மற்றும் பில்லிங் (billing) தொடர்பான தவறான தகவல்கள் வழங்கப்படுவது குறித்து புகார்கள் அதிக அளவில் வருகின்றன. எனவே, கண்காணிப்பு குழு மூலம் நெறிப்படுத்தல் அவசியம்.

டாக்டர். திருமதி. கோ. சாந்தகுமாரி

எனது அனைத்து கோரிக்கைகளையும் கேட்டறிந்த மாண்புமிகு மேயர் அவர்களையும், மதிப்பிற்குரிய துணை மேயர், ஆணையர் உள்ளிட்ட அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். மேலும், எனக்கு பேசுவதற்கு வாய்ப்பளித்த ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கும் என் நன்றியை தெரிவித்து கொண்டு, உரையை நிறைவு செய்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. நே. சிற்றரசு, தலைவர், நிலைக்குழு (பணிகள்) (குறுக்கீடு)

மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், இணை ஆணையர் (சுகாதாரம்), ஆளுங்கட்சி தலைவர், நிலைக்குழு தலைவர்கள், வார்டுகுழு தலைவர்கள், நியமனக்குழு உறுப்பினர்கள் மற்றும் சக மாமன்ற உறுப்பினர்களுக்கு எனது காலை வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

நிதி பற்றாக்குறை

பெருநகர சென்னை மாநகராட்சியில் நிதி பற்றாக்குறை காரணமாக திட்டங்கள் நிறைவேற்ற முடியாமல் உள்ளது. கடந்த திராவிட முன்னேற்ற கழக ஆட்சியில், மாமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள் 60 நாட்களுக்குள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு செயல்படுத்தப்பட்டது.

மழைக்கால நிதி ஒதுக்கீடு

உலகளாவிய **Climate Change** காரணமாக இந்த ஆண்டு அதிக அளவில் மழைப்பொழிவு இருக்கும் என வானிலை அறிக்கைகள் தெரிவிக்கின்றன. மழைக்கால தூர்வாரும் பணிகளுக்கான நிதி ஒதுக்கீடு குறைவாக உள்ளது. தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி அளவு, பணிகளின் பரப்பளவுக்கும் தேவைக்கும் போதுமானதாக இல்லை. பெரிய வார்டுகளில் பேருந்து சாலைகள், உட்புற சாலைகள், மற்றும் அதிகமான **மழைநீர் வடிகால்வாய்கள்** உள்ளன. மழைக்கால பணிகள் தடையின்றி நடைபெற இவ்வாறான பகுதிகளுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

Desilting பணிகள் குறித்த கோரிக்கை

Silt Catch Pit சுத்தம் செய்யப்பட்டாலும், உட்புற மழைநீர் வடிகால்வாய்கள் முறையாக Desilting செய்யப்பட வேண்டும். அனுபவமில்லாத ஒப்பந்ததார்கள் தற்பொழுது Desilting பணிகளை எடுத்துள்ளனர். **PMC (Project Management Consultancy)** மூலம் Desilting பணிகளை கண்காணிக்க குழு அமைக்க வேண்டும்.
மாமன்ற உறுப்பினர்கள் வார்டு மேம்பாட்டு நிதி வழங்கப்பட வேண்டும்.

முன்னாள் முதலமைச்சர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆட்சி காலத்தில் உள்ளாட்சிக்கென சிறப்பு நிதி

வழங்கப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி உலகின் முன்னணி மாநகராட்சியாக வளர்ந்தது என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

வார்டு பராமரிப்பு நிதி வழங்க வேண்டும்.

பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி வணக்கம்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய வார்டுகுழு தலைவர், மண்டலம்–11, திரு. வே. ராஜன் அவர்கள், மாமன்ற உறுப்பினர் வார்டு எண் 143.

திரு.வே. ராஜன்

மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மரியாதைக்குரிய ஆணையர், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள் மற்றும் வருகை புரிந்துள்ள அதிகாரிகள், ஆளுங்கட்சி தலைவர், நிலைக்குழு தலைவர்கள், வார்டுகுழு தலைவர்கள் மற்றும் அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் காலை வணக்கம்.

அனைத்து அதிகாரிகளும் மாமன்ற கூட்டத்தில் பங்கேற்க வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

அனைத்து அதிகாரிகளும் மாமன்ற கூட்டத்தில் பங்கேற்க வேண்டும்.

மாண்புமிகு மேயர்

அனைத்து அதிகாரிகளும் மன்றக் கூட்டம் மற்றும் வார்டுகுழு கூட்டங்களில் பங்கேற்க வேண்டும்.

திரு.வே. ராஜன்

அதிகாரிகள் அனைவரும் மாமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டும். தமிழ்நாட்டில் மாணவ, மாணவியர்கள் போட்டி தேர்வுகளில் பங்கேற்கும் வகையில் முன்னாள் முதலமைச்சர்

அவர்களால் 2022–ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட "நான் முதல்வன் திட்டம்" மாநில அரசின் முக்கிய திறன் மேம்பாட்டு மற்றும் தொழில் வழிகாட்டும் திட்டமாகும் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி தொடர்பாக, பெருநகர சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து உடனடியாக நிதி விடுவிக்கப்பட்டு, பணிகளுக்கான ஒப்புதல் வார்டுகுழுவில் சமர்ப்பிக்கப்பட்டு, உரிய ஒப்புதல் வழங்கப்பட வேண்டும். ஒப்புதல் வழங்கப்பட்டவுடன், பணிகள் துவங்கப்பட வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

திரு.வே. ராஜன்

ஆய்வு கூட்டங்களை குறைத்து, கள ஆய்வுகளில் அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

அதிகாரிகள், காலை நேரங்களை தவிர்த்து, மாலை நேரங்களில் ஆய்வு கூட்டங்கள் நடத்த வேண்டும்.

திரு.வே. ராஜன்

152 ஆவது வார்டில் சமுதாய நல கூடம் கட்டுவதற்கான பூமி பூஜை நடைபெற்றது. பணிகள் துவங்குவதற்கு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கூவம் ஆற்றின் 144, 145, 146–வது வார்டுகளில் நீர்வள துறையினரால் சுற்றுச்சுவர் அமைக்கப்படாததால், கள ஆய்வு மேற்கொண்டு தடுப்பு சுவர் அமைத்து தர வேண்டும்.

மதுரவாயல் பகுதியில் 144, 146, 147–வது வார்டுகளில் மின் மயானம் இல்லை. உடனடியாக அமைத்து தர வேண்டும்.

144–வது வார்டு M.M.D.A. பகுதியில் உள்ள 19 வகுப்பறைகள் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளி, 8–ஆம் வகுப்பில் 80 மாணவர்கள் பயின்று வருவதால், இப்பள்ளியினை பெண்களுக்கான உயர்நிலை பள்ளியாக தரம் உயர்த்தி தர வேண்டும். அதற்கான மக்கள் பங்கு தொகையை நானும், 144–வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.ஏ. ஸ்டாலின் அவர்களும் செலுத்துவதற்கு தயாராக உள்ளோம் என்பதனை தெரிவித்து கொள்கிறேன்.

11வது மண்டலத்தில் உள்ள 12 சென்னை பள்ளிகளை ஆய்வு செய்ய உதவி கல்வி அலுவலர்களுக்கு மண்டல அலுவலகத்தில் அறை ஒதுக்கி அவர்கள் அங்கு பணியாற்ற வழிவகை செய்ய வேண்டும். இவற்றை அனைத்து மண்டலங்களிலும் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு மேயர்

இது தொடர்பாக உத்தரவுகள் வழங்கப்பட்டுள்ளன. ஒரு சில மண்டலங்களில் இட பற்றாக்குறை உள்ளது. தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு.வே. ராஜன்

நன்றி. சொத்து வரி பெயர் மாற்றம் மண்டலங்களில் மேற்கொள்ளப்படுகிறது. ஆனால், முகவரி திருத்தத்திற்கு தலைமையகம் வர வேண்டியதாகி உள்ளது. எனவே, முகவரி மாற்றம் செய்யும் பணியையும் மண்டல அளவிலேயே மேற்கொள்ள வழி வகை செய்ய வேண்டும்.

மாண்புமிகு மேயர்

தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு.வே. ராஜன்

வார்டு குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

Vending Zone / Non Vending Zone தொடர்பாக கூடுதல் சாலைகளுக்கு அனுமதி அளித்தால், அவை வார்டு குழு தீர்மானத்தின் அடிப்படையிலேயே அனுமதி வழங்கப்பட வேண்டும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

வார்டுகுழுவில் பொருள் சமர்ப்பிக்கப்பட்டு வார்டுகுழுவின் கருத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு முன்னர் முடிவு செய்யப்பட்ட இனங்களிலும் வார்டு குழு ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

மாண்புமிகு மேயர்

வார்டுகுழுவில் பொருள் சமர்ப்பிக்கப்பட்டு வார்டுகுழுவின் கருத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். தற்போதைய குழுவை ரத்து செய்து புதிய குழு அமைக்கப்பட வேண்டும்.

திரு.வே. ராஜன்

வார்டுகுழுவில் பொருள் சமர்ப்பிக்கப்பட்டு வார்டுகுழுவின் கருத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்ததாக, மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி பணிகளுக்கான Proposals கொடுத்துள்ளோம். விரைந்து தகுந்த நடவடிக்கை எடுக்க வேணடும்.

மாண்புமிகு மேயர்

இது அரசின் கவனத்திற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளன.

மதிப்பிற்குரிய துணை மேயர்

இது மாநகராட்சியின் மூலதான நிதியிலிருந்து இந்தத் தொகையினை விடுவித்து, மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

திரு. மு. தனியரசு (குறுக்கீடு)

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி தொடர்பாக, பணிகளுக்கான ஒப்புதல் **வார்டுகுழுவில் சமர்ப்பிக்கப்பட்டு**, உரிய ஒப்புதல் வழங்கப்பட வேண்டும். ஒப்புதல் வழங்கப்பட்டவுடன், பெருநகர சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து **உடனடியாக இதற்குண்டான நிதி**

விடுவிக்கப்பட்டு, பணிகள் துவங்கப்பட வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

திரு. வே. ராஜன்

மாநகராட்சியால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணியாணை வழங்கப்பட்ட பணிகளை ரத்து செய்ய கூடாது. அதிகாரிகள், மாமன்ற உறுப்பினர்களோடு இணைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு மேயர்

அதிகாரிகள், மாமன்ற உறுப்பினர்களோடு இணைந்து பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

திரு. வே. ராஜன்

பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய வார்டுகுழு தலைவர், மண்டலம் - 10 திரு.எம்.கிருஷ்ணமூர்த்தி, அவர்கள், வார்டு எண்.142.

திரு.எம்.கிருஷ்ணமூர்த்தி

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய இணை ஆணையர் அவர்களே, ஆளுங்கட்சி தலைவர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, நியமனக்குழு உறுப்பினர்களே, அனைத்து மாமன்ற உறுப்பினர்களே உங்கள் அனைவருக்கும் 10வது மண்டல வார்டுகுழு சார்பாக நன்றியுடன் கூடிய வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் நல்லாட்சி வழிகாட்டுதலோடு கடந்த நான்கரை ஆண்டுகளில் பெருநகர சென்னை மாநகராட்சியில் பல்வேறு திட்டப் பணிகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. மாநகர மக்களின் தேவைகள் நிறைவேற்றப்பட்டு, நகர வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைந்தன.

மண்டலம் 10 – சைதாப்பேட்டை தொகுதி (வார்டுகள் 139, 140, 142) எண்ணற்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக, சைதாப்பேட்டை ஜீனீஸ் சாலையில் உள்ள மகப்பேறு மருத்துவமனை ரூ. 9.00 கோடி செலவில் கட்டுமான பணி நடைபெற்று வருகிறது. பணிகள் மெதுவாக நடைபெறுவதால், விரைவுபடுத்தி முடிக்க வேண்டுமென கேட்டு கொள்கிறேன்.

சைதாப்பேட்டை காய்கறி அங்காடி – ரூ. 23 கோடி நிதி ஒதுக்கீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன. கடந்த 80 நாட்களாக பணி மெதுவாக நடைபெற்று வருகிறது. பணி விரைவுபடுத்தப்பட வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

சைதாப்பேட்டை ஜோன்ஸ் சாலை – சென்னை துவக்கப்பள்ளி

சிறப்பு திட்டங்கள் துறை மூலம் ரூ. 7.00 கோடி செலவில் பணி நடைபெற்று வருகிறது. பணி தொய்வடைந்து ஆமை வேகத்தில் நடைபெற்று வருகிறது. பணி விரைவுபடுத்தப்பட வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

மழைநீர்வடிகால்வாய் – சைதாப்பேட்டை 142வது வார்டு பஜார் சாலை

அண்ணாசாலையிலிருந்து வரும் மழைநீரினால், பஜார் சாலை வெள்ளக்காடாகும் நிலை ஏற்படுகிறது. மழைநீர், குயவர் சாலை வழியாக ஜோன்ஸ் சாலை சென்று மாம்பலம் கால்வாயில் கலக்கும் வகையில் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. நிதி இல்லாத காரணத்தால் பணி நிறுத்தப்பட்டுள்ளது. நிதி வழங்கப்பட வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

ஜாபர்கான்பேட்டை R.V. நகர் – சென்னை உயர்நிலைப்பள்ளி

19 வகுப்பறைகள் கொண்ட புதிய பள்ளி கட்டிடம் ரூ. 8.00 கோடி செலவில் கட்டப்பட்டு வருகிறது. பணியை விரைந்து முடிக்க வேண்டும்.

ஜாபர்கான்பேட்டை சமூக நலக் கூடம்

139வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. ப. சுப்பிரமணி அவர்களின் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி மற்றும் மூலதன நிதி மூலம் ரூ. 93.00 இலட்சம் செலவில் பணி நடைபெற்று வருகிறது. பணி தொய்வடைந்த நிலையில் இருப்பதால், பணியினை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

ராகவன் காலனி – பொது சுகாதார துறை மருந்து கிடங்கு

ரூ. 1.78 கோடி செலவில் கட்டுமான பணி நடைபெற்று வருகிறது. பணி தொய்வடைந்த நிலையில் இருக்கின்ற காரணத்தினால், பணியினை விரைவுபடுத்த வேண்டுமென கேட்டு கொள்கிறேன்.

140வது வார்டு – கலையரங்கம்

ரூ. 5 கோடி மதிப்பீட்டில் கலையரங்கம் கட்டப்பட்டு வருகிறது. இக் கலையரங்கத்தினை பள்ளி வகுப்பறைகளாக மாற்ற உத்தரவு பிறப்பித்திருப்பதாக தெரிய வருகிறது. சென்னை ஆண்கள் பள்ளியில் வகுப்பறைகள் உள்ளதால், இவை கலையரங்கமாகவே கட்டி தர வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

இது தொடர்பாக வட்டார துணை ஆணையர் அவர்கள் ஆய்வு செய்ய வேண்டும். புதிய திட்டங்களுக்கு புதிய மதிப்பீடுகள் தயாரித்து பணி ஆணைகள் வழங்கலாம். நடைபெற்று வரும் பணிகளை வேறு பயன்பாட்டிற்கு மாற்ற கூடாது என்று கேட்டு கொள்கிறேன்.

திரு.எம்.கிருஷ்ணமூர்த்தி

கோவிந்தன் சாலை – ஆரம்ப சுகாதார நிலையம்

ரூ. 1.2 கோடி மூலதன நிதி மற்றும் முன்னாள் அமைச்சர் மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 1 கோடி 73 லட்சம் செலவில் கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது. பணி முடிவடையும் தருவாயில் இருப்பதால், மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டு திறப்பு விழா செய்து மக்கள் பயன்பாட்டிற்கு வழங்க வேண்டும்.

140வது வார்டு – கோதண்டராமர் கோயில் தெரு

ரூ. 8.45 கோடி மதிப்பீட்டில் 18 படுக்கைகள் கொண்ட மகப்பேறு மருத்துவமனை கட்டப்பட்டு வருகிறது. பணி தொய்வடைந்த நிலையில் இருக்கின்ற காரணத்தினால், பணியினை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திராவிட மாடல் அரசின் வழிகாட்டுதலுடன், முன்னாள் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலுடன், முன்னாள் அமைச்சர் மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன் அவர்களின் கோரிக்கைகள், மாமன்ற உறுப்பினர்கள் முன் வைத்த கோரிக்கைகள், சைதாப்பேட்டை பகுதிக்கு பல்வேறு திட்டங்களை செயல்படுத்திட திட்டம் தீட்டப்பட்டு அவை நிறைவேற்றப்பட்டுள்ளன. இதற்காக ஆணையர், வட்டார துணை ஆணையர், மண்டல அலுவலர், உதவி செயற் பொறியாளர்கள் ஆகியோருக்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

கடந்த நான்கரை ஆண்டுகளில் மாநகராட்சி அதிக நிதி வழங்கி, சிறப்பான மாநகராட்சியாக திகழ்ந்தது.

அம்மா பூங்கா – 140வது வார்டு, கோடம்பாக்கம் சாலை

33 கிரவுண்ட் நிலம் மீட்கப்பட்டு, பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் ஆண்கள் பள்ளிக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. அதில் ஒரு பகுதி "அம்மா பூங்கா" என மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்டு, மக்கள் பயன்படுத்தி வந்தனர். சென்னை பெருநகர வளர்ச்சி குழும நிதியிலிருந்து ரூ. 2.90 கோடி மதிப்பீட்டில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, எழிலார்ந்த பூங்காவாக உருவானது. பணிகள் முடிவுற்று 3 மாத காலமாக மூடி வைக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் மற்றும் CMDA

அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர் மக்கள் பயன்பாட்டிற்காக விரைந்து திறக்க வேண்டுமென அன்புடன் கேட்டு கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

மாண்புமிகு மேயர் அவர்கள் ஒரு நாளை தெரிவு செய்து, பூங்காவை திறக்க வேண்டுமென கேட்டு கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

வரும் வாரத்தில் ஒரு நாள் தெரிவு செய்து திறப்பு விழா நடத்தப்படும்.

திரு. எம். கிருஷ்ணமூர்த்தி

பேச வாய்ப்பளித்த ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, திரு. த. விஸ்வநாதன், தலைவர், நிலைக்குழு (கல்வி) / மாமன்ற உறுப்பினர், வார்டு எண்.181.

திரு. த. விஸ்வநாதன்

மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மரியாதைக்குரிய ஆணையர், நிலைக்குழு தலைவர்கள், வார்டுகுழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து துறை சார்ந்த அதிகாரிகளுக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

வார்டுகுழு கூட்டத்திற்கு குடிநீர் வாரிய அதிகாரிகள் பங்கேற்பதில்லை. 181வது வார்டில் குடிநீர் பிரச்சனை மற்றும் மின் தடை பிரச்சனை உள்ளன. அனைத்து அதிகாரிகளும் மாமன்ற உறுப்பினர்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

குடிநீர் பிரச்சனை 169வது வார்டிலும் உள்ளது.

எதிர்கட்சி மாமன்ற உறுப்பினர்கள் (திரு. ர. ஜெய்சங்கர், திரு. ஜே. ஜான், திருமதி. உமா ஆனந்தன்) ஆகியோர் தங்களுடைய வார்டுகளில் பல பணிகள் நிறைவேற்றப்பட்டிருப்பதை மாமன்றத்தில் பலமுறை பாராட்டியுள்ளனர். எனவே, அனைத்து அதிகாரிகளும் மாமன்ற உறுப்பினர்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என கேட்டு கொள்கிறேன். மாண்புமிகு மேயர் அவர்களும் இது குறித்து அறிவுறுத்தியுள்ளார்கள் என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

பகுதி பொறியாளர் (Area Engineer) அவர்களிடம் இதுகுறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு தினந்தோறும் குடிநீர் வழங்கப்பட்டு வருவதாக குடிநீர் வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

திரு. த. விஸ்வநாதன்

இந்த நிமிடம் வரை குடிநீர் பிரச்சனை இன்னும் தீர்க்கப்படவில்லை என தெரிவித்து கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

சென்னை மாநகர மக்களுக்கு தங்கு தடையின்றி குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

திரு. த. விஸ்வநாதன்

கொசுத்தொல்லை அதிகமாக உள்ளது. டெங்கு நோய் வராமல் தடுப்பதற்காக மாண்புமிகு மேயர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு மேயர்

தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. த. விஸ்வநாதன்

2011–ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி விரிவாக்கத்தின் போது காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டத்திலிருந்து இணைக்கப்பட்ட பகுதிகளில் Drainage வசதி கிடையாது. 181வது வார்டில் திறந்தவெளி மழைநீர் வடிகால்வாய் மட்டுமே உள்ளது. எனவே, Desilting பணி அதிகமாக நிறைவேற்றப்பட வேண்டி உள்ளன.

மண்டலம் 14–இல் உள்ள 11 வார்டுகளில் 733 தெருக்கள் உள்ளன; அதில் 166 தெருக்கள் 181வது வார்டில் உள்ளன. இவ்வளவு தெருக்களுக்கு குறைந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை மாமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கொட்டிவாக்கம் மீன் மார்க்கெட் கட்டப்பட்டு, பழக்கடை Extension பணிகள் தேர்தலுக்கு முன்னர் ஒப்புதல் பெற்றும், இன்று வரை பணி துவங்கப்படவில்லை. தகுந்த நடவடிக்கை தேவை.

மாண்புமிகு மேயர்

கடந்த மாமன்ற கூட்டத்திலும் Desilting குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. மாநகராட்சி சார்பில் 3 சுழற்சி முறையில் ஒவ்வொரு ஆண்டும் Desilting மேற்கொள்ளப்படும். விதிகளின்படி ரூ. 50 இலட்சம் வரை Limited Tender முறையில் பணிகள் செய்யலாம். ஆனால், இந்த வருடம் முதல் சுழற்சியில் Open Tender மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

வார்டுகளின் பரப்பளவு மற்றும் மக்கள் தொகையை கணக்கிட்டு, இரண்டாவது மற்றும் மூன்றாவது சுழற்சிகளில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். 181வது வார்டின் Drainage பிரச்சனை குறித்து ஆணையர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன. கொட்டிவாக்கம் பழக்கடை Extension பணிகள் அடுத்த மன்றக்கூட்டத்தில் பொருளாக சமர்ப்பிக்கப்படும்.

திரு. த. விஸ்வநாதன்

ECR பகுதியில் ஒரு கிரவுண்ட் (2400 ச.அடி) நிலத்திற்கு மட்டுமே Plan Approval வழங்கப்பட வேண்டும்; அதற்கு குறைவான பரப்பளவு உள்ள நிலத்திற்கு வழங்கப்படுவதில்லை. ஆனால், சென்னை Core City பகுதியில் 300, 400, 600 சதுர அடி நிலத்திற்கும் Plan Approval வழங்கப்படுகிறது.

சாலை விரிவாக்கத்தின் போது அரை கிரவுண்டாக மாறிய நிலத்தில் கட்டிடம் கட்டினால் Notice வழங்கப்படுவது நியாயமல்ல. Online புகார்களின் மீது மண்டல அலுவலர் – உதவி பொறியாளர் வழியாக உடனடியாக Notice வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு மேயர்

வட்டார துணை ஆணையர் அவர்கள் தலைமையில் ஆய்வு செய்து பிறகு Notice வழங்க வேண்டும்.

திரு. த. விஸ்வநாதன்

குடியிருப்புகளில் Commercial நடவடிக்கை இருக்குமேயானல், commercial என சொத்து வரி மதிப்பீடு செய்யப்பட்டு மாநகராட்சியின் வருவாயினை பெருக்கலாம்.

அவசர பராமரிப்பு பணிகளை உடனே செய்ய வேண்டும். Drainage பணிகள் நடைபெறுகின்றன. அப்பணி வேகப்படுத்த வேண்டும்.

பூங்கா மற்றும் விளையாட்டு திடல்கள் ஒழுங்குற பராமரிக்கப்படுவதில்லை. ஒழுங்குற பராமரிப்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

இது தொடர்பான பொருள் இம் மாமன்றத்தில்
சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

திரு. த. விஸ்வநாதன்

கல்வி, பூங்கா மற்றும் விளையாட்டு திடல் நிலைக்குழு கூட்டம் மாதந்தோறும் நடத்தப்படுகிறது. ஆனால், அதிகாரிகள் அக் கூட்டத்தில்

கலந்து கொள்வதில்லை. அதிகாரிகள் நிலைக்குழு கூட்டத்தில் பங்கேற்க தகுந்த அறிவுறுத்தல்கள் வழங்க வேண்டும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

ஒரே நாளில் மூன்று நிலைக்குழு கூட்டங்கள் நடத்தி, இரண்டு நாளில் மூன்று, மூன்று கூட்டங்கள் வைத்தால் சரியாக இருக்கும்.

மாண்புமிகு மேயர்

வார்டுகுழு கூட்டங்களில் அதிகாரிகள் பங்கேற்காததால் பணிகள் மேற்கொள்ளப்படுவதில் சிக்கல் உள்ளது. 10 நாட்களுக்கு முன்னதாகவே வார்டுகுழு, நிலைக்குழு, மன்றக் கூட்ட தேதிகள் முடிவு செய்யப்படுகின்றன. எனவே, அனைத்து அதிகாரிகளும் நிலைக்குழு / வார்டுகுழு கூட்டத்தில் தவறாமல் பங்கேற்க வேண்டுமென்பதை அறிவுறுத்தி சுற்றறிக்கை அனுப்புமாறு கேட்டு கொள்கிறேன்.

திரு. த. விஸ்வநாதன்

அனைத்து அலுவலர்களும் மாமன்ற உறுப்பினர்களுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். மாநகராட்சியில் கல்வி மற்றும் சுகாதாரத்திற்கு நிதி அதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால், சென்னை பள்ளிகளில் பயிலும் 27 மாணவர்கள் NEET தேர்வில் வெற்றி பெற்றுள்ளனர்; இதற்கு திராவிட மாடல் அரசின் பங்களிப்பு காரணம்.

எனக்கு பேச வாய்ப்பளித்த மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், ஆணையர் ஆகியோருக்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி. ச. மேனகா அவர்கள், வார்டு எண்.197.

திருமதி. ச. மேனகா

மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், ஆணையர், நிலைக்குழு தலைவர்கள், வார்டுகுழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பத்திரிகை மற்றும் ஊடக துறையினை சார்ந்த நண்பர்களுக்கு காலை வணக்கம்.

இ-சேவை மையம்

197–வது வார்டு அலுவலகத்தின் கீழ் இயங்கிய இ–சேவை மையம் 18.05.2022 அன்று மூடப்பட்டது. பொதுமக்கள் தற்போது ஈஞ்சம்பாக்கம் அல்லது சோழிங்கநல்லூர் செல்ல வேண்டிய நிலை உள்ளது. போக்குவரத்து நெரிசலால் மக்கள் சிரமம் அடைந்து வருகின்றனர். மேற்படி இ–சேவை மையம் மீண்டும் மேற்படி இடத்தில் தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்காக தமிழ்நாடு கேபிள் டி.வி. நிறுவனத்திற்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

உத்தண்டி மற்றும் குடுமியாண்டிதோப்பு பகுதிகளில் இரண்டு சுனாமி பில்டிங் அமைந்துள்ளன. இதனை ஏழை, எளிய மக்களின் பயன்பாட்டிற்காக சமுதாய நல கூடமாக மாற்றி தர வேண்டும். பல முறை கடிதங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. வட்டார துணை ஆணையர் அவர்களும் இந்த இடத்தினை பார்வையிட்டார். 12.1.2026 அன்று மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வார்டுகுழுவில் சமர்ப்பிக்கப்பட்டன. பணிகள் தொடங்கப்படவில்லை; விரைவில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சமுதாய நலக் கூடம்

நெனார்குப்பம் பகுதியில் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியில் சமுதாய நலக் கூடம் கட்டப்பட்டுள்ளது. மணமகன் அறை, மணமகள் அறை, டைனிங் ஹால் இல்லாததால் மக்கள் சிரமம் அடைந்து வருகின்றனர். முதல் தளத்தில் டைனிங் ஹால் / மணமகன்/மணமகள் அறைகள் அமைத்து தர வேண்டும்.

பேருந்து நிறுத்த நிழற்குடை

நெனார்குப்பம் – திருவான்மியூர் செல்லும் சாலையில் பேருந்து நிறுத்த நிழற்குடை இல்லை. பள்ளி மாணவர்கள் மற்றும் வேலைக்கு செல்லும் பொதுமக்கள் மழை, வெயில் காலங்களில் பெரிதும் அவதிப்படுகின்றனர். விரைவில் நிழற்குடை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மின் கட்டணம் வசூலிக்கும் அலுவலகம்

உத்தண்டி, நைனார்குப்பம், குடுமியாண்டிதோப்பு, பனையூர், பனையூர் குப்பம் பகுதிகளில் மக்கள் மின் கட்டணம் செலுத்த ஈஞ்சம்பாக்கம் செல்ல வேண்டிய நிலை உள்ளது. குடுமியாண்டிதோப்பு பகுதியில் உள்ள அம்மா மினிகிளினிக் கட்டிடத்தை TANGEDCO பயன்பாட்டிற்கு மாற்றி, மின்கட்டணம் வசூலிக்கும் அலுவலகமாக அமைத்து தர வேண்டும். இதற்கு வாடகை நிர்ணயம் செய்து வழங்குமாறு கேட்டு கொள்கிறேன்.

அம்மா உணவகம்

நைனார்குப்பம் மற்றும் குடுமியாண்டிதோப்பு பகுதிகளில் இரண்டு அம்மா உணவகங்கள் உள்ளன. குடுமியாண்டிதோப்பு அம்மா உணவகத்தில் மேல்தளம் மற்றும் தரைதளம் சேதமடைந்துள்ளது. சுவர்களில் நீர்கசிவு, அலமாரிகள் பழுதடைந்துள்ளன. இரு உணவகங்களிலும் பெயர் பலகைகள் பழுதடைந்துள்ளன. தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அம்மா உணவக பணியாளர்கள், தினம் ரூ.325/- வீதம் மாதம் ரூ.9750/- ஊதியம் பெற்று வருகின்றனர். இவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த, ஊதியத்தை உயர்த்தி வழங்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பஞ்சாயத்து கிணற்று குடிநீர்

உத்தண்டி பகுதியில் மக்கள் பயன்படுத்தி வந்த பஞ்சாயத்து bore கிணற்று குடிநீர் இணைப்பு தற்போது துண்டிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மக்கள் பெரிதும் அவதிப்பட்டு வருகின்றனர். காலை மாலை இரு வேளைகளிலும் குடிநீர் வழங்கப்பட்டு வந்த நிலையில், தற்போது காலை நேரத்தில் மட்டும் குடிநீர் வழங்கப்படுகிறது. நிலத்தடி போர் கிணற்று குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படாமல் மீண்டும் குடிநீர்

வழங்கப்பட வேண்டும். ஊர் திருவிழா, பொது நிகழ்ச்சிகள், சுப நிகழ்ச்சிகள் நடைபெறும் நாட்களிலும் நிலத்தடி போர் கிணற்று குடிநீர் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும்.

பாதாள சாக்கடை பணிகள்

197–வது வார்டில் பாதாள சாக்கடை பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆடி மாத திருவிழா உத்தண்டி பகுதியில் நடைபெற உள்ளதால் பணிகளை விரைவில் முடிக்க கூடுதல் பணியாட்கள் பணியிலமர்த்த வேண்டும்.

கண்ணபிரான் கோயில் தெருவில் பணிகள் ஒரு மாதமாக நிறுத்தப்பட்டுள்ளதால் மக்கள் சிரமம் அடைந்து வருகின்றனர். ஒப்பந்ததாரர்கள் மெத்தனமாக செயல்படுகின்றனர். பருவமழையில் சாலை சேதம் ஏற்படும் அபாயம் உள்ளது. பள்ளி மாணவர்கள், பொதுமக்கள், ஆம்புலன்ஸ் சேவை பாதிக்கப்படுகிறது. பள்ளங்கள் தோண்டி அருகிலேயே கொட்டப்படுகின்றன; புகார் அளித்தாலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஒப்பந்ததாரர்கள் நேரில் சென்று பார்வையிட வேண்டும். மின் தடை காலங்களில் குழந்தைகள், முதியவர்கள் பள்ளங்களில் விழும் அபாயம் உள்ளது. திருவிழா காலங்களில் அதிக புகார்கள் பெறப்பட்டன. எனவே, உடனடியாக சாலை சீரமைப்பு பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

29.4.2022 அன்று மாண்புமிகு மேயர் அவர்களிடம் அளிக்கப்பட்ட கடிதத்தின் அடிப்படையில், உத்தண்டி, குடுமியாண்டி, பனையூர் குப்பம் தொடக்கப்பள்ளிகள் சென்னை பள்ளிகளாக மாற்றப்பட்டன. மேசை, நாற்காலிகள் வழங்கப்பட்டு Smart Class Rooms அமைக்கப்பட்டன. LKG முதல் 5ஆம் வகுப்பு வரை கல்வி வழங்கப்படுவது மகிழ்ச்சி அளிக்கிறது.

புத்தக விநியோகம் மற்றும் போலியோ சொட்டு மருந்து அளிக்கும் போது கடந்த ஆண்டுகளில் மாமன்ற உறுப்பினர்களுக்கு தகவல் வழங்கப்பட்டது. ஆனால், இந்த ஆண்டு தலைமை ஆசிரியர்கள் எந்த தகவலும் மாமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கவில்லை. SMC கூட்டங்களில் தண்ணீர் பிரச்சனை, மோட்டர் பழுதுகள் போன்ற பிரச்சனைகள் எடுத்துரைக்கப்பட்டு, மாண்புமிகு மேயர் அவர்களிடம் இதனை தெரிவித்து மாண்புமிகு மேயர் அவர்கள் இதற்கான தீர்வுகளை

அளித்துள்ளார். அதற்காக எனது நன்றியினை அவருக்கு தெரிவித்து கொள்கிறேன்.

போலியோ சொட்டு மருந்து, திரு. காமராஜர் அவர்களின் பிறந்தநாளில் நடைபெற்ற விளையாட்டு நிகழ்ச்சிகள் குறித்த தகவல் தெரிவிக்கப்படவில்லை. 197வது வார்டில் ஐந்து பள்ளிகள் இருந்தும், எந்தத் தகவலும் வழங்கப்படவில்லை. சுதந்திர தினம், பள்ளி விழாக்கள், பொதுநிகழ்ச்சிகளில் மாமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றுள்ளனர். ஆனால், இந்த முறை தவிர்க்கப்பட்டதற்கான காரணம் என்ன?

மதிப்பிற்குரிய துணை மேயர்

ஒட்டுமொத்த மாமன்ற உறுப்பினர்களுக்கும் தகவல் தெரிவிக்கப்படவில்லை என மாமன்ற உறுப்பினர் அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார்.

மாண்புமிகு மேயர்

கடந்த நான்கு ஆண்டுகளாக அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும் நிகழ்ச்சிகள் தொடர்பான தகவல் தெரிவிக்கப்பட்டது. சில நிகழ்ச்சிகளில், குறிப்பாக போலியோ சொட்டு மருந்து வழங்கப்பட்ட போது, எந்த ஒரு மாமன்ற உறுப்பினருக்கும் தகவல் தெரிவிக்கப்படவில்லை. இனிவரும் காலங்களில், எந்த ஒரு நிகழ்ச்சியாக இருந்தாலும் மக்கள் பிரதிநிதிகளாகிய மாமன்ற உறுப்பினர்கள் அந்நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட வேண்டும். இதற்கான சுற்றறிக்கை அனுப்ப வேண்டும்.

திருமதி. ச. மேனகா

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் சோழிங்கநல்லூர் பகுதி கே.கே. சாலையில் உள்ள இடத்தில் அமைந்துள்ள இடத்தில் உள்ள கெனாலில் ஆகாயதாமரை அகற்றுவதற்காக ஆய்வு மேற்கொண்ட போது, மண்டல அலுவலர் அவர்கள் மாமன்ற உறுப்பினராகிய எனக்கு தகவல் அளிக்கவில்லை என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

197–வது வார்டில் உள்ள பள்ளிகளை, சென்னை பள்ளிகளாக மாற்றி, அனைத்து வசதிகளும் செய்து கொடுத்த கல்வி நிலைக்குழு தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர், திருமதி உமா ஆனந்தன் அவர்கள், வார்டு எண்.134.

திருமதி உமா ஆனந்தன்

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, அனைத்து மாமன்ற உறுப்பினர்களே, அதிகாரிகளே, ஊடக துறையினை சார்ந்த நண்பர்களே உங்கள் அனைவருக்கும் நமஸ்காரம். எனது சிறப்பு நன்றியை **Zone – X வார்டு குழுத் தலைவர் மற்றும் அவரது குழுவினருக்கு** தெரிவித்து கொள்கிறேன்.

அடையாறு, சென்னை 15.85 ஏக்கர் நிலம்

நிலம்: பரணி தீபம் டிரஸ்ட் வழங்கிய 15.85 ஏக்கர் நிலமானது, திருவண்ணாமலை ஸ்ரீ அருணாசலேஸ்வரர் தேவஸ்தானத்திற்கு சொந்தமானது.

ஆக்கிரமிப்பு: இந்த நிலம் முழுமையாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது; தேவஸ்தானத்திற்கு எந்தத் தொகையும் வழங்கப்படுவது கிடையாது.

- Lease Details:
- அவ்வை இல்லம் – 1,14,850 Sq.ft.
- டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி – 64,800 Sq.ft. (Long Term Lease)
- அவ்வை இல்லம் ஆசிரியர் பயிற்சி மையம் – 29,679 Sq.ft.
- அவ்வை இல்லம் ஆரம்ப பள்ளி – 48,614 Sq.ft.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி இல்லம்: 32 கிரவுண்ட் Lease நிலத்தில் வசித்து வந்த அவர், 22.07.1968 அன்று இயற்கை எய்தினார். Lease காலம் முடிவடைந்ததால் தற்போது கோயில் நிர்வாகத்திடம் உள்ளது.

அரசாங்க ஒப்புதல்: 23.07.2026 *The Hindu* நாளிதழ் செய்தியின்படி, Cancer Institute, பழுதடைந்த இல்லத்தை இடித்து புதிய நினைவிட கட்டிடம் அமைக்க அனுமதி பெற்றுள்ளது.

சொத்து உரிமை: மாநகராட்சி ஆவணங்களில் இந்த சொத்து யார் பெயரில் உள்ளது என்பது தெரிய வேண்டும்.
வில்வ வனம்: முதலியார் குடும்பம் டிரஸ்ட் அமைத்து வில்வ மரங்களை வளர்த்து அண்ணாமலையாருக்கு அனுப்ப வேண்டும் என எழுதி வைக்கப்பட்டது. ஆனால், நடைமுறையில் அனுப்பப்படுவது கிடையாது.
கட்டிட அனுமதி: 24/41 பெசன்ட் அவென்யூ, அடையாறு முகவரியில் சிவில் பணிகளை தொடங்குவதற்கு விண்ணப்பம் யார் செய்துள்ளனர் என்பது தெளிவாக தெரியவில்லை. எதிர்காலத்தில் மாநகராட்சியிடம் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கோரி விண்ணப்பம் வந்தால், சொத்து, திருவண்ணாமலை ஸ்ரீ அருணாசலேஸ்வரர் தேவஸ்தானம் பெயரில் இருப்பதால் அவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க இயலும்.

மாண்புமிகு மேயர்

கட்டிட வரைபட அனுமதிக்கு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு விண்ணப்பிக்கின்ற பொழுது, திருவண்ணாமலை ஸ்ரீ அருணாசலேஸ்வரர் தேவஸ்தானம் பெயரில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுமா அல்லது வேறு தனி நபரின் பெயரில் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுமா என்று கேட்கிறீர்கள்.

திருமதி. உமா ஆனந்தன்

வருங்காலத்தில் பணி மேற்கொள்ள இருக்கிறார்கள். அதற்கு தான் நான் முன்னதாகவே தெரிவிக்கின்றேன்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

தாங்கள் இது தொடர்பாக எழுத்துபூர்வமாக ஆணையர் அவர்களுக்கு கடிதம் கொடுக்க வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

திருமதி உமா ஆனந்தன்

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி வழங்கப்படாமல் உள்ளது. இவை விரைவில் வழங்கப்பட வேண்டும். 3 மாதங்களுக்கு ஒருமுறை மாமன்ற கூட்டம் மற்றும் வார்டுகுழு கூட்டம் நடத்தப்படலாம் என தகவல்கள் வெளியாகி உள்ளது. பொதுக்கழிப்பிடத்தில் குழாய் அடைப்பு பிரச்சனை இருந்தால், 3 மாதங்களுக்கு பின்னரே மாமன்ற கூட்டம் நடத்தப்படும் அப்போது சரி செய்து தரப்படும் என பொதுமக்களிடம் சொல்ல முடியுமா?

அடுத்ததாக, Devil Tree என்கிற ஒரு மரம் ஒன்று 134வது வார்டு மாமன்ற உறுப்பினர் அலுவலகம் எதிரில் உள்ளது. இந்த மரம் 60–70 அடி உயரம் வரை வளரும். அடிப்பகுதியில் கிளைகள் இல்லாமல், மேல்பகுதியில் மட்டுமே கிளைகள் இருக்கும். பெரிய காய்கள் விழும் போது அதில் உள்ள பூச்சிகள் பறந்து கடிக்கும் தன்மை உடையவை. நிழல் தருவதில்லை; அடிக்கடி கட்டிடங்களின் சுவர், அடித்தளம், நீர் தொட்டிகளை உடைத்து சேதம் ஏற்படுத்தும். குடியிருப்புகள் அருகே வளர்ந்த மரக்கிளைகள் கண்ணாடி ஜன்னல்களை உடைக்கும் அளவுக்கு சேதம் விளைவித்துள்ளன. வீட்டு உரிமையாளர் லட்சக்கணக்கில் நட்டம் அடைந்துள்ளனர். எனவே, அந்தக் கிளைகளை வெட்ட சொன்னோம். சில Environmental Groups, மர கிளைகளை வெட்டியதற்காக புகார் அளித்து உரிமையாளரிடமிருந்து ஒரு இலட்சம் அபராதம் வசூலிக்கப்பட்டது. ஆனால், வீட்டு உரிமையாளர்கள் சந்தித்த நட்டத்திற்கு இழப்பீடு வழங்கப்படுமா என்பது இன்னும் தெளிவாகவில்லை. Social Media வழியாக புகார்கள் வந்தவுடன் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆனால், மாமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கும் நியாமான மக்களின் கோரிக்கைகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஏன் தாமதம் ஆகின்றன.

மதிப்பிற்குரிய துணை மேயர்

அந்த வகை மரம் நகர்ப்புறங்களில் தடை செய்யப்பட்டதாகும் என்பதற்கான ஆதாரத்துடன் ஆணையர் அவர்களிடம் கடிதம் அளிக்கலாம். அவர் தான் Green Committee Chairman. உங்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, அது உண்மையிலேயே தடை செய்யப்பட்ட

மரம் தான் என உறுதி செய்யப்பட்டால், சென்னை மாநகரம் முழுவதும் அவற்றை அகற்றுவதற்கு உரிய அரசு அனுமதி பெற்று ஆணையர் அவர்கள் நடவடிக்கையினை எடுப்பார்.

துறைகளின் ஒருங்கிணைப்பு

உரிமம் வழங்குதல் ஒரு துறை. அதனை ஆய்வு செய்வது ஒரு துறை. Food safety – விதிமீறலினால் சீல் வைப்பது வேறு துறை. இவ்வாறு பல்வேறு துறைகள் ஒருங்கிணைப்பு இன்றி செயல்படுகின்றன. முன்னாள் முதலமைச்சர் அவர்கள் சென்னை மாநகராட்சியில் வணக்கத்திற்குரிய மேயராக இருந்த காலத்தில், மெட்ரோ வாட்டர், TANGEDCO, பெருநகர சென்னை மாநகராட்சி ஆகிய துறைகளுக்கிடையே ஒருங்கிணைப்பு குழு அமைக்கப்பட்டிருந்தது. அதன் மூலம் பணிகள் எளிதாகவும் விரைவாகவும் நடைபெற்றன. தற்போது அந்தக் குழு ஏன் அமைக்கப்படவில்லை? அந்தக் குழு மீண்டும் அமைக்கப்பட்டால், பணிகள் சுலபமாக நடைபெறும். 134வது வார்டில், Metro Water குடிநீரில், கழிவுநீர் கலந்து வருவது குறித்த புகார்கள் சரி செய்யப்படவில்லை.

Lake View Road Storm Water Drain பணிகள் தாமதமாவதற்கு காரணம், மெட்ரோ வாட்டர் மற்றும் TANGEDCO ஒத்துழைப்பின்மையாகும் என தெரிவித்து கொள்கிறேன்.

134வது வார்டில் பூங்கா, சமூக நலக் கூடம், பொழுதுபோக்கு அம்சங்கள் இல்லை.

உடற்பயிற்சி கூடம் 5 ஆண்டுகளாக நீதிமன்ற வழக்கின் காரணமாக மூடப்பட்டுள்ளது. உடற்பயிற்சி கூடம் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சாலை ஒட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கான பராமரிப்பு நிதி வழங்க வேண்டும்.

மாண்புமிகு மேயர்

உடற்பயிற்சி கூடம் விரைவில் திறந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்படும்.

தாங்கள் உரையாற்றிய போது மாமன்றத்தில் முன் வைத்த கோரிக்கையின் விவரங்கள் அளிக்கப்படும். நன்றி.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. கோ. கோபிநாத் அவர்கள், வார்டு எண்.45.

திரு. கோ. கோபிநாத்

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்புக்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, ஆளுங்கட்சி தலைவர் உள்ளிட்ட அவையின் அனைத்து மாமன்ற உறுப்பினர்களே, அரசு அதிகாரிகளே, ஊடக துறையினை சார்ந்த நண்பர்களே, வரலாற்று சிறப்புமிக்க இம்மாமன்றத்தை வழிநடத்தும் உங்கள் அனைவருக்கும் என் பணிவார்ந்த வணக்கங்கள்.

புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர், தந்தை பெரியார், மாமேதை கார்ல் மார்க்ஸ் ஆகியோரின் கொள்கைகளின்படி, "கடைக்கோடி மனிதருக்கும் ஜனநாயகம், எளிய மக்களுக்கும் அதிகாரம்" என்னும் உன்னத நோக்கில் எங்களை வழிநடத்திவரும் எங்கள் தலைவர், எழுச்சி தமிழர், டாக்டர் தொல்காப்பியன் திருமாவளவன் அவர்களின் வாழ்த்துகளோடு என் உரையை தொடங்குகிறேன்.

மாண்புமிகு புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர் அவர்கள், 1949–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 9–ஆம் நாள் இந்திய அரசியல் நிர்ணய சபையில், "நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும்; மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் போன்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கு போதிய நிதி அதிகாரங்களும், தன்னாட்சி உரிமைகளும் வழங்கப்பட வேண்டும்" என மிக உறுதியாக வாதாடி, வலியுறுத்தி, அதனை சட்டமாக்கினார் என்பதை இப்பேரவையில் பெருமையுடன் நினைவுகூர்கிறேன்.

நான் இந்த அவையில் மாமன்ற உறுப்பினராக பதவியேற்ற போது, மாண்புமிகு மேயர் அவர்களிடம், அனைத்து அரசு அலுவலகங்களிலும் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருஉருவ படம் வைக்கப்படுவதை போல, மாநகராட்சி அலுவலகங்களிலும் வைக்க வேண்டுமென்று கேட்டு கொண்டேன். அதன்படி, டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருஉருவ

படம் வைக்கலாம் என்கிற மகிழ்ச்சியான அறிவிப்பு வெளியானது. அவரின் திருவுருவ படங்கள் வைக்கப்பட்டன.

அந்த வகையில், இந்த அவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் புகைப்படம் பெரிய அளவில் வைக்கப்பட்டுள்ளது – மகிழ்ச்சி. நாங்கள் என்றும் போற்ற கூடிய திராவிட மாடல் ஆட்சியின் நாயகன், முன்னாள் முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் புகைப்படமும் இருக்கிறது – மகிழ்ச்சி. இந்திய நாட்டின் தேச தந்தை மகாத்மா காந்தியடிகளின் திருவுருவ படமும் இருக்கிறது – மகிழ்ச்சி.

உலகம் போற்றும் தலைவரின் திருவுருவ படத்தை, இந்திய அரசியல் சாசன சட்டத்தை இயற்றி தந்த நவீன இந்தியாவின் சிற்பி புரட்சியாளர் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவ படத்தை, ஓரிடத்தில் ஒரு மூலையில் ஒதுக்கி வைத்திருப்பதை அறிந்து, மிகுந்த வேதனை அடைகிறேன். இதனை என் கட்சியின் மாமன்ற குழு தலைவர் என்கிற நிலைப்பாட்டில், என் கண்டனத்தை மிகுந்த வேதனையோடு பதிவு செய்ய வேண்டிய கடமையில் இருக்கிறேன்.

மாண்புமிகு மேயர்

டாக்டர் அம்பேத்கர் அவர்களின் புகைப்படத்தை ஓரமாக வைக்க வேண்டுமென்பது யாருடைய நோக்கமும் அல்ல. ரிப்பன் மாளிகை பழமையான கட்டிடம் என்பதால், தொழில்நுட்ப காரணங்களால், அவரின் திருவுருவ படம் திருவள்ளுவர் படத்திற்கு அருகில் வைக்கப்பட்டது.

திரு. கோ. கோபிநாத்

ஏற்கனவே புகைப்படம் வைக்கப்பட்டிருந்த இடத்தை மாற்றியதற்கான காரணம் என்ன? எனது கோரிக்கை – மகாத்மா காந்தி அவர்களின் புகைப்படம் அருகில், மாண்புமிகு மேயர் இருக்கையின் மேல், வைக்கப்பட வேண்டும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

மாண்புமிகு மேயர் அவர்கள் தெளிவாக விளக்கம் அளித்துள்ளார்.

மாண்புமிகு மேயர்

மாமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு.கோ. கோபிநாத்

வார்டு 45–ல் FFC மைதானத்தை நவீனப்படுத்த வேண்டும். ஆண்கள் / பெண்கள் என்று தனித்தனியே குளிரூட்டப்பட்ட உடற்பயிற்சி கூடங்கள் அமைக்கப்பட வேண்டும். நவீனமயமான பார்வையாளர் Gallery கட்டப்பட வேண்டும். கால்பந்தாட்ட மைதானம் நவீனப்படுத்தப்பட வேண்டும், பூப்பந்து மற்றும் இறகுப்பந்து திடல்கள் உருவாக்கப்பட வேண்டும்.

நேதாஜி விளையாட்டு மைதானம் மழைக்காலத்தில் நீர் தேங்குவதால் மண் நிரவி உயர்த்தப்பட வேண்டும்.

சஞ்சய் நகர் பகுதியில் இறகுப்பந்து திடல், திறந்தவெளி உடற்பயிற்சி கூடம், வணிக வளாகம் அமைக்கப்பட வேண்டும்.

200 வார்டுகளிலும் உடற்பயிற்சி ஆசிரியர்கள், விளையாட்டு பயிற்சியாளர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

அம்மா உணவக காலி இடத்தில் பயிற்சி மையம், அங்கன்வாடி மையம் உருவாக்கப்பட வேண்டும். கணேசபுரம் சமூக நலக் கூடத்திற்கு "டாக்டர் அம்பேத்கர் சமூக நலக் கூடம்" என பெயர் சூட்டப்பட வேண்டும்.

அம்மா உணவகம் மாற்றம் – FFC Groundல் உள்ள அம்மா உணவகத்தினை மாற்றி இளங்கோ நகர் மருத்துவமனை அருகில் உள்ள காலி இடத்தில் அமைத்து தர வேண்டும்.

FFC Groundன் பின்புறம் உள்ள அம்மா உணவகம் இருந்த இடத்தில் நவீன உடற்பயிற்சி கூடம் அமைத்து தர வேண்டும்.

கணேசபுரம் ஜீவா இரயில் நிலைய மேம்பால பணி துவங்கப்பட்டு நான்கு ஆண்டுகள் கடந்து விட்டது; மழைக்காலத்திற்கு முன்னதாக இப் பணி முடிக்கப்பட வேண்டும்.

மக்களை தேடி மருத்துவ திட்டத்தின் கீழ், B.V. காலனியில் காலியாக உள்ள இடத்தில் **Health & Wellness Centre** கட்டி தர வேண்டும். தற்போது சாஸ்திரி நகரில் தற்காலிகமாக இயங்கும் **Health & Wellness Centre**, 44வது வார்டு **Health & Wellness Centre** –க்கும் அருகில்

இருப்பதால் மக்களால் பயன்படுத்த முடியவில்லை; 50,000 மக்கள் பயன்பெறும் வகையில் B.V.–காலனியில் **Health & Wellness Centre** கட்டி தரப்பட வேண்டும்.

02.02.2025 அன்று கடந்த ஆட்சியில் துவங்கப்பட்ட **முதல்வர் மருந்தகம்** போல, 200 வார்டுகளிலும் முதல்வர் மருந்தகங்கள் அமைக்கப்பட வேண்டும்.

200 வார்டுகளிலும் **பிசியோதெரபி மருத்துவ மையம்** மற்றும் **டயாலிசிஸ் சென்டர்** திறக்கப்பட வேண்டும். B.V. காலனியில் காலியாக உள்ள இடத்தில் **முதல்வர் திருமண மாளிகை** அல்லது சமூக நலக் கூடம் அமைக்கப்பட வேண்டும்.

சாஸ்திரி நகர் பகுதியில் சிதிலமடைந்த பழைய வார்டு அலுவலகத்தை இடித்து, 35 ஆண்டு கால பொதுமக்களின் கோரிக்கையான வணிக வளாகம் அமைத்து அதில் மீன் மார்க்கெட் அமைத்து தர வேண்டும். சாஸ்திரி நகர் பகுதியில் **பூங்கா மேம்பாட்டு பணி** விரைவுபடுத்தப்பட வேண்டும்.

வட சென்னையில் போதை கலாச்சாரம் அதிகரித்துள்ளதால், B.V.காலனியில் 900 சதுர அடி காலி நிலத்தில் **அம்பேத்கர் நூலகம், பெரியார் படிப்பகம், பசும்பொன் பயிற்சியகம்** மூன்று நிலைகளில் கட்டப்பட வேண்டும்.

குடிசைப்பகுதி மாணவர்களுக்கு படிப்பதற்கான சூழல் இல்லாததால், 200 வார்டுகளிலும் **Study Centre** அமைக்கப்பட வேண்டும். அங்கு மாணவர்களுக்கு தேநீர், சிற்றுண்டி வழங்கப்பட வேண்டும். போதை பழக்கத்தை ஒழிக்க, 200 வார்டுகளிலும் **சிறார் மணமகிழ் மன்றம்** (Chess, Carrom, Skating போன்ற விளையாட்டுகள்) அமைக்கப்பட வேண்டும்.

200 வார்டுகளில் மகளிர் வங்கி மாநகராட்சி சார்பில் அமைக்கப்பட வேண்டும். இதன் மூலம் மாநகராட்சிக்கு வருமானம், படித்த பெண்களுக்கு வேலைவாய்ப்பு, மகளிர் பொருளாதார மேம்பாடு ஏற்படும்.

200 வார்டுகளிலும் மாநகராட்சி தேநீர் மற்றும் சிற்றுண்டி கடைகள் அமைக்கப்பட வேண்டும். இதன் மூலம் வேலைவாய்ப்பு மற்றும் மாநகராட்சிக்கு வருமானம் கிடைக்கும்.

டாக்டர் அம்பேத்கர் கலைக் கல்லூரி அருகிலுள்ள பொதுப்பணி துறையின் பெரிய குளத்தில் பூங்கா, நீரூற்று அமைத்து சுற்றுலா தலமாக மாற்ற வேண்டும்.

சாலை பணிகள் நிறைவடையாமல் உள்ளன; ஒரே ஒப்பந்ததாரருக்கு பல மண்டலங்களில் பணிகள் வழங்கப்படுவது தவறு; ஒரே மண்டலத்திற்குள் பணிகள் வழங்கப்பட வேண்டும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

பேக்கேஜ் சிஸ்டத்தில் ஒரே மண்டலத்திற்குள்ளேயே அந்த ஒப்பந்ததாரருக்கு பணி வழங்க வேண்டும்.

மாண்புமிகு மேயர்

பேக்கேஜ் சிஸ்டத்தில் ஒரே மண்டலத்திற்குள்ளேயே அந்த ஒப்பந்ததாரருக்கு பணி வழங்க வேண்டும்.

திரு.கோ. கோபிநாத்

கடந்த ஆட்சியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் தூர் வாரும் திட்ட பணிகளுக்கு ரூ.1000 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும், குடிநீர் வாரியத்தின் மூலம் பணி நேர் செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்கள், பல இடங்களில் சாலைகளை தோண்டி போட்டு விட்டு பணிகளை செய்யவில்லை. அதை சரி செய்ய வேண்டும்.

TANGEDCO மற்றும் குடிநீர் வாரியத்தில் நிர்வாக சிக்கல்கள், நிறைவேற்றப்படாத பணிகள் அதிகம்; அதிகாரிகள் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

Airtel, GIO நிறுவனங்கள் அனுமதி பெற்றதை விட அதிக கம்பங்கள் அமைத்துள்ளனர். ஒவ்வொரு வார்டிலும் அனுமதி பெற்ற எண்ணிக்கையை தெரிவிக்க வேண்டும்.

சென்னை பள்ளிகளில் **Visual Education** திட்டம் கொண்டு வர வேண்டும். இதன் மூலம் மாணவர்களின் கல்வி வலுப்படும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

ரூ.2000 கோடி சிறப்பு நிதியினை அரசிடம் கோரிக்கை வைத்து தாங்கள் பெற்று தர வேண்டும்.

திரு.கோ. கோபிநாத்

கண்டிப்பாக. சென்ற ஆட்சி காலத்தில் பறிக்கப்பட்ட மேயர், நிலைக்குழு / வார்டுகுழு அதிகாரத்தினை மீண்டும் திரும்ப பெற வேண்டும்.

டிஜிட்டல் மயமாக்கல்: மாணவர்களுக்கு புத்தக சுமையை குறைக்க TAB வழங்க வேண்டும்.

45வது வார்டு அலுவலக கட்டுமானத்தில் Sanitary Inspector அலுவலக அறை சேர்க்கப்பட வேண்டும்.

NULM ஊழியர்கள் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும். சுகாதார துறையில், பகுதி நேர ஊழியர்களை முழுநேர ஊழியர்களாக மாற்றி, NULM ஊழியர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் போன்று வழங்க வேண்டும்.

சொத்து வரி நிர்ணயம் மண்டல அலுவலகங்களில் மட்டுமே மேற்கொள்ள வேண்டும்.

எனது அனைத்து கோரிக்கைகளும் பரிசீலனைக்கு எடுத்து கொள்ளப்பட வேண்டும் என கேட்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி வணக்கம்.

திரு.வே. ராஜன் (குறுக்கீடு)

மாண்புமிகு மேயர் அவர்களே, 1998–ஆம் ஆண்டு பாபாசாகிப் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் மணிமண்டபத்திற்கு அடிக்கல் நாட்டி, 2000–ஆம் ஆண்டில் அந்த மணிமண்டபத்தை திறந்து வைத்த பெருமைக்குரியவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை நான் இங்கு பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கிறேன்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

சட்ட பல்கலைக்கழகத்திற்கு டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பெயரினை சூட்டியவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

திரு.வே. ராஜன் (குறுக்கீடு)

அதே போன்று, அவர் வழியில் வந்த திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், டாக்டர் அம்பேத்கர் அவர்கள் எழுதிய நூல்களை தெரிவு செய்து தமிழில் பதிப்பிக்க உத்தரவிட்டவர் ஆவார். 2022ஆம் ஆண்டில் பாபாசாகிப் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளை சமத்துவ தினமாக அறிவித்த பெருமைக்குரியவர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

அயல்நாடு சென்று கல்வி பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவி தொகை கிடையாது; அதற்காக பாபாசாகிப் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பெயரில் கல்வி உதவி தொகை திட்டத்தினை அறிவித்தவர் திரு. முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்பதையும் பதிவு செய்ய விரும்புகிறேன். அந்த வகையில், இந்த மன்றத்தில் பாபாசாகிப் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் புகைப்படத்தை வைத்தமைக்காக மாண்புமிகு மேயர் அவர்களுக்கு என் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கிறேன்.

இந்திய அரசியலமைப்பு சட்டம் இயற்றப்பட்டு, பாராளுமன்ற தேர்தல் முடிவடைந்த பின், பாபாசாகிப் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் மத்திய அரசின் முதல் சட்டத்துறை அமைச்சராக இருந்தார். பெண்களுக்கு இடஒதுக்கீடு, சொத்தில் சம பங்கு போன்ற திட்டங்களை கொண்டு வந்த போது, அந்த மசோதா தோற்கடிக்கப்பட்டது. அப்போது அவர், "இந்திய அரசியலமைப்பு சட்டத்தை இயற்றியவன் நான், இந்தக் குழுவின் தலைவர் நான். நான் கொண்டு வந்த இந்த மசோதா தோற்கடிக்கப்பட்டது; எனவே, பதவியில் இருப்பதை விட இல்லாமல் இருப்பதே மேல்" என்று கூறி ராஜினாமா செய்தார். அவர் ராஜினாமா செய்யும் போது, "இந்த மசோதா இன்று தோற்று போயிருக்கலாம்; ஆனால், வருங்காலத்தில் ஒரு அரசியல் தலைவர் இந்த சட்டங்களை நிறைவேற்றுவார்" என்று கூறினார். அந்தத் திட்டங்களை நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். நமது மாண்புமிகு மேயர் அவர்கள், மாமன்றத்தில் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திரு உருவ படத்தை வைத்தமைக்காக மீண்டும் எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

திரு. பரிதி இளம் சுருதி (குறுக்கீடு)

பாபாசாகிப் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் அனைவருக்கும் பொதுவான உலக தலைவர்; அவர் ஒரு கட்சியினருக்கோ, இயக்கத்திற்கோ சொந்தமானவர் அல்ல; இங்குள்ள அனைவருக்கும் சொந்தமானவர் என்பதை பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திருமதி. மோ. ரேணுகா அவர்கள், வார்டு எண்.42.

திருமதி. மோ. ரேணுகா

மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மரியாதைக்குரிய ஆணையர் மற்றும் இம்மன்றத்தில் கூடியுள்ள சான்றோர் பெருமக்கள் அனைவருக்கும் வணக்கம்.

கடந்த நான்கு ஆண்டுகளில் 42வது வார்டு பகுதியில் மாநகராட்சி மூலம் பல்வேறு மக்கள் நல பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதிய சாலைகள் அமைத்தல், மழைநீர் வடிகால்வாய்கள் அமைத்தல் போன்ற பணிகள் சிறப்பாக நடைபெற்றுள்ளன. இதற்காக அனைவருக்கும் நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

தற்போது ஆரம்ப சுகாதார நிலையம், முதல்வர் படைப்பகம், புத்தா நடுநிலை மற்றும் மேல்நிலை பள்ளிகளுக்கான புதிய கட்டிடங்கள், பகுதி அலுவலகம், திருவொற்றியூர் நெடுஞ்சாலை சர்வீஸ் சாலையில் கழிப்பிடம் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

தேர்தல் நடத்தை விதிமுறைகள் அறிவிக்கப்பட்டதற்கு பின் கட்டுமான பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது. மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையர் ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட வேண்டும்.

பள்ளி மேம்பாடு

கண்ணன் தெருவில் ரங்கநாதபுரம் நடுநிலைப்பள்ளி (1965–ஆம் ஆண்டில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது) 60 ஆண்டுகளாக கல்வி சேவை செய்து வருகிறது. தற்பொழுது இக் கட்டிடம் சிதிலமடைந்து, மழைக்காலங்களில் சுவர்களில் ஓதம் ஏற்படுகிறது. கைப்பற்றப்பட்ட ஆக்கிரமிப்பு இடத்துடன் சேர்த்து புதிய பள்ளிக் கட்டிடம் அமைத்து, அருகிலுள்ள புத்தா பள்ளியுடன் இணைத்து ஒரே கல்வி வளாகமாக மாற்ற வேண்டும். மேல்நிலை வகுப்பு வரை கல்வி வழங்கும் வகையில் பள்ளியின் தரத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(மாண்புமிகு மேயர் அவர்களின் இருக்கையில் மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள் அமர்தல்)

வடசென்னை வளர்ச்சி திட்டம்

புதிய கழிவுநீர் குழாய்கள் பதிக்கும் பணி நடைபெற்று வருகிறது. Manual Chamber அமைத்து வீடுகளுக்கு புதிய கழிவுநீர் இணைப்பு வழங்கப்படுகிறது. அகலம் குறுகலான தெருக்களில் சாலை முழுவதும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், road cut restoration செய்வதற்கு பதிலாக, புதிய சாலை அமைத்து தர வேண்டும். கழிவுநீர் பணி முடிவடையும் நிலையில் உள்ள முனியப்பன் தெரு, ஏகாம்பரம் தெரு, திருநாவுக்கரசு தோட்டம் 2–ஆவது தெரு, மேற்கு கிருஷ்ணப்ப தோட்டம் ஆகிய இடங்களில் புதிய சாலை அமைத்து தர வேண்டும்.

Ward Maintenance Fund

அவசர சிறு சிறு பணிகளுக்காக ரூ.10 லட்சம் Maintenance Fund வழங்க வேண்டும். சிறு, சிறு பள்ளங்களை சீர் செய்வதற்கு Cold–Mix தார் Bag வழங்கப்பட வேண்டும். தற்போது மண்டலங்களில் இவை இருப்பு இல்லை. இவற்றை உடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2026–2027ஆம் ஆண்டிற்கான மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி ஒதுக்கீடு செய்து, உறுப்பினர்கள் பரிந்துரைக்கும் மக்கள்

நல பணிகளுக்கு பணியாணை வழங்கி பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தமிழ்நாடு வெளிப்படையான டெண்டர் சட்டம் நோக்கம் வெளிப்படை தன்மை, நியாயமான போட்டி மற்றும் பொதுமக்களின் பணத்திற்கு சிறந்த மதிப்பினை உறுதி செய்வதாகும். அவசர சூழல்களில் (மழைக்கால சாலை சேதம், புயல் பாதிப்பு) Limited Tender நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். நிர்வாக ஒப்புதல், விதிமுறைகள் முழுமையாக பின்பற்றப்பட வேண்டும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) ஆகிய கட்சிகள் Limited tenderஐ நடைமுறைப்படுத்த வேண்டுமென்கிற கோரிக்கையினை முன் வைத்துள்ளனர்.

திருமதி மோ. ரேணுகா

கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாக பகுதியில் பயோ மைனிங் பணி நடைபெற்று வருகிறது. குப்பையிலிருந்து மின்சாரம் எடுக்கும் திட்டம் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுத்தும் என்பதால், பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இத்திட்டத்தை கைவிட வேண்டும் எனக் கோரிக்கை வைத்து வருகிறார்கள். எனவே, மாநகராட்சியின் தற்போதைய நிலை என்ன?

மதிப்பிற்குரிய துணை மேயர்

பொதுமக்களிடம் கருத்து கேட்பு கூட்டங்கள் நடத்தப்பட்டு முடிவெடுக்கப்படும். உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படாது.

திருமதி மோ. ரேணுகா

சென்னை பள்ளிகளில் பணிபுரியும் வாட்ச்மேன் மற்றும் தூய்மை பணியாளர்கள் பள்ளி விடுமுறை மாதமான மே மாத விடுமுறையில் பணிபுரிந்தும் சம்பளம் வழங்கப்படவில்லை. ஒப்பந்த காலத்தை 12 மாதமாக மாற்ற வேண்டும்.

மாநகராட்சியின் I.T.I. மருத்துவமனை போன்ற இடங்களில் வாட்ச்மேன்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தை விட, பள்ளிகளில் பணிபுரியும் வாட்ச்மேன்களுக்கு வழங்கப்படுகின்ற ஊதியம் குறைவாக உள்ளது. சம வேலைக்கு சம ஊதியம் என்கிற கொள்கையை நடைமுறைப்படுத்த வேண்டும்.

வார்டு–42, மண்டலம்–4 அலுவலகம் எதிரில், இலக்கிய பேராசான் பொதுவுடைமை முன்னோடி தோழர் ஜீவா அவர்களின் பெயரில் மாநகராட்சி பூங்கா அமைந்துள்ளது. அந்தப் பூங்காவில் தோழர் ஜீவா அவர்களின் மார்பளவு சிலையும் நிறுவப்பட்டுள்ளது.

அதே அலுவலகத்தின் வலதுபுறம் தொடர்ச்சியாக அமைந்துள்ள ஜீவா பூங்காவில், விடுதலை போராட்ட வீரர், தகைசால் தமிழர், அரசியல் அறத்தின் முன்னோடி, மறைந்த தோழர் திரு. நல்லகண்ணு அய்யா அவர்களின் திருவுருவ சிலையை அமைக்க அரசும், பெருநகர சென்னை மாநகராட்சியும் முன் வர வேண்டும் என மன்றத்தின் வாயிலாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கோரிக்கையினை முன் வைக்கிறோம்.

மேலும், அதன் அருகில் கட்டப்பட்டு வரும் படிப்பகத்திற்கு, தோழர் திரு. நல்லகண்ணு அய்யா அவர்களின் பெயரை சூட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மன்றத்தின் வாயிலாக கோரிக்கையினை முன் வைக்கிறோம்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

வார்டுகுழுவில் இதற்கான பொருள் சமர்ப்பிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றி மாமன்றத்திற்கு அனுப்பினால் அரசிற்கு அனுப்பி வைக்கப்படும்.

திருமதி மோ. ரேணுகா

விளையாட்டு மைதானம்

65 ஆண்டுகள் பழமை வாய்ந்த கண்ணப்பர் திடல் விளையாட்டு மைதானம் தற்போது பொதுமக்கள் இலவசமாக பயன்படுத்தி வருகின்றனர். இதனை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் (SDAT) வசம் மாற்றினால் கட்டணம் செலுத்த வேண்டிய நிலை

உருவாகும். ஏழை மற்றும் நடுத்தர குடும்பங்களை சேர்ந்த விளையாட்டு ஆர்வலர்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே, மேற்படி மைதானத்தை பெருநகர சென்னை மாநகராட்சியே தொடர்ந்து பாராமரிக்க வேண்டும்.

இந்தியாவில் மூன்று அடுக்கு ஆட்சி முறை: ஒன்றிய அரசு, மாநில அரசு, உள்ளாட்சி அமைப்புகள். உள்ளாட்சி அமைப்புகள் தான் மக்களுக்கு மிக அருகில் இருக்கும் அரசு. வலிமையான உள்ளாட்சி அமைப்பே வலிமையான ஜனநாயகத்தின் அடித்தளம். தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகள் தொடர்ந்து வலிமையோடு செயல்பட வேண்டும் என கோரிக்கையினை முன் வைத்து, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு. ஏ. சேட்டு அவர்கள், வார்டு எண். 24.

திரு. ஏ. சேட்டு

மாண்புமிகு மேயர் அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களுக்கும், ஆளுங்கட்சி தலைவர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய ஆணையர் அவர்களுக்கும், அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும், ஊடக மற்றும் பத்திரிகை துறையினை சார்ந்த நண்பர்களுக்கும், அனைத்து துறை சார்ந்த அதிகாரிகளுக்கும் முதற்கண் என் வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

மின் கம்பங்கள் பழுதடைவு

மண்டலம்–3, வார்டு 24 பகுதியில் பல TANGEDCO மின்கம்பங்கள் பழுதடைந்துள்ளன. நான்கரை ஆண்டுகளாக கோரிக்கை வைத்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மின் கம்பங்களில் உள்ள மின்சார கம்பிகள் அறுந்து விழும் நிலையில் உள்ளன. பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக புதிய கம்பங்கள் இருந்தாலும் அவற்றை நடுவதற்கு ஆட்கள் இல்லை. தகுந்த நடவடிக்கை தேவை.

குடிநீர் சுத்திகரிப்பு பிரச்சனை

சென்னை குடிநீர் வாரியத்தால் விநியோகம் செய்யப்படும் குடிநீர் முறையாக சுத்திகரிக்கப்படுவதில்லை. பூச்சிகள் மற்றும் புழுக்கள் கலந்து வருகின்றன.

புழல் ஏரி பாதுகாப்பு

புழல் ஏரி சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய ஏரி. அங்கு இறுதி சடங்குகளுக்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் வீசப்படுகின்றன. திறந்தவெளி கழிப்பிடமாகவும் பயன்படுத்தப்படுவதால் நீர் மாசுபடுகிறது. எனவே, சுற்றுச்சுவர் அமைத்து புழல் ஏரி பாதுகாக்கப்பட வேண்டும்.

24வது வார்டில் 200 சாலைகள் உள்ளன. கடந்த நான்கரை ஆண்டுகளில் 23 சாலைகள் மட்டுமே அமைக்கப்பட்டது. 67 சாலைகளுக்கு தடையின்மை சான்றிதழ் (NOC) வழங்கப்பட்டும் சாலை அமைக்கப்படவில்லை. அனைத்து தெருக்களும் பழுதடைந்த நிலையில் உள்ளன.

24வது வார்டில், 2022–ஆம் ஆண்டு அனுமதியில்லாமல் கட்டப்பட்ட ஒரு கட்டிடத்திற்கு குறைந்த சொத்து வரி விதிக்கப்பட்டது. பின்னர் புகார் செய்யப்பட்டு சொத்து வரி சரியாக மதிப்பீடு செய்யப்பட்டது. ஆனால், அனுமதியில்லாமல் கட்டப்பட்ட இந்தக் கட்டிடத்தின் மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

24வது வார்டில் வயது முதிர்வின் காரணமாக 4 தொழிலாளர்கள் ஓய்வு பெற்று ஒரு வருட காலமாகிறது. காலி பணியிடங்களை நிரப்ப ஒப்புதல் வழங்கப்பட்டும் நடவடிக்கை எடுக்கவில்லை. தகுந்த நடவடிக்கை தேவை.

கழிவுநீர் லாரிகள்

புழல் பகுதியில் இரவு நேரங்களில் கழிவுநீர் லாரிகள், மழைநீர் வடிகால்வாய்களில் கழிவு நீரினை விடுகிறார்கள். பல முறை தெரிவித்தும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை.

மழை நீர் வடிகால்வாய்

2023–ஆம் ஆண்டில் State Highways ரூ. 7.00 கோடி செலவில் மழைநீர் வடிகால்வாயினை கட்டினார்கள். அதை உடைத்து விட்டு,

தற்போது MRH சாலையில் ரூ. 22.00 கோடி மதிப்பீட்டில் மழை நீர் வடிகால்வாய் கட்டப்படுகிறது. இதனால் அரசுக்கு ரூ. 30.00 கோடி இழப்பீடு ஏற்பட்டுள்ளது.

MRH சாலையில் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பகுதியில் அங்கிருந்து வரும் மழைநீர் ஏரியா முழுவதும் . . . .

ஆணையர்

இரண்டு வாரங்களுக்கு முன்பு வட்டார துணை ஆணையர், பொறியாளர்கள், நெடுஞ்சாலை துறை, City Gas Pipe Line, TANGEDCO துறை அதிகாரிகள் ஆகியோர் இணைந்து இரண்டு வாரத்திற்கு முன்பு கள ஆய்வு மேற்கொண்டோம். மீண்டும் கள ஆய்வு மேற்கொள்ளப்படும். அடுத்த கள ஆய்வின் போது மாமன்ற உறுப்பினரையும் அழைத்து தொழில்நுட்ப கருத்துகளை விளக்குவோம்.

இப்பணிகள் நெடுஞ்சாலை துறையினரால் மேற்கொள்ளப்படுகின்றன. இப் பணி நெடுஞ்சாலை துறை சார்ந்தது; அவர்களால் Design வடிவமைக்கப்பட்டு, மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, அரசின் ஆணைக்கிணங்க பேரிடர் மேலாண்மை நிதி மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி இப் பணியினை மேற்கொள்கிறது.

திரு.ஏ. சேட்டு

MRH சாலையின் உயரத்தை அதிகப்படுத்தினால் மழைநீர் தேங்கும் பிரச்சனை தீரும். 40 அடி சாலையில் 20 அடி கால்வாய் அமைத்து, மூன்று கிளைகளாக பிரித்து, கொசஸ்தலையாற்றில் கலக்குமாறு செய்ய வேண்டும். வட்டார துணை ஆணையர் மற்றும் அதிகாரிகள் இந்த இடத்தினை ஆய்வு மேற்கொண்டனர். ஆனாலும், MRH சாலையில் கால்வாய் கட்டி மேடு பகுதிகளாக மாற்றப்படுகிறது.

UPHC மருத்துவமனை

24வது வார்டில் டயாலிஸிஸ் Machine நிறுவி தர வேண்டுமென்று நீண்ட நாட்களாக கோரிக்கையினை முன் வைத்து வருகிறேன். தகுந்த நடவடிக்கை தேவை. புழல் காந்தி பிரதான சாலையில் JK மஹால் திருமண மண்டபம் மற்றும் Tennis Court உள்ளது. அதற்குள் Bar

நடத்தப்படுகிறது என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மழைநீர் தேக்கம்

ரெட்டேரியிலிருந்து வரும் உபரிநீரை வெளியேற்ற வழிவகை காண வேண்டும். V.S. நகர், மணி நகர், பாலாஜி நகர் மற்றும் வெஜிடேரியன் நகர் பகுதிகளில் மழைக்காலங்களில் மழைநீர் தேங்காமல் இருப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

24வது வார்டில் TANGEDCO மின்கம்பங்கள் பழுதடைந்துள்ளது தொடர்பாக தெரிவித்துள்ளீர்கள். தாங்கள் கடிதம் அளித்தால் TANGEDCO துறைக்கு கடிதம் அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

புழல் ஏரி நீர்வளத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. கடிதம் அளித்தால் சம்பந்தப்பட்ட துறைக்கு கடிதம் அனுப்பி நடவடிக்கை எடுக்கப்படும்.

தார் விலையேற்றம் காரணமாக சாலை அமைக்கும் பணி தாமதம் அடைந்துள்ளது.

தடையின்மை சான்றிதழ் (NOC) வழங்கப்பட்ட சாலைகளின் பட்டியலை மண்டல அலுவலரிடம் வழங்க வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன். மண்டல அலுவலர் ஆய்வு செய்து சாலை பணியினை துவக்குவார் என தெரிவித்து கொள்கிறேன்.

தாங்கள் குறிப்பிட்ட அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

NULM பணியாளர்கள் நியமனம் தொடர்பாக மாமன்ற உறுப்பினர் அவர்கள் பேசியது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மழைநீர் வடிகால்வாய்களில் கழிவுநீரினை விடுவது தொடர்பான தவறுகள் பல இடங்களில் நடைபெற்று வருகின்றன. இது தொடர்பாக தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். மாமன்ற உறுப்பினர் அவர்கள் புகைப்படம் எடுத்து, வாகனத்தின் எண்ணுடன் காவல் துறைக்கு புகார் அளித்தால் வாகனம் பறிமுதல் செய்யப்படும்.

UPHC மருத்துவமனைக்கு Rotary Club மூலம் டயாலிஸிஸ் Machine ஏற்பாடு செய்ய பரிந்துரை செய்யப்படும்.

MRH சாலை தொடர்பான தொழில்நுட்ப கருத்துகளை கள ஆய்வின் போது தெரிவிக்கவும்.

JK மஹாலில் Bar உள்ளது தொடர்பாக சம்பந்தப்பட்ட துறைக்கு நேரடியாக மனு கொடுக்க வேண்டும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு.ந. அதியமான் அவர்கள், வார்டு எண்.105.

திரு. ந. அதியமான்

செவிக்கு உணவு இல்லாத போது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும் என கூறினார் திருவள்ளுவர். பலர் வயிற்றிற்கு உணவருந்தி விட்டு வந்திருக்கிறார்கள். பலருக்கு செவிக்கு உணவு இங்கே கிடைக்கின்ற காரணத்தினால், இன்னும் உணவு கூட அருந்தாமல் இந்த மன்றத்தில் அமர்ந்திருந்து, செவிமடுத்து கொண்டிருக்கிறார்கள். இந்தத் திருக்குறளை இந்த உலகிற்கு சொன்னவர் வள்ளுவன்.

" வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு" வான் புகழ் கொண்ட தமிழ்நாடு வள்ளுவனை இந்த உலகினுக்கே தந்தது. அந்த உலகினை தந்த தலைவனுக்கு இணையாக டாக்டர் அம்பேத்கர் அவர்களின் புகைப்படத்தை இந்த மன்றத்திலே வைத்து, உலக அரங்கிலே திருவள்ளுவருக் இணையானவர் டாக்டர் அம்பேத்கர் என்று நிலைநாட்டிய இந்த மன்றத்திற்கு முதற்கண் எனது வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

ஈராயிரம் ஆண்டின் முன்னும் இன்று போல் இளையவளாய் இருந்திட்ட தமிழாம் அன்னை நூறாயிரம் கோடி என ஆண்டு பல வாழ்வதற்கு

நூலாயிரம் செய்திட்ட புலவர்களை ஈன்றாள் எனினும்; கலைமகளாம் நம் அன்னை வள்ளுவனை தலைமகனாய் பெற்றெடுத்தாள். அந்த வள்ளுவனை ஈன்றெடுத்த அன்னை தமிழுக்கு என் மறு வணக்கம்.

கருத்தனிலே கண் விழித்து, கழனியிலே கூழ் குடித்து, என்றும் வறுமையென்று வேர் பிடித்து கொண்டிருந்த மக்களின் வாட்டம் போக்க, இந்த நாட்டில் அடிமையென்று எவரும் கிடையாது, நீ மண் அன்று, மனிதன். விழி எழு நட, மானமும், அறிவும் மனிதனுக்கு அழகு என்று இந்த மக்களுக்கு உணர்த்தி, உன்னுடைய நாடு என்று நம்மை ஏற்றி போற்றி, இந்த மன்றத்திற்கு அனுப்பி வைத்த தந்தை பெரியார் அவர்களுக்கு என்னுடைய வணக்கம்.

பிறரை மதிக்க கூடிய ஒரு மாண்பினை நமக்கு கற்று தந்த பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு வணக்கம். இவ்விரண்டையும் கலவையாக்கி, பெரியார் தந்த சாட்டையை ஒரு கையிலேயும், அண்ணா தந்த நாகரீகத்தை ஒரு கையிலேயும் பிடித்து, பன்னெடுங்காலம் அழுந்தி கிடந்த இந்தத் தமிழ்நாட்டை ஒரு சீரான சிற்பியாக மாற்றி தந்த டாக்டர் கலைஞர் அவர்களுக்கு வணக்கம்.

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, தமிழ்நாடு மருத்துவ துறையில் முதலிடம், பொருளாதாரத்தில் முதலிடம், கல்வி துறையில் முதலிடம், போக்குவரத்து துறையில் முதலிடம், தொழில்துறையில் முதலிடம் என அனைத்து துறைகளிலும் முன்னிலை வகிக்கிறது. திரும்பி பார்க்கும் இடங்களில் எல்லாம் பாலங்கள், கன்னியாகுமரி முதல் சென்னை வரை நேர்த்தியான சாலைகள், எந்தத் தொழிற்சாலையும் தமிழ்நாட்டிற்கு வர முடியும் என்கிற நிலையை உருவாக்கி தந்தவர் எங்கள் தலைவர். இப்படிப்பட்ட தலைவரிடம் நாங்கள் பணியாற்றி வருகிறோம் என்பதை நினைக்கும் போது, எங்களுக்கெல்லாம் உள்ளபடியே திராவிட முன்னேற்ற கழக தொண்டர்கள் என்கிற பெருமை பெருகுகிறது. இதனை மிகப் பெரிய பெருமையாக கருதுகிறோம். திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு என்னுடைய வணக்கம்.

105வது வார்டில் நான்கரை ஆண்டுகளில் பல மக்கள் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டன. பல பணிகளுக்கான அடித்தளத்தை அமைத்து கொடுத்த பணிகள் நிலைக்குழு தலைவரும், சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் திரு. நே. சிற்றரசு அவர்களுக்கு நன்றி.

நான் இந்த மன்றத்திற்கு வருவதற்கு வாய்ப்பினை அமைத்து கொடுத்தவர் எங்களது ஆளுங்கட்சி தலைவர் அவர்கள். கடந்த 40 ஆண்டுகளாக அவருடைய நிழலில் நடந்து கொண்டிருப்பவன் நான்.

அதற்காக நான் அவருக்கு என் நன்றியை தெரிவித்து கொள்கிறேன். அண்ணாநகர் தொகுதி இன்றைக்கு சீரும் சிறப்புமாக உள்ளது. அதற்கு காரணம் அண்ணாநகர் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்த திரு. எம்.கே. மோகன் அவர்கள். அவருக்கும் என் நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

105வது வார்டில் 75 சதவிகித பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதற்காக மாண்புமிகு மேயர் மற்றும் மதிப்பிற்குரிய துணை மேயர் ஆகியோர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். சில பணிகள் இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அவற்றை நிச்சயமாக நிறைவேற்றுவீர்கள் என்கிற நம்பிக்கையில் இதனை இங்கு தெரிவிக்கிறேன்.

ரசாக் கார்டன் தெரு – மழைநீர் பிரச்சனை

ரசாக் கார்டன் 40 அடி தெரு, பூந்தமல்லி நெடுஞ்சாலையிலிருந்து மழைநீர் செல்லும் வழி. இந்த வழியாக தான் மழைநீர் செல்லும். அந்த இரண்டு சாலைகளையும் இணைக்கும் கல்வெட்டு பிரீக்கான் பிளாக் மூன்று ஆண்டுகளாக புதைக்கப்படாமல் கிடப்பில் உள்ளது. புதைக்கப்பட்டால் வைஷ்ணவா கல்லூரி பகுதியிலிருந்து வரும் மழைநீர் ரசாக் கார்டன் செல்லாமல், வடிகால்வாய் வழியாக நல்லாற்றில் சென்று சேரும். நெடுஞ்சாலை துறை மற்றும் காவல் துறை ஒத்துழைப்பு இல்லாததால் பணி நிலுவையில் உள்ளது. தகுந்த நடவடிக்கை தேவை.

மாண்புமிகு மேயர்

வட்டார துணை ஆணையர் அவர்கள் இதனை கவனத்தில் கொண்டு, நெடுஞ்சாலை துறையிடம் பேசி விரைவாக இப் பணியை முடிக்க வேண்டும்.

பூந்தமல்லி நெடுஞ்சாலை – போக்குவரத்து நெரிசல்

வைஷ்ணவா கல்லூரி, அண்ணா ஆதர்ஷ் கல்லூரி, கிருஷ்ணசாமி கல்லூரி, கோல பெருமாள் பள்ளி, முகம்மது சதக் பள்ளி, அண்ணா ஆதர்ஷ் பள்ளி என பல கல்வி நிறுவனங்கள் உள்ளன. மதியம் 2.30, மாலை 5.00 – கடுமையான போக்குவரத்து நெரிசல். முன்னாள்

சட்டமன்ற உறுப்பினர் திரு. எம்.கே. மோகன் அவர்களின் முயற்சியினால் Ampa – Skywalk எதிரில் Iron Bridge அமைக்கப்பட்டது. அந்த Iron Bridge போலவே, வைஷ்ணவா கல்லூரி நடுவங்கரை Bridge எதிரில் அமைத்து கொடுக்கப்பட வேண்டும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

தினசரி 5000–10000 பேர் இந்தப் பகுதி னை கடந்து செல்கின்றனர். நெடுஞ்சாலை துறை அமைச்சரிடம் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. அடுத்த நிதியாண்டில் Escalator உடன் நடைபாதை அமைத்து தர வேண்டும்.

திரு. ந. அதியமான்

வைஷ்ணவா கல்லூரி நிர்வாகம் 50% செலவு தொகையை ஏற்க தயாராக உள்ளது.

மாண்புமிகு மேயர்

நமக்கு நாமே திட்ட நிதியின் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்ட கோப்பினை தயார் செய்து அளிக்கும்படி வட்டார துணை ஆணையர் அவர்களை கேட்டு கொள்கிறேன்.

திரு. ந. அதியமான்

திருக்குமரபுரம் – பால பணி

தமிழர் வீதியில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஒப்பந்ததாரர் திரு. ஐயாதுரை என்பவரால் தொடங்கப்பட்டிருக்கும் பால பணி 10% பணி மட்டுமே முடிவடைந்துள்ளது; 90% பணி நிலுவையில் உள்ளது. பணி மிகவும் மெதுவாக நடைபெற்று வருகிறது. மழைக்காலம் நெருங்கி வருவதால் மக்கள் கடுமையான பிரச்சனைகளை சந்திக்க நேரிடும். பணி விரைந்து மேற்கொள்ள தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரும்பாக்கம் – விளையாட்டு மைதானம்

திருவீதியம்மன் கோயில், படவட்டம்மன் கோயில் தெரு மற்றும் அம்பேத்கர் தெரு பகுதி மக்கள் 60 ஆண்டுகளாக பூந்தமல்லி நெடுஞ்சாலையை ஒட்டியுள்ள சிம்ஸ் பார்க் பக்கத்தில் உள்ள மைதானத்தில் கால்பந்து விளையாடி வருகின்றனர். பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை துறை Double Truck Trolly மற்றும் கட்டுமான பொருட்கள் அங்கு வைக்கப்பட்டுள்ளதால் விளையாட முடியவில்லை. பணி முடிந்த பின், காலியாக உள்ள இடத்தில் விளையாட ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

மகாத்மா காந்தி தெரு, பாரதிதாசன் தெரு, அம்பேத்கர் தெரு, அன்னை சத்தியா நகர் ஆகிய தெருக்களில் சாலை அமைக்க சட்டமன்ற தேர்தலுக்கு முன்னர் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பின் ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டுள்ளது. இந்தச் சாலைகளை விரைந்து சீரமைத்து தர வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி வழங்கப்பட வேண்டும்.

(மாண்புமிகு மேயர் அவர்கள் மீண்டும் இருக்கையில் அமர்தல்)

சென்னையில் பேனர்கள் அதிக அளவில் வைக்கப்பட்டுள்ளன. இதற்கு ஒரு கட்டுப்பாடு வேண்டும். அ.இ.அ.தி.முக ஆட்சியில், வேளச்சேரியில் Banner விழுந்ததால் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

மாண்புமிகு மேயர்

இருசக்கர வாகனங்களில் குழந்தைகளை பள்ளிக்கு அழைத்து செல்லும் பெண்களுக்கும், பொதுமக்களுக்கும் இவை அச்சுறுத்தலாக உள்ளன. அனைத்து மண்டல அலுவலர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பி Banners Remove செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு. ந. அதியமான்

பட்டா வழங்கல் – நிலுவை

திருவீதியம்மன் கோயில் தெரு, படவட்டம்மன் கோயில் தெரு, அம்பேத்கர் தெரு, விநாயகபுரம் ஆகிய இடங்களில் பட்டா வழங்க ஒன்றரை ஆண்டுகளுக்கு முன் கணக்கெடுக்கப்பட்டது. பின் கிடப்பில்

போடப்பட்டது. மக்கள் எதிர்பார்த்து கொண்டிருக்கிறார்கள். தீர்க்கமான முடிவை துறை சார்ந்த அதிகாரிகள் எடுக்க வேண்டும்.

பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு.ஜே. ஜான் அவர்கள், வார்டு எண்.84.

திரு. ஜே. ஜான்

முன்னாள் முதலமைச்சரும், கழக பொது செயலாளருமான திரு.எடப்பாடி பழனிச்சாமி அவர்களுக்கு எனது வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன். இந்த மன்றத்தை தலைமையேற்று நடத்தி கொண்டிருக்கும் மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, ஆணையர் அவர்களே, அனைத்து மாமன்ற உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் எனது மதிய வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

வகுப்பறை கட்டிடம்

கடந்த 4 ஆண்டுகளாக கோரிக்கை வைக்கப்பட்டும், 84ஆவது வார்டு மேல்நிலைப்பள்ளிக்கு வகுப்பறை கட்டிடம் இல்லை. மாணவர்கள் வெளியில் மரத்தடியில் அமர்ந்து பயின்று வருகின்றனர்.

மாண்புமிகு மேயர்

நிதி ஒதுக்கீட்டு விவரங்களை பார்த்து தகவல் தருகிறேன்.

திரு. ஜே. ஜான்

மாணவர் சேர்க்கை பிரச்சனை

சென்னை பள்ளிகளில் மாணவ, மாணவியர்கள் சேர்க்கைக்காக வருகின்ற போது, ஒரு தேர்வு நடத்தி, அந்தத் தேர்வில் குறைந்த மதிப்பெண் பெற்றதை காரணமாக காட்டி, சென்னை பள்ளிகளில் சேர்க்க மறுப்பு தெரிவிக்கின்றனர்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

உடனடியாக பள்ளிகளில் சேர்க்கை வழங்கி, மாணவ, மாணவியர்கள் தேர்ச்சி அடைய வழி வகை செய்ய வேண்டும்.

மாண்புமிகு மேயர்

இது தொடர்பாக கல்வி அலுவலர் சுற்றறிக்கை அனுப்ப வேண்டும்.

திரு. ஜே. ஜான்

84வது வார்டில் மழைநீர்வடிகால்வாய் பணி இரண்டு ஆண்டுகளுக்கு முன் பூஜை போடப்பட்டும் பணிகள் துவங்கப்படவில்லை.

மாண்புமிகு மேயர்

ஆய்வு செய்து விரைவில் பணிகள் துவங்கப்படும்.

சாலை அமைப்பு

84வது வார்டில் 40 தெருக்களில் சாலை அமைக்கப்படவில்லை. விரைவாக தார் சாலை அமைத்து தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

தார் விலை உயர்வு குறித்து ஒப்பந்ததாரரிடம் பேசி தீர்வு காண வேண்டும்.

திரு. ஜே. ஜான்

NULM ஊதியம் ரூ.12,000/–லிருந்து ரூ.24,000/– உயர்த்தப்பட்டது. இதற்காக எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன். ஆனால்,

அம்மா உணவகத்தில் பணிபுரியும் பணியாளர்கள் தினந்தோறும் 325 ரூபாய் மட்டுமே சம்பளமாக பெற்று வருகின்றனர். குறைந்த சம்பளத்தில் இவர்கள் பணியாற்றி வருகிறார்கள். எனவே, இவர்களது சம்பளம் உயர்த்தி தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒரு சில அம்மா உணவகங்களில் மேற்கூரை உடைந்த நிலையில் உள்ளன. சுத்திகரிக்கப்பட்ட குடிநீர், கிரைண்டர், மிக்சி வசதி இல்லை. தகுந்த நடவடிக்கை தேவை.

மாண்புமிகு மேயர்

பழுதடைந்த அம்மா உணவகங்களில் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விடுபட்ட விவரங்களை தெரிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

SMC நிதி தொடர்பாக மக்கள் பிரதிநிதிகளாகிய மாமன்ற உறுப்பினர்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும்.

சுதந்திர தினத்திற்கு மக்கள் பிரதிநிதிகளாகிய மாமன்ற உறுப்பினர்களும், குடியரசு தினத்திற்கு அலுவலர்களும் கொடி ஏற்றுவது தொடர்பாக சுற்றறிக்கை அனுப்ப வேண்டும்.

குடிநீர் விநியோகம்

பட்டரவாக்கம், கொரட்டூர் பகுதிகளில் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை விநியோகம் செய்து வந்த குடிநீர், தற்போது 4 நாட்களுக்கு ஒருமுறை மட்டுமே விநியோகிக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு மேயர்

சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தில் தெரிவித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ஜே. ஜான்

பெருநகர சென்னை மாநகராட்சி இந்தியாவின் முதல் மாநகராட்சியாகும். இம்மாநகராட்சிக்கு தன்னாட்சி அதிகாரம் இருந்தது.

ஆனால், தற்போது அந்தத் தன்னாட்சி அதிகாரம் இல்லை. எனவே, இந்த அதிகாரத்தை மீண்டும் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

எதிர்காலத்தில் **தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023**–னை ரத்து செய்து, தன்னாட்சி அதிகாரத்தினை மீண்டும் கொண்டு வருவதற்கான பொருள் கடைசி கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, தீர்மானம் நிறைவேற்றலாம்.

திரு.ஜே. **ஜான்**

பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

அடுத்து, மரியாதைக்குரிய மாமன்ற உறுப்பினர் திரு.ம.சாமுவேல் திரவியம் அவர்கள், வார்டு எண்.6.

திரு.ம.சாமுவேல் திரவியம்

பெருந்தலைவர் காமராஜர் ஐயா அவர்களை வணங்கி, இந்திய திருநாட்டின் ஒப்பற்ற தலைவரும், மாணவர்கள், இளைஞர்கள் நலன் கருதி அவர்களுக்காக போராடி இரத்தம் சிந்தி உழைத்து கொண்டிருக்கின்ற பாராளுமன்ற எதிர்கட்சி தலைவர் மாண்புமிகு திரு. ராகுல்காந்தி அவர்களையும் வணங்கி, தமிழ்நாட்டில் லஞ்சத்தை ஒழிப்பதில் தீவிர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதை வரவேற்று மற்றும் பள்ளி மாணவர்களுக்கான காலை உணவு திட்டத்திற்கு "பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டம்" என

பெயரிடப்பட்டுள்ளதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியினை தெரிவித்து கொள்கிறேன்.

லஞ்சம் தவிர், நெஞ்சம் நிமிர் என்கிற கொள்கையுடன் தமிழ்நாட்டு மக்களின் நலனில் அக்கறை கொண்டு அவர்களுக்காக உழைத்து கொண்டிருக்கின்ற தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் திரு. மாணிக்கம் தாகூர் அவர்களை வணங்கி, மாண்புமிகு மேயர், மதிப்பிற்குரிய துணை மேயர், மரியாதைக்குரிய ஆணையர், மற்றும் சக மாமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் அனைவருக்கும் எனது வணக்கத்தினை தெரிவித்து கொண்டு எனது உரையை துவக்குகிறேன்.

மாமன்ற உறுப்பினர்களின் வார்டு மேம்பாட்டு நிதி ரத்து செய்யப்பட்டதாக மாமன்ற உறுப்பினர்கள் பேசினர். F.M. Unit–ல் நான் சென்று விசாரித்த போது, நிதி ரத்து செய்வது தொடர்பாக எந்த ஒரு அறிவிப்பும் வரவில்லை என்று தெளிவாக தெரிவித்துள்ளனர். எனவே, தவறான தகவல்கள் பரப்பப்படுகின்றன என்பதை தெரிவித்து கொள்கிறேன். **(அவையில் சலசலப்பு)**

மாண்புமிகு மேயர்

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி ரத்து செய்யப்பட்டுள்ளதாக எந்த ஒரு மாமன்ற உறுப்பினரும் பேசவில்லை. மாமன்ற உறுப்பினர்களின் வார்டு மேம்பாட்டு நிதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் தொடர்பாக மாமன்ற உறுப்பினர்கள் கடிதம் கொடுத்தாலும், அதிகாரிகள் அப்பணிகளுக்கான மதிப்பீடுகள் தயாரித்து வழங்கவில்லை என்று தான் மாமன்ற உறுப்பினர்கள் கூறினார்கள்.

(அவையில் சலசலப்பு)

திரு.ம.சாமுவேல் திரவியம்

நான்கு மணி நேரம் மற்ற மன்ற உறுப்பினர்கள் பேசும் போது நான் குறுக்கிட்டு பேசவில்லை. நான் பேசும் போது மட்டும் இவர்கள் ஏன் குறுக்கிட்டு பேசுகிறார்கள். நான் பேசுவதற்கு மாண்புமிகு மேயர் அவர்கள் மட்டும் தான் பதில் அளிக்க வேண்டும்.

திரு. ந. இராமலிங்கம்

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி குறித்து மாமன்ற உறுப்பினர்கள் பேசி இருப்பது திரு.ம. சாமுவேல் திரவியம் அவர்களுக்கும் சேர்த்து தான். தாங்கள் கூறுவது போன்று யாரும் சொல்லவில்லை. அதிகாரிகள் இவ்வாறு பதிலளிப்பதாக மாமன்ற உறுப்பினர்கள் அவையில் விளக்கம் கேட்கிறார்கள். அவ்வளவு தான். மாமன்ற உறுப்பினர்கள் கேள்வி கேட்பது அவர்களது உரிமை.

(அவையில் சலசலப்பு)

மாண்புமிகு மேயர்

மாமன்ற உறுப்பினர்கள் அவரவர்களது இருக்கையில் அமரவும்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

மாமன்ற உறுப்பினர்கள் அவரவர்களது இருக்கையில் அமரவும்.

ஆணையர்

பெருநகர சென்னை மாநகராட்சியின் Capital Fund மூலமாகவே மாமன்ற உறுப்பினர்களுக்கான வார்டு மேம்பாட்டு நிதி வழங்கப்படுகிறது.

கடந்த வருடங்களில் வருவாய்க்கும், செலவிற்கும் Overall deficit என்று பார்த்தால் இன்றைய தினம் ரூ.1970 கோடி உள்ளது. மக்களுடைய தேவைகளை எடுத்து செல்வதற்கு, மாமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகள், பொதுமக்களின் கோரிக்கைகள், மேம்பாட்டு பணிகள், வெள்ள தடுப்பு பணிகள் எல்லாம் மிக முக்கியமாக எடுக்க வேண்டிய சூழ்நிலை அமைகிறது. ஆனால், இவ்வாறு ரூ.1970 கோடி Deficit–ல் இருக்கும் போது எவ்வாறு இந்த நிதி சூழலை கையாள்வது என்று கலந்தாய்வு செய்து ஒரு முடிவு எடுக்க வேண்டும்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் மாநகராட்சி நிதியினை சரிவர கையாள்வதற்கு நடவடிக்கை எடுத்து அதற்காக சொத்து வரி வசூலை அதிகரிக்க வேண்டும். சொத்து வரி குறைவாக மதிப்பிடப்பட்டுள்ள

இனங்களில் மறு மதிப்பீடு செய்து சொத்து வரி வசூலிக்கப்பட வேண்டும். மேலும், ஒப்பந்ததாரருக்கு வழங்க வேண்டிய பில் தொகை நிலுவையில் இருக்கிறது.

அதே போன்று, NULM பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்களின் ஊதிய தொகைக்கான பில்கள், மாநகராட்சி நிரந்தர பணியாளர்களின் சம்பள பில்கள், ஓய்வு பெறும் பணியாளர்களின் பணப்பயன்கள், ஓய்வூதியம் போன்றவை கொடுக்க வேண்டும். இன்னும் இந்த நெருக்கடி தொடரும் பட்சத்தில் நாம் கடன் பெற வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாவோம். இப்பொழுதே Green Bond, Municipal Bond– போன்ற ரூ.400 கோடிக்கும் மேல் கடன். Kfw–ல் கிட்டத்தட்ட ரூ.1746 கோடி கடன் மாநகராட்சிக்கு இருக்கிறது. இன்னும் கூடுதலாக கடன் பெற்றால் நமது Credit Rating குறைந்து பல்வேறு External Funded Projects நமக்கு கிடைக்க வேண்டியதும் கிடைக்காமல் போகும். இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு தான் நாம் ஒரு முடிவு எடுக்க வேண்டும்.

மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதி ரத்து செய்யப்படவில்லை. அது போன்ற எந்த ஒரு அரசாணையும் பிறப்பிக்கப்படவில்லை. ஆனால், மாநகராட்சியின் தற்போதைய நிதி நெருக்கடியில் இந்த இக்கட்டான சூழலில் இப்பணிகளை எடுப்பதில் சிரமம் உள்ளது. அதனால் சிறிது காத்திருக்க வேண்டும். இன்னமும் இரண்டு மூன்று மாதங்களில் நிதி சூழல் எவ்வாறு improve ஆகிறது என்று பார்த்து அதற்கேற்றவாறு இதற்கொரு முடிவெடுக்கலாம். முழுமையாக allocate செய்ய முடியாவிட்டாலும், முக்கியமான சில பணிகளை எடுக்க ஆலோசனை செய்யலாம்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களின் பதவி காலம் 7 மாதங்களே உள்ளன. அதற்குள்ளாக சில பணிகளை வார்டுகளில் முடித்தாக வேண்டும். கடன் சுமை அதிகமாக உள்ளதை ஏற்று கொள்கிறோம். ஆனால், மாமன்ற உறுப்பினர்களின் வார்டு மேம்பாட்டு நிதியினை விடுவித்து தர வேண்டும். ஒப்பந்ததாரர்களுக்கு உடனடியாக பணம் அளிக்க போவதில்லை. ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணி முடிக்கப்பட்ட பின்னரே ஐந்தாறு மாதங்கள் கழித்தே பணம் தர வேண்டி வரும். எனவே,

மாமன்ற உறுப்பினர்களின் வார்டு மேம்பாட்டு நிதியினை விடுவிக்க வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

மாண்புமிகு மேயர்

வரும் பிப்ரவரி மாதத்தோடு மன்ற உறுப்பினர் பதவி காலம் முடிவடைவதால் அதற்குள்ளாக பொதுமக்களின் கோரிக்கைகளுக்கேற்ப பணிகளை நிறைவேற்றி முடிக்க வேண்டும். இடையில் மழைக்காலம் வருவதால் இப்போது பணிகள் தொடங்கப்பட்டு வரும் ஜனவரி மாதத்திற்குள்ளாக முடிக்கப்பட வேண்டும் என்பது தான் மாமன்ற உறுப்பினர்கள் அனைவரின் கோரிக்கையாக உள்ளன. மேயர் என்கிற முறையில் நானும் இதனை தெரிவிக்கிறேன். முன்னதாக மாமன்ற உறுப்பினர்களின் வார்டு மேம்பாட்டு நிதி பணிகளுக்கு ஒப்புதலளிக்க வேண்டும். மாமன்ற உறுப்பினர்களின் ஐந்தாண்டு காலத்தின் வார்டு மேம்பாட்டு நிதி வாயிலான பணிகள் அவர்களது உரிமை என்பதனால் அதனை முன் வைக்கிறார்கள். அந்தந்த வார்டிற்குட்பட்ட அதிகாரிகள் பணிகளுக்கான ஒப்புதலை வழங்கினால் நலமாக இருக்கும் என்று தெரிவித்து கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

6வது வார்டு மாமன்ற உறுப்பினர் அவர்கள், அரசிடம் கோரிக்கை வைத்து ரூ.2000 கோடியினை பெற்று தர வேண்டும்.

திரு. ம. சாமுவேல் திரவியம்

சிறப்பாக பதிலளித்த ஆணையர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

நான் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் மாமன்ற தலைவர் என்கிற முறையில் சில கருத்துகளை தெரிவிக்க விரும்புகிறேன். 6வது வார்டில், 2024ல் மழையினால் வெள்ளம் வந்த போது, முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் காலத்தில் கொண்டு வந்த மழைநீர்வடிகால்வாய் திட்டத்தை, திராவிட மாடல் ஆட்சியில் நீங்கள் விரிவுபடுத்தினீர்கள். அப்போது மழைநீர்வடிகால்வாய்

அமைக்கப்பட்ட போது மழைநீர்வடிகால்வாயின் உட்புறம் கட்டைகள், கழிவுகள் இருந்தன. அவை அகற்றப்படாமல் இருந்தன. அன்றைக்கு நான் இந்தக் கருத்தை தெரிவித்தேன். அதே கருத்தினை பணிகள் நிலைக்குழு தலைவர் திரு. நே. சிற்றரசு அவர்களும் தற்பொழுது தெரிவித்துள்ளார்.

(அவையில் சலசலப்பு) (அவையில் மன்ற உறுப்பினர்கள் எழுந்து நின்று ஆட்சேப குரல் கொடுத்தல்)

மாண்புமிகு மேயர்

அவையில் மாமன்ற உறுப்பினர்கள் இருக்கையில் அமருங்கள். அமைதி காக்க வேண்டும்.

திரு. ம. சாமுவேல் திரவியம்

மாண்புமிகு மேயர் அவர்களே, 6-ஆவது வார்டில் கடந்த நான்கரை ஆண்டுகளில் சில பணிகள் நடைபெறவில்லை. அதற்காக இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஆணையர் அவர்களிடம் மனு கொடுத்தேன். தற்போது மாண்புமிகு மேயர் அவர்களிடமும் மனு கொடுத்திருக்கிறேன். குறிப்பாக 6வது வார்டில் மாமன்ற அலுவலகம் கிடையாது. கடந்த நான்கு ஆண்டுகளாக இது குறித்து தெரிவித்து வருகிறேன்.

அடுத்து நியாயவிலை கடை – சத்தியமூர்த்தி நகர் மற்றும் ஜே.ஜே.நகர் ஆகிய பகுதிகளில் மக்கள் ரேஷன் பொருட்கள் கொள்முதல் செய்வதற்காக மணலி விரைவு சாலையை தாண்டி செல்ல வேண்டி உள்ளது. இதனால் விபத்துகள் நடப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. எனவே, சத்தியமூர்த்தி நகர் நடுநிலைப்பள்ளி அருகில் 3 கிரவுண்ட் இடம் உள்ளது. அந்த இடத்தில் நியாயவிலைக்கடை கட்டி தர பல முறை கோரிக்கை வைத்துள்ளேன். எனவே, அதனை கட்டி தர வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

6வது வார்டில் காலியிடம் ஏதுமில்லை. முன்னாள் ஆணையர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு 65 ஏக்கர் நிலத்தின் வகைப்பாட்டினை

கண்டறிந்து தெளிவுபடுத்தி உள்ளார்கள். அந்த இடத்தை நாம் பயன்படுத்தலாம். அதற்கான வழி வகைகளை பார்க்க வேண்டும். தனியார் நிறுவனம் அவர்கள் சார்பில் விளையாட்டு மைதானம் அமைக்க முன் வருகிறார்கள். அதன் விவரத்தினை கடிதம் வாயிலாக நான் தெரியப்படுத்துகிறேன்.

அதே போன்று, 200 வார்டுகளிலும் மழையினால் அதிக அளவில் பாதிக்கப்படுவது 6வது வார்டு தான். 6வது வார்டில் 126 மீட்டர் நீளத்திற்கு மழைநீர்வடிகால்வாய் அமைக்கப்பட வேண்டுமென்று கடந்த 4 ஆண்டுகளாக கேட்டு கொண்டிருக்கிறேன். என்ன காரணத்தினாலோ பணி நிறுத்தப்பட்டுள்ளது. இது குறித்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

6-ஆவது வார்டு பகுதியில் பூங்கா கிடையாது. ஆனால், அம்பேத்கர் நகர் பகுதியில் பூங்காவிற்காக 85 சென்ட் இரயில்வே இடம் உள்ளது. அந்த இடத்தினை மாநகராட்சியின் மூலமாக சுத்தம் செய்து வைத்துள்ளோம். கடந்த வார்டுகுழு கூட்டத்தில் பூங்கா அமைக்கும் பணிக்காக ரூ.15 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டன. அதற்கு பிறகு தொடர் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதன் நிலை என்ன என்பதை தெரிவிக்க வேண்டும்.

எண்ணூர் பகுதி இரயில்வே நிலம் Boating place-ஆக மாற்றப்பட்டுள்ளது. நேதாஜி நகரில் பேருந்து நிறுத்தத்திற்காக இரயில்வே நிலத்தை பெற்று இருக்கிறார்கள். அதே போன்று 6வது வார்டு அம்பேத்கர் நகர் பகுதியில் உள்ள இரயில்வே நிலத்தில் பூங்கா அமைக்கும் பணிகள் மேற்கொள்ள ஆவன செய்ய வேண்டும். இதற்கென ஆணையர் அவர்கள் நேரில் கள ஆய்வு மேற்கொண்டு பணிகள் துவங்கப்பட வேண்டும்.

அதே போன்று அதன் அருகில் உள்ள வண்ணான்குளம்- கரை சுத்தம் செய்யப்பட்டு நடைபாதை அமைக்கப்பட வேண்டுமென்று பல முறை கோரிக்கை விடுத்துள்ளேன். மக்கள் பயன்பாட்டிற்காக இருக்கைகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும். 6 ஆவது வார்டில் இவ்விதமாக இடங்களே இல்லை. மேலும், குளத்தில் உள்ள ஆகாயத்தாமரை, சேறு சகதிகள் மழைக்கு முன்னதாக அகற்றப்பட வேண்டும். இதனால் வெள்ள பாதிப்பு ஏற்படாமல் காக்கப்படும்.

6 ஆவது வார்டில் சிறிய மழை பெய்தாலும் மழைநீர் தேங்குகிறது. பல பகுதிகளில் மழைநீர்வடிகால்வாய்கள் இல்லை. 6ஆவது வார்டில் இவ்வாறான மழைநீர் தேங்கும் பகுதிகளில் மழைநீர்வடிகால்வாய்கள் அமைத்து தர வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

அதே போன்று, அதிகாரிகள் வார்டுகளில் கள ஆய்வு செய்ய வந்தாலும், நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டாலும் மாமன்ற உறுப்பினருக்கு தகவல் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டு கொண்டு, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு மேயர்

நன்றி. அடுத்து, மரியாதைக்குரிய ஆளுங்கட்சி தலைவர் அவர்கள்.

திரு. ந. இராமலிங்கம்

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, துணை ஆணையர்களே, நிலைக்குழு தலைவர்களே, வார்டுகுழு தலைவர்களே, நியமனக்குழு உறுப்பினர்களே, அனைத்து கட்சிகளின் தலைவர்களே, மாமன்ற உறுப்பினர்களே, அனைத்து துறைகளின் அதிகாரி பெருமக்களே, பத்திரிகை மற்றும் ஊடக பிரிவு துறையை சார்ந்த நண்பர்களே உங்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தினை தெரிவித்து கொள்கிறேன்.

நான் முதல்வன் திட்டம்' 'திறன் தமிழ்நாடு' என்றும், 'மகளிர் விடியல் பயணம்' 'மகளிர் பயணம்' என்றும், முதலமைச்சரின் **காலை உணவு திட்டம் பெருந்தலைவர் காமராஜர் காலை உணவு திட்டம்" என பெயரிடப்பட்டுள்ளது.** பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்தநாளை 'கல்வி வளர்ச்சி நாள்' என்று திராவிட முன்னேற்ற கழக அரசு அரசாணை வெளியிட்டது. பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கு திராவிட முன்னேற்ற கழகம் போல் பெருமை சேர்த்த இயக்கம், தமிழ்நாட்டில் எதுவுமில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து கொள்ள விரும்புகிறேன். **(கைதட்டல்)**

மாண்புமிகு மேயர் அவர்களே, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்களே, மரியாதைக்குரிய ஆணையர் அவர்களே, கொடுங்கையூர் குப்பை கிடங்கு அருகே கட்டுமான கழிவுகளால் 75 சதவிகிதம் பக்கிங்காம் கால்வாய் தூர்ந்துள்ளது என்று பத்திரிக்கைகளில் செய்தி வருகிறது. இதனால், மழைக்காலத்தில் வடசென்னை பகுதியில் பெரும் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும். ஆகவே, உடனடியாக ஆய்வு செய்து கட்டுமான கழிவுகளை அகற்றிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தங்களை அன்புடன் கேட்டு கொள்கிறேன்.

அதே போல், பல்வேறு இடங்களில் நடைபெற்று வரும், மழைநீர் வடிகால்வாய்கள் அமைக்கும் பணிகள் முழுமையடையாமல் உள்ளது. அவற்றையெல்லாம், வரும் மழைக்காலத்திற்கு முன்பாக முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், மழைநீர் வடிகால்வாய்கள், மழைநீர் அதிகமாக செல்லும், விருகம்பாக்கம் கால்வாய், ஓட்டேரி நல்லா, கேப்டன் காட்டன் கால்வாய் போன்ற சென்னை நகருக்கு உட்பட்ட அனைத்து மழைநீர் கால்வாய்களையும் போர்க்கால அடிப்படையில் ஆகாய தாமரையை அகற்றி தூர் வாரும் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என கேட்டு கொள்கிறேன்.

அனைத்து அதிகாரிகளும் மாமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டுமென்று கேட்டு கொள்கிறேன்.

மேலும், வார்டுகளில் மேற்கொள்ள வேண்டிய சிறு, சிறு பணிகளுக்குண்டான நிதியினை அளிக்க வேண்டும். அதே போல், மாமன்ற உறுப்பினர்களின் வார்டு மேம்பாட்டு நிதியினையும் விடுவிக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டு கொண்டு அமைகிறேன், நன்றி, வணக்கம். **(கைதட்டல்)**

மாண்புமிகு மேயர்

நன்றி. அடுத்து, மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்.

மதிப்பிற்குரிய துணை மேயர்

மாண்புமிகு மேயர், மரியாதைக்குரிய ஆணையர், ஆளுங்கட்சி தலைவர், நிலைக்குழு தலைவர்கள், வார்டுகுழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், ஊடக துறை மற்றும் பத்திரிகை துறையினை சார்ந்த நண்பர்கள், மாநகராட்சி அலுவலர்கள் அனைவருக்கும் வணக்கம்.

ரூ.1940 கோடி பற்றாக்குறை. இதனை சரி செய்ய மாநகராட்சி என்ன திட்டங்கள் வைத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன். ஒப்பந்ததாரர்களுக்கு அளிக்க வேண்டிய ரூபாய் 2000 கோடி நிலுவையில் உள்ளன. ஒப்பந்ததாரர்களுக்கு மேலும் இரண்டாயிரம் கோடி பில் தயார் செய்ய வேண்டி உள்ளன என்று தெரிய வருகிறது. இதனால் மாநகராட்சி வளர்ச்சி பணிகள் பாதிக்கப்படுகின்றன.

Advance Tax வசூல்

சொத்து வரியில் ஐந்து ஆண்டுகளுக்கான Advance Tax வசூலிக்க திட்டமிடப்பட்டுள்ளது. சிறப்பு தள்ளுபடி அறிவிக்கப்பட்டால் மக்கள் அதிகம் வரி செலுத்த முன் வருவார்கள்.

சிறப்பு நிதி கோரிக்கை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று, மாநகராட்சியின் நிதிநிலைமையை சரி செய்ய, அரசிடமிருந்து ரூ.2000 கோடி சிறப்பு நிதி உடனடியாக பெற வேண்டும்.

மேம்பாலம் – வேளச்சேரி

பீனிக்ஸ் மால் அருகே போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டு அறிவிக்கப்பட்ட மேம்பால திட்டம் ரத்து செய்யப்பட்டதாக தகவல். அப்பகுதியில் பாலம் அவசியம் என்பதால் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த அரசின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்.

ஒப்பந்தங்கள் ரத்து

169வது வார்டில் நடைமேம்பாலம், 35 ஒப்பந்தங்கள் மிகைப்படுத்தப்பட்ட ஒப்பந்த தொகை காரணமாக ரத்து செய்யப்பட்டுள்ளன என்று தெரிய வருகிறது. சி.ஐ.டி.நகர், ஆரோக்ய மாதா நகர், தாமஸ் நகர் ஆகிய பகுதிகளில் நடைபாதை பணிகள் ரத்து செய்யப்பட்டுள்ளது. எனவே, அரசிடமிருந்து கூடுதல் நிதி பெற்று மீண்டும் இப் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகள் கோர வேண்டும்.

Limited Tender

வார்டு பணிகளுக்காக ரூ.20 இலட்சம் Limited Tenderல் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்க வேண்டும்.

அம்மா உணவகங்கள்

செலவினம் மற்றும் வருவாய்

இதுவரை அம்மா உணவகங்கள் ஆரம்பிக்கப்பட்டு ரூ.1446 கோடி செலவிடப்பட்டுள்ளன. அதே நேரத்தில் ரூ.305 கோடி வருவாய் மட்டுமே கிடைத்துள்ளது. மாநகராட்சிக்கு ஆண்டுதோறும் சுமார் ரூ.90 கோடி இழப்பு ஏற்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய அரசின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும்.

PMC (Project Management Consultant)

செலவினம்

PMC மூலம் பணிகள் கண்காணிக்கப்படுவதால் மாநகராட்சிக்கு நூறு கோடிக்கும் மேலான கூடுதல் செலவுகள் ஏற்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி மூலம் பணி நேர் செய்யப்பட்டு, மாநகராட்சியிலிருந்து பணத்தினை பெற்று கொண்டும், ஒப்பந்ததாரர்களிடமிருந்தும் பணத்தை பெற்று கொண்டு, களத்திற்கு சென்று ஆய்வு செய்யாமல், கோப்பில் PMC கையொப்பம் இடப்படுகின்றது என ஒப்பந்ததாரர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். எனவே, மாநகராட்சியில் ஓய்வு பெற்ற சிறந்த பொறியாளர்களை ஒப்பந்த முறையில் பணியமர்த்தி, பணிகளை

நேரடியாக கண்காணிக்க வேண்டும். PMC முறையை முழுமையாக மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

விளம்பர பேனர்கள்

அனுமதி அளிக்கப்பட்டவை

15 மண்டலங்களில் மொத்தம் **1085 விளம்பர பேனர்கள்** அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சிறிய கட்டிடங்களில் பெரிய பேனர்கள் அமைக்கப்பட்டால் பொதுமக்களுக்கு அபாயம் ஏற்படும். இதற்கான ஆய்வை மேற்கொள்ள விழிப்புணர்வு குழு அமைக்கப்பட வேண்டும்.

வாழ்த்துகள்

பணி மூப்பின் காரணமாக ஓய்வு பெற உள்ள தலைமை பொறியாளர் திருமதி. ராஜேஸ்வரி அவர்களுக்கு வாழ்த்துகள் மற்றும் நன்றிகள்.

ஆணையர்

தமிழ்நாடு நிதித்துறை 05.12.2025 அன்று வெளியிடப்பட்ட **அரசாணை எண்.262** மூலம், குறைந்த மதிப்பீட்டிலான கொள்முதல் (*Low Value Procurement*) நடைமுறைகள் ஒருங்கிணைக்கப்பட்டு எளிமைப்படுத்தப்பட்டுள்ளன. இதனை அடிப்படையாக கொண்டு, 10.06.2026 அன்று சுற்றறிக்கை வெளியிடப்பட்டு, **Limited Tender** விதிமுறைகளை பின்பற்றுதல் தொடர்பாக துறைகள் ஒரே மாதிரியாக செயல்பட வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு மேயர்

Limited Tenderல், மேற்படி சுற்றறிக்கையினை அடிப்படையாக கொண்டு வட்டார துணை ஆணையர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானங்கள்.

ம.அ.8.ந.க.எண்.4421/2026

தீர்மான எண்: 273/2026 **பொருள் எண்.01**

பெருநகர சென்னை மாநகராட்சி – மண்டலம் – 8 (அண்ணா நகர்), கோட்டம் – 108, ஸ்பெர்டாங் சாலையில் உள்ள பழைய மத்திய தார் கலவை நிலையத்தில் உள்ள தரக்கட்டுப்பாட்டு அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் – 8 (அண்ணா நகர்), பகுதி–23, கோட்டம் –108, ஸ்பெர்டாங் சாலையில் உள்ள பழைய மத்திய தார் கலவை நிலையத்தில் உள்ள தரக்கட்டுப்பாட்டு அலுவலக கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது. மேலும், இக்கட்டிடத்தை இடித்து புதியதாக தரக்கட்டுப்பாட்டு கட்டிடம் அமைக்க தரக்கட்டுப்பாட்டு துறை மூலமாக 25.02.2026 அன்று கடிதம் வரப்பெற்றது.

எனவே இந்த கட்டிடம் மிகவும் பழுதடைந்து உள்ளதால் இந்த பழுதடைந்த கட்டிடத்தை இடித்து அகற்ற வேண்டியது அவசியமான பணியாக உள்ளது.

இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம்

1	இடிக்கப்படவுள்ள கட்டிடத்தின் புத்தக மதிப்பு	ரூ.6223.626/–
2	இடிக்கப்படவுள்ள கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு	1963ஆம் ஆண்டு
3	இடிக்கப்படவுள்ள கட்டிடத்தின் பரப்பளவு	4318.723 ச.அடி
4	கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா ?	ஆம்
5	கட்டிடம் இடித்த பின்பு எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.	தரக் கட்டுப்பாட்டு அலுவலக கட்டிடம்
6	இடிப்பதற்கு அவசியம் என்ன?	பழுதடைந்த நிலையில் உள்ளதால்

எனவே, மண்டலம் – 8 (அண்ணா நகர்), பகுதி– 23, கோட்டம் – 108 ஸ்பெர்டாங் சாலையில் உள்ள பழைய மத்திய தார் கலவை நிலையத்தில் உள்ள தரக்கட்டுப்பாட்டு அலுவலக கட்டிடத்தை இடித்து அகற்ற, நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"22.07.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.56/2026, நாள்.22.07.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ந.து.ந.க.எண்.D1/0007/2026

தீர்மான எண்: 274/2026 **பொருள் எண்.02**

தானப்பத்திரம்

மண்டலம்-06, கோட்டம்-71ல் Mr.S. Narender அவர்கள் New Door No.70, Old Door No.114, Madhavaram High Road, Perambur, Chennai-600011 comprised in R.S.No.2/11A as per patta Old R.S.No.2/11A Part, T.S.No.101, Block No.12 of Siruvallur Village, Kolathur Taluk, Chennaiல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி PPA/WDCN06/00923/2026, நாள்:14.02.2026ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-06ல் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பதாரர் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 223.00ச.மீ ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 12.80மீ அகல Madhavaram High Road அமையபெற்றுள்ளது. Madhavaram High Road சென்னை பெருநகர பகுதிக்கான இரண்டாம் முழுமை திட்டத்தின்படி 24.00மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 33.75ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர் Mr. S. Narender அவர்களிடமிருந்து New Door No.70, Old Door No.114, Madhavaram High Road, Perambur, Chennai - 600011 comprised in R.S.No.2/11A as per patta Old R.S.No.2/11A Part, T.S.No.101, Block No.12 of Siruvallur Village, Kolathur Taluk, Chennai, Division - 71, Zone - 6ல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 33.75ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.07.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.34/2026,நாள்.24.07.2026ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ந.து.ந.க.எண்.D1/0009/2026

தீர்மான எண்: 275/2026 **பொருள் எண்.03**

தானப்பத்திரம்

மண்டலம்-06, கோட்டம்-76ல் Mr. N. Shantilal அவர்கள் New Door No.51/25, Old Door No.16/17, Strahans Road, Perambur Barracks, Chennai - 600012 comprised in R.S.No.2356 as per patta R.S.No.2356/29, Block No.37 of Purasaiwalkam Village, Purasaiwalkam Taluk, Chennai Districtல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி PPA/WDCN06/01142/2026, நாள்:21.02.2026ன்படி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-06ல் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பதாரர் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 108.00 ச.மீ ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 17.07 மீ அகல Strahans Road அமையபெற்றுள்ளது. Strahans Road சென்னை பெருநகர பகுதிக்கான இரண்டாம் முழுமை திட்டத்தின்படி, 24.00 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 23.18 ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே , மனை உரிமையாளர் Mr. N. Shantilal அவர்களிடமிருந்து New Door No.51/25, Old Door No.16/17, Strahans Road, Perambur Barracks, Chennai - 600012

comprised in R.S.No.2356 as per patta R.S.No.2356/29, Block No.37 of Purasaiwalkam Village, Purasaiwalkam Taluk, Chennai District, Division - 76, Zone - 06ல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 23.18ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "24.07.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.35/2026,நாள்.24.07.2026ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ந.து.ந.க.எண்.D2/00907/2026

தீர்மான எண்: 276/2026 **பொருள் எண்.04**

பெருநகர சென்னை மாநகராட்சி – நகரமைப்புத் துறை – சென்னை அடையார், சர்தார் படேல் சாலையில் அமைந்துள்ள M/s.CANCER INSTITUTE (WIA) கூடுதலாக கட்டிடம் கட்ட அனுமதி கோரியது – பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய தொகையிலிருந்து விலக்கு அளிக்கவும் – தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகையிலிருந்து விலக்கு அளிக்க அவ்வாரியத்திற்கு பரிந்துரை கடிதம் அனுப்ப மன்றத்தின் அனுமதி.

சென்னை அடையார், சர்தார் படேல் சாலை, புதிய எண்.38, பழைய எண்.18ல் அமைந்துள்ள M/s.CANCER INSTITUTE (WIA) என்ற நிறுவனம் கூடுதல் கட்டிடம் கட்டுவதற்காக திட்ட அனுமதி வேண்டி CMDAவில் விண்ணப்பித்ததை தொடர்ந்து சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் (CMDA) எண்.PP/INST/S(B2)/285/2022, 23-01-2026 நாளிட்ட கடிதத்தின்படி, சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் (CMDA) திட்ட அனுமதி வழங்கப்பட்டு கட்டிட அனுமதிக்காக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அனுப்பப்பட்டது. இதனை தொடர்ந்து பெருநகர சென்னை

மாநகராட்சிக்கு உரிய கட்டணம் செலுத்த வேண்டி கேட்பு அறிக்கை 08-04-2026 அன்று அந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

இந்நிலையில் CANCER INSTITUTE (WIA) Adyar நிறுவனம் ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களுக்கு 06-05-2026 அன்று அளித்த கடிதத்தில் கீழ்கண்டுள்ளவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"As you may already know, Cancer Institute (WIA) located in Adyar, was established in 1954 by Dr.Muthulakshmi Reddy – the first women in India to Graduate in medicine. We are a not for profit, charitable institution committed to the care of underprivileged cancer patients over the last 7 decades. Dr.S.Krishnamurthi (son of Dr. Muthulakshmi Reddy) and Dr.V.Shanta were the driving force and responsible in building this institute from a 12 bedded hospital to what it is today. The Institute is a comprehensive cancer center comprising of a hospital to 675 beds, a research division, a college of oncological sciences, a division of preventive oncology, a palliative center and provides state of art treatment to one and all.

Our Institute treats about 20 - 25% of patients totally free and another 35% subsidized by governmental & non-governmental welfare organizations. This pioneering institution stands as an epitome in cancer care, a singular entity with the non – government sector. The hospital sees over 16,000 new patients and over 165,000 follow patients annually. They are drawn from all over Tamil Nadu, Andhra Pradesh, Pondicherry, Karnataka and kerala. The ethose of the Cancer Institute (WIA) is" Service to all" irrespective of social or economic class. It was established with the faith that selfless service would generate its own strength and funds would always be found.

Recently we had applied for a building approval with your good office for which we have been advised to make the following payments Rs.4,83,000/- + Rs.20,000/- in favour of The Commissioner, Greater Chennai Corporation.

Rs.4,72,000/- in favour of MWGWF of the Tamilnadu construction worker welfare board.

We being an NGO, we would like to seek your kind support in providing us a waiver in paying the above fees, this will help us in treating a few needy cancer patients."

மேலே படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் கண்டுள்ளவாறு, பெருநகர சென்னை மாநகராட்சி வழங்கிய கேட்பு அறிக்கையில் தெரிவித்துள்ள மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களான (1) கட்டிட உரிமக் கட்டணம் ரூ. 4,83,000/- (Building License fees) (2)கூர்ந்தாய்வு கட்டணம் (Scrutiny fees) ரூ. 20,000/- மொத்தம் ரூ. 5,03,000/- மற்றும் (3) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணமான ரூ.4,72,000/-ஐ அவ்வாரியத்திற்கு செலுத்துவதிலிருந்து விலக்கு (Waiver) அளிக்குமாறு

கோரியுள்ளனர். இந்தத் தொகையை மிச்சப்படுத்தினால், அது ஏழை நோயாளிகளின் சிகிச்சைக்குப் பயனுள்ளதாக இருக்கும் என தெரிவித்ததின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய (1) கட்டிட உரிமக் கட்டணம் (Building License fees) ரூ. 4,83,000/- (2) கூர்ந்தாய்வு கட்டணம் (Scrutiny fees) ரூ.20,000/- மொத்தம் ரூ.5,03,000/-ஐ பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கலாம் என கருதப்படுகிறது.

மேலும், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்திற்கு செலுத்த வேண்டிய ரூ.4,72,000/-ஐ அவ்வாரியத்திற்கு செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க அவ்வாரியத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் பரிந்துரை கடிதம் அனுப்பலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) சென்னை அடையார், சர்தார் படேல் சாலை புதிய எண்.38, பழைய எண்.18ல் அமைந்துள்ள M/s.CANCER INSTITUTE (WIA) கூடுதலாகக் கட்டிடம் கட்டுவதற்கு கட்டிட அனுமதிக்காக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டிட உரிமக் கட்டணம் (a) (Building License fees) ரூ.4,83,000/- (b) கூர்ந்தாய்வு கட்டணம் (Scrutiny fees) ரூ. 20,000/- மொத்தம் ரூ.5,03,000/-ஐ பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கவும்,

(2) தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்திற்கு செலுத்த வேண்டிய ரூ.4,72,000/-ஐ அவ்வாரியத்திற்கு செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க பெருநகர சென்னை மாநகராட்சி கண்காணிப்பு பொறியாளர் (நகரமைப்புத் துறை) அவர்கள் மூலம் பரிந்துரை கடிதம் அனுப்பவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "24.07.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.33/2026,நாள்.24.07.2026ன்படி, இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

பொ.து.ந.க.எண்.பி15/001596/2026

தீர்மான எண்: 277/2026 **பொருள் எண்.05**

பெருநகர சென்னை மாநகராட்சி – பொதுத்துறை, ஓய்வூதியப்பிரிவு – ஓய்வூதியம் – ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு 01.01.2026 முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படி 58 விழுக்காட்டிலிருந்து 60 விழுக்காடாக அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டது – பெருநகர சென்னை மாநகராட்சி ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வழங்கப்பட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

அரசாணை எண்.98, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள்.14.05.2026–ன்படி மாநில அரசு ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு 01.01.2026ஆம் நாள் முதல் அகவிலைப்படி ஏற்கனவே வழங்கப்பட்ட 58 விழுக்காட்டிலிருந்து 60 விழுக்காடாக உயர்த்தி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வரசாணை உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொருந்துமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஓய்வூதியதாரர் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள கூடுதல் அகவிலைப்படியினை 01.01.2026 முதற்கொண்டு வழங்கப்படவேண்டும் எனவும், உயர்த்தப்பட்ட அகவிலைப்படியைக் கணக்கிடுகையில் ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை அது 50 காசும், அதற்கு மேலும் இருக்குமாயின், அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்பட வேண்டும். அதுவே 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்பட வேண்டும் எனவும் மேற்படி அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் ஏப்ரல் – 2026 நிலவரப்படி 8527 ஓய்வூதியர்கள் 7687 குடும்ப ஓய்வூதியர்கள் மொத்தம் 16214 நபர்கள் உள்ளனர். இவ்வரசாணையை இவர்களுக்கு நடைமுறைப்படுத்தி உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வழங்க, தோராயமாக ஒரு மாதத்திற்கு ரூ.47 இலட்சம் கூடுதலாக செலவாகும். நடப்பு நிதியாண்டிற்கு (2026–2027) 3.83 கோடி கூடுதலாக செலவாகும்.

எனவே, அரசாணை எண்.98, நிதி(ஓய்வூதியம்)துறை, நாள்.14.05.2026–ன்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி 58 விழுக்காட்டிலிருந்து 60 விழுக்காடாக 01.01.2026ஆம் நாள் முதல் உயர்த்தி வழங்கவும், 01.01.2026 முதல் 30.04.2026 வரையிலான அகவிலைப்படி நிலுவைத் தொகையினை மே–2026ஆம் மாத ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்க ஆணையர் அவர்களின் 18.05.2026 நாளிட்ட ஆணை பெறப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டமைக்கு, நிலைக்குழு (வரிவிதிப்பு

மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.07.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.143/2026, நாள்.24.07.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

******

ம.க.கு.ந.க.எண். அ7/2086/2026

தீர்மான எண்: 278/2026 **பொருள் எண்.06**

பெருநகர சென்னை மாநகராட்சி – மத்திய கணக்கு குழுமம் – தமிழ்நாடு உறுதிசெய்யப்பட்ட ஓய்வூதியத் திட்டம் (TAPS) – விதிகள் மற்றும் நடைமுறைகளை வகுத்தல்–01/01/2026 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வுபெற்ற தகுதியுள்ள அரசு ஊழியர்களுக்கு, TAPS விதிகள் அறிவிக்கப்படும் வரை இடைப்பட்ட காலத்திற்கு – வாழ்வாதாரத்திற்காக, இடைக்காலத் தொகை (Interim Payment) வழங்குதல் குறித்த ஆணை – பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

G.O.(Ms). No.07, Finance (PGC) Department, Dated. 09.01.2026 CPS–திட்டத்தின் கீழ் பணிப்புரியும் அனைத்து அரசு ஊழியர்களுக்கும் உறுதியான மற்றும் நிலையான ஓய்வூதியப் பலன்களை வழங்கும் நோக்கத்துடன், "தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம்" (TAPS) என்ற புதிய ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. மற்றும் தமிழ்நாடு உறுதிசெய்யப்பட்ட ஓய்வூதியத் திட்டம் 01.01.2026 முதல் நடைமுறைக்கு வரும் எனவும், இதுகுறித்த விதிகள் அறிவிக்கப்பட்ட பின்னரும், தேவையான சட்டரீதியான மற்றும் கணக்கியல் நடைமுறைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னரும் இத்திட்டம் செயல்பாட்டிற்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

G.O.(Ms). No.111, Finance (TAPS) Department, Dated. 16.06.2026,ல் தமிழ்நாடு உறுதிசெய்யப்பட்ட ஓய்வூதியத் திட்டம் (TAPS) விதிகள் மற்றும் நடைமுறைகளை வகுத்து வெளியிடும் வரை இடைப்பட்ட காலத்திற்கு, 01.01.2026 அன்று அல்லது

அதற்கு பிறகு ஓய்வுபெற்ற தகுதியுள்ள அரசு ஊழியர்களுக்கு இடைக்காலத் தொகை வழங்க (Interim Payout) ஆணையிடப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் 07.07.2026 நாளிட்ட ஆணையில், G.O.(Ms). No.07, Finance (PGC) Department, Dated. 09.01.2026 மற்றும் G.O.(Ms). No.111, Finance (TAPS) Department, Dated. 16.06.2026 அரசாணைகள் மன்றத்தின் பின்னேற்பிற்கு உட்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த ஆணை பெறப்பட்டு இவ்வரசாணைகள் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து அலுவலர்கள்/பணியாளர்களுக்கு நடைமுறைப்படுத்த வட்டார துணை ஆணையர் (வடக்கு / மத்தியம் / தெற்கு) / அனைத்து துறை தலைவர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள் (1 முதல் 15 வரை) ஆகியோர்களுக்கு 14.07.2026 அன்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

தற்போது, மேற்கண்ட நிகழ்வின் இறுதியாக 1) G.O.(Ms). No.07, Finance (PGC) Department, Dated. 09.01.2026 மற்றும் 2) G.O.(Ms). No.111, Finance (TAPS) Department, Dated. 16.06.2026ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> "24.07.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.149/2026, நாள்.24.07.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

******

வ.து.ந.க.எண்.எம்1/001391/2026

தீர்மான எண்: 279/2026 **பொருள் எண்.07**

பெருநகர சென்னை மாநகராட்சி – வணிக வளாகங்கள் – தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023 – வணிக வளாக கடைகள் வாடகை / குத்தகை விடுதல் – விதி 316 "நகராட்சிக்கு சொந்தமான நிலையான சொத்துகளுக்கான உரிமம் வழங்குதல் (licencing of immovable property of municipality)" தொடர்பாக துணை விதி (1) மற்றும் (2)ல் திருத்தம்

மேற்கொள்ளப்பட்டு தமிழ்நாடு அரசிதழ் வெளியீடு – பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த மன்றத்தின் அனுமதி.

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள், 2023–ன் விதி 316 "நகராட்சிக்கு சொந்தமான நிலையான சொத்துகளுக்கான உரிமம் வழங்குதல் (licencing of immovable property of municipality)" தொடர்பாக 16.12.2025 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ் எண்.836ன்படி விதி 316 துணை விதி (1) மற்றும் (2)–ல் மாநகராட்சிக்கு சொந்தமான சொத்துக்களை குத்தகை அல்லது உரிமம் வாயிலாக ஒதுக்கீடு செய்வது குறித்து பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மன்றம் தனக்குச் சொந்தமான எந்தவொரு நிலத்தையும் அல்லது கட்டிடத்தையும் கீழ் குறிப்பிட்ட காலத்திற்கு மிகாமல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு ஒதுக்கீடு செய்யலாம் :–

அ) வணிக நோக்கமற்ற பயன்பாட்டிற்காக பொதுமக்களுக்கு **மூன்று ஆண்டுகள் வரை**;

ஆ) மத்திய அல்லது மாநில அரசு துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் அல்லது மத்திய அல்லது மாநில அரசுக்குச் சொந்தமான அல்லது கட்டுப்படுத்தப்படும் சட்டப்பூர்வ அமைப்புகளுக்கு **ஒன்பது ஆண்டுகள் வரை**;

இ) வணிக வளாகங்கள், கடைகள், பெட்டிக் கடைகள், சந்தைக் கடைகள், பேருந்து நிலையக் கடைகள், திறந்தவெளி கடைகள் மற்றும் சமுதாய நலக்கூடங்கள் போன்றவற்றிற்கு **பன்னிரண்டு ஆண்டுகள் வரை**, ஒவ்வொரு மூன்று ஆண்டு முடிவிலும் புதுப்பிக்கப்படும்.

(1–A) குத்தகை அல்லது வாடகைக்கு அனுமதி வழங்கும்போது, பின்வரும் வழிகாட்டுதல்கள் பின்பற்றப்பட வேண்டும், அதாவது:–

அ) நகராட்சிகளின் அனைத்து அசையா சொத்துக்களுக்கும் முதல் முறையாக குத்தகை மற்றும் பொது ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

ஆ) நகராட்சி கடைகள் ஒரே நேரத்தில் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடப்படும். மூன்று வருட குத்தகை காலம் முடிந்த பிறகு, மேலும் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை ஒப்பந்தம் தானாகவே புதுப்பிக்கப்படும் அதிகபட்சமாக பன்னிரண்டு ஆண்டுகள் வரை புதுப்பிக்கப்படும்.

இ) ஒவ்வொரு ஆண்டும், குத்தகைத் தொகை ஐந்து சதவீதம் அதிகரிக்கப்பட வேண்டும். இந்த அதிகரிப்பு தற்போது நகராட்சி சொத்துக்களை வைத்திருக்கும் குத்தகைதாரர்களுக்கும் பொருந்தும்.

ஈ) பன்னிரண்டு ஆண்டுகள் நிறைவடைந்த பிறகு, குத்தகை காலம் மேலும் நீட்டிக்கப்படாது.

உ) கட்டிடம் அல்லது நிலத்தின் தற்போதைய சந்தை மதிப்பின் அடிப்படையில் குத்தகை விகிதம் திருத்தியமைக்கப்படும், மேலும் சொத்து பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விடப்படும்.

ஊ) குத்தகைதாரர் ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கும் இறுதியில் தங்கள் குத்தகையைப் புதுப்பிப்பதற்கான பின்வரும் கட்டணங்களைச் செலுத்த வேண்டும். மேலும் குத்தகை நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு நகராட்சியுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும்:–

i. 100 சதுர அடி வரை: ரூ.2,500/– (ரூபாய் இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்);

ii. 101 சதுர அடி முதல் 500 சதுர அடி வரை: ரூ.5000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்);

iii. 501 சதுர அடி முதல் 1000 சதுர அடி வரை: ரூ.7,500/– (ரூபாய் ஏழாயிரத்து ஐநூறு மட்டும்);

iv. 1,001 சதுர அடி மற்றும் அதற்கு மேல்: ரூ. 10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்);

எ) குத்தகைதாரரின் சட்டப்பூர்வ வாரிசுகள், நிலுவையில் உள்ள அனைத்து நிலுவைத் தொகையையும் செலுத்தி, அவ்வப்போது நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட குத்தகைத் தொகையை செலுத்த ஒப்புக்கொள்ளும்பட்சத்தில், குத்தகை உரிமைகளை வாரிசுதாரர் பெயருக்கு மாற்றக் கோரலாம். சட்டப்பூர்வ வாரிசுகள் பொதுவான குத்தகை நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளுக்குக் கட்டுப்படுவார்கள். பெயர் மாற்றத்திற்கான விண்ணப்பத்துடன் ரூ.5,000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) கட்டணம் செலுத்த வேண்டும்.

(1–B) விவசாய நிலத்தைப் பொறுத்தவரை விவசாய நோக்கத்திற்காக, இருபது ஆண்டுகளுக்கு மிகாமல் மன்றம், குத்தகைக்கு வழங்கலாம்:

ஆனால், சிறப்பு மற்றும் அசாதாரண சூழ்நிலைகளில், சட்டத்தின் பிரிவு 78 இன் துணைப்பிரிவு (3) இன் பிரிவு (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்கு அப்பால் நீண்ட குத்தகைக்கு ஒப்புதல் அளிக்க அரசின் அனுமதியுடன் மன்றம் ஒப்புதல் வழங்கலாம். **(1–C)** சந்தைகள், பேருந்து / வாகன நுழைவாயில், பூங்கா, இறைச்சி கூடம், கழிப்பறைகள், சாலையோரம், பேருந்து நிலைய காத்திருப்பு அறை / பொருட்கள் பாதுகாப்பு அறை, LED திரை மூலமாக விளம்பரம் செய்யும் கட்டண மற்றும் பயன்பாட்டு கழிப்பறைகள், எடை இயந்திரம் மற்றும் மீன் வளர்ப்பு போன்ற பிற பயன்பாட்டு சேவைகள் போன்ற நகராட்சி சொத்துக்களுக்கான உரிமதாரர் பின்வரும்

நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மன்றத்தினால் நிர்ணயிக்கப்பட்ட பயன்பாட்டு கட்டணத்தை (Usage charges) வசூலிக்க தகுதியுடையவர்:–

அ) உரிமதாரரால் கட்டணங்களை வசூலிக்கும் உரிமை மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே இருக்கும், அதன் பிறகு மின்னணு ஒப்பந்தப்புள்ளி உட்பட பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி மீண்டும் புதியதாக நடத்தப்படும்.

ஆ) முதல் வருடத்திற்கான உரிமக் கட்டணத்தை உரிமதாரர் உரிமம் வழங்கும் நேரத்திலேயே செலுத்த வேண்டும்.

இ) இரண்டாம் ஆண்டுக்கான உரிமக் கட்டணம் ஐந்து சதவீதம் அதிகரிக்கப்பட்டு, இரண்டாம் ஆண்டின் தொடக்கத்தில் உரிமதாரர் அதைச் செலுத்த வேண்டும்;

ஈ) மூன்றாம் ஆண்டுக்கான உரிமக் கட்டணம் இரண்டாம் ஆண்டு கட்டணத்தில் ஐந்து சதவீதம் அதிகரிக்கப்பட்டு, மூன்றாம் ஆண்டின் தொடக்கத்தில் உரிமதாரர் அதைச் செலுத்த வேண்டும்.

உ) ஒவ்வொரு அடுத்தடுத்த ஆண்டிற்கும், உரிமக் கட்டணம் முந்தைய ஆண்டின் பிப்ரவரி மாதத்தின் கடைசி நாளிலோ அல்லது அதற்கு முன்பாகவோ செலுத்தப்பட வேண்டும்.

(2) குத்தகை / வாடகை பின்வரும் முறையில் செலுத்தப்பட வேண்டும், அதாவது:–

அ) மூன்று வருட குத்தகை காலம் முடிவடைவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னர், திருத்தப்பட்ட விகிதத்தை ஏற்றுக்கொள்வதை உறுதிப்படுத்தக் கோரி, தற்போதைய குத்தகைதாரருக்கு முறையான அறிவிப்பு அனுப்பப்படும். ஏற்றுக்கொள்ளப்படாத பட்சத்தில், மறு ஏல செயல்முறை தொடங்கப்படும்: வணிக வளாகங்களில் உள்ள கடைகள் அல்லது பொதுச் சந்தைகளில் உள்ள கடைகளுக்கு ஒவ்வொரு மாதமும் வாடகை வசூலிக்கப்பட வேண்டும்.

ஆ) உரிமக் கட்டணம், குத்தகை அல்லது வாடகை நிர்ணயிக்கப்பட்ட தேதிக்குள் செலுத்தப்படாதபட்சத்தில் பன்னிரண்டு சதவீத அபராத வட்டி விதிக்கப்படும்.

இ) குத்தகைக்கு விடப்பட்ட அல்லது வாடகைக்கு விடப்பட்ட சொத்துக்கள் பின்வரும் முறையில் ஒழுங்குபடுத்தப்படும், அதாவது:–

1. குத்தகைக்கு விடப்பட்ட சொத்துக்களின் பொது சுகாதாரம் மற்றும் பராமரிப்பு பணிகளை சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள் மேற்கொள்ளலாம்.
2. தமிழ்நாடு நில உரிமையாளர்கள் மற்றும் குத்தகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளை ஒழுங்குபடுத்துதல் சட்டம், 2017 (தமிழ்நாடு சட்டம் 42/2017) இன் விதிகளின்படி, உரிமதாரர் அல்லது குத்தகைதாரரின் செலவில், நகராட்சி உரிமதாரர் அல்லது குத்தகைதாரருடன் குத்தகை ஒப்பந்தங்களை செயல்படுத்த வேண்டும்.

3. பொதுப்பணித் துறையின் அட்டவணைப்படி வாடகை நிர்ணயிக்கப்பட்டால், முதல் தளத்திற்கு பத்து சதவீதம், இரண்டாவது தளத்திற்கு பதினைந்து சதவீதம், மூன்றாவது தளம் மற்றும் அதற்கு மேல் இருபத்தைந்து சதவீதம் வரை வாடகை குறைக்கப்படலாம்.
4. கட்டிடத்தின் அமைவிடம் மற்றும் அணுகல் வசதியைப் பொருத்து, பொதுப்பணித்துறை அட்டவணையின்படி நிர்ணயிக்கப்பட்ட வாடகைக்கு, கட்டிடங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட வாடகைக்கு பத்து சதவீதம், பதினைந்து சதவீதம் மற்றும் இருபது சதவீதம் வரை தள்ளுபடி செய்யலாம்.
5. நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தை விட அதிக விகிதத்தை ஏலதாரர் குறிப்பிடும்போது, விகிதாசார அடிப்படையில் வைப்புத்தொகை அதிகரிக்கப்படும், மேலும் வைப்புத் தொகையில் ஐம்பது சதவீதத்திற்கு வங்கி உத்தரவாதச் சான்றிதழ் வசூலிக்கப்படும்.
6. குத்தகை அல்லது உரிமக் காலம் முடிவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு, சூழ்நிலைக்கேற்ப, வாடகையை மறு நிர்ணயம் செய்யும் செயல்முறை தொடங்கப்படும்.

7. நான்கு முறைக்கு மேல், ஒரு மின்–ஏலம் உட்பட பல முறை ஏலங்கள் நடத்தப்பட்டால், ஏலதாரர் உத்தேசிக்கப்பட்ட விகிதத்தை ஏற்கவில்லை என்றால், பத்து சதவீதம் வரை குறைக்கப்படலாம் இருப்பினும், இந்த வரம்பை மீறும் எந்தவொரு குறைப்பும் குத்தகைக் காலத்தின் போது வழங்கப்படலாம்.
8. குத்தகைக் காலத்தின் போது குத்தகை / வாடகை ஒவ்வொரு ஆண்டும் ஐந்து சதவீதம் அதிகரிக்கப்படும்.
9. புதிய கட்டுமானங்களுக்கு குத்தகைதாரரின் குத்தகை காலத்திற்குப் பிறகு வாடகையை மறு நிர்ணயம் செய்யும்போது, பொதுப்பணித்துறை விகிதம் சந்தை விகிதத்தை விட இருபத்தைந்து சதவீதத்திற்கு மேல் இருந்தால், உயர்ந்த தொகை ஏற்றுக்கொள்ளப்படும்.
10. கட்டிடங்களை புனரமைக்கும் போது, முன்னர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்ட தற்போதைய குத்தகைதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும், அதே நேரத்தில் வெளிப்படையான குலுக்கல் முறையால் ஒதுக்கப்பட்ட திறந்த ஒப்பம் சராசரி மதிப்பை ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், பிற நிபந்தனைகளையும் ஏற்கும் பட்சத்தில் முன்னுரிமை அளிக்கப்படும்.
11. திருத்தப்பட்ட விகிதங்களில் ஏதேனும் முரண்பாடுகள் ஏற்பட்டால், அவற்றைத் தீர்க்க வட்டார அளவில் துணைக் குழுக்கள் அமைக்கப்படும். மேலும் நகராட்சிகளை மறுசீரமைப்பதன் அடிப்படையில் இயக்குநர் மூலம் அமைக்கப்பட்ட குழுக்கள் மறுசீரமைக்கப்படலாம்.
12. துணைக்குழுவால் எடுக்கப்பட்ட முடிவு மன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்பட வேண்டும். துணைக்குழு மட்டத்தில் தீர்க்க முடியாத

பிரச்சினைகள், மேலும் மதிப்பாய்வுக்காக மாநில அளவிலான குழுவிற்கு அனுப்பப்பட வேண்டும்.

கடைசியாக 01.09.2023 அன்று முதல் 3 ஆண்டுக்காலத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கான மாத வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது. இக்காலம் 31.08.2026 உடன் முடிவடைகிறது. எனவே, 01.09.2026 முதல் மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளை பின்பற்றி பெருநகர சென்னை மாநகராட்சி கடைகளுக்கான குத்தகையினை புதுப்பிக்கலாம்.

மேற்படி தமிழ்நாடு அரசிதழில் குறிப்பிடப்பட்ட திருத்தங்களின்படி மேல் நடவடிக்கையினைத் தொடர, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.07.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.144/2026, நாள்.24.07.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.8.ந.க.எண்.சி1/4558/2026

தீர்மான எண்: 280/2026 **பொருள் எண்.08**

பெருநகர சென்னை மாநகராட்சி – மண்டலம்-8 – கோட்டம்-94 முதல் 108 வரை தூய்மை பணிக்காக தற்காலிக தூய்மை பணியாளர்கள் அண்டை வீட்டு குழு மூலமாக பணிபுரியும் 252 இரவு நேர தூய்மை பணியாளர்கள் மற்றும் BOV ஓட்டுநர்களுக்கு 01.07.2026 முதல் 31.12.2026 வரை பணி தொடர்வதற்கு – ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது – மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் 17.02.2026 நாளிட்ட அனுமதி மற்றும் மன்ற தீர்மான எண்.232/2026, நாள்.24.02.2026ன்படி 252 தற்காலிக தூய்மை பணியாளர்கள் மற்றும் BOV ஓட்டுநர்களுக்கு 03.05.2026 முதல் 30.06.2026 வரை 59 நாட்களுக்கு இப்பணியினை

தொடர்ந்து மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் ஒப்புதலுடன் அனுமதி பெறப்பட்டு இரவு நேர தூய்மை பணிகள் மற்றும் BOV ஓட்டுநர் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது இரவு நேர தற்காலிக தூய்மை பணிகள் மற்றும் BOV ஓட்டுநர் பணிக்கான மன்ற அனுமதி 30.06.2026 அன்றுடன் நிறைவடைவதால், தூய்மை பணியின் அவசியம் கருதி 01.07.2026 முதல் 31.12.2026 வரை 184 நாட்களுக்கு தொடர்ச்சியாக பணியமர்த்த வேண்டியும் மேற்குறிப்பிட்ட காலத்திற்கு தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.761/- என்ற அடிப்படையில் 184 நாட்களுக்கு தேவையான 252 x 761 x 184 = ரூ.3,52,86,048/- நிதி தேவைப்படுகிறது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, திடக்கழிவு மேலாண்மை துறையின் 05.12.2025 நாளிட்ட சுற்றறிக்கையின்படி (தி.க.மே.து.ந.க.எண்.அ3/5150/2025) தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு தினக்கூலியாக நாள் ஒன்றுக்கு ரூ.761/- என்ற அடிப்படையில் 184 நாட்களுக்கு தேவையான தோராய செலவீனம் 252 x 761 x 184 = ரூ.3,52,86,048/- (ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்து இரண்டு இலட்சத்து எண்பத்து ஆறாயிரத்து நாற்பத்து எட்டு மட்டும்) கணக்கு குறியீட்டு எண்.40 – 41 – 03, கணக்கு தலைப்பு எண்.210 – 100 – 601 என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு வேண்டியுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் 09.07.2026 நாளிட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது. ஆகையால், கீழ்காணும் இனங்களின் மீது மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், 252 தற்காலிக பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிதியாண்டில் ஊதியம் உயர்த்தி வழங்கும் பொழுது அதனடிப்படையில் தின கூலியினை உயர்த்தி வழங்கவும்,

எனவே,

1. மண்டலம்-8, கோட்டம்-94 முதல் 108 வரையில் இரவு நேர தூய்மை பணி மேற்கொள்ள அண்டை வீட்டு குழுவின் வாயிலாக 252 தற்காலிக தூய்மை பணியாளர்களை கொண்டு தூய்மை பணிகள் மற்றும் BOV ஓட்டுநர் பணி மேற்கொள்ள 01.07.2026 முதல் 31.12.2026 வரை 184 நாட்களுக்கு பணியமர்த்தி பணி மேற்கொண்டமைக்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
2. இப்பணிக்கு தேவையான தோராய செலவீனம் 252 x 761 x 184 = ரூ.3,52,86,048/- ஆகும் இதற்கான கணக்கு குறியீட்டு எண்.40 – 41 – 03, கணக்கு தலைப்பு எண்.210 – 100 – 601 என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"21.07.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.061/2026, நாள்.21.07.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"24.07.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் இப்பொருள் குறித்து தலைவர் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் தற்காலிக தூய்மை பணியாளர்கள் பணிக்காலம் முடிவடைந்த நாளிலிருந்து தொடர்ச்சியாக பணிபுரிய அனுமதிக்காமல் இடைவெளிவிட்டு பின்னர் தற்காலிக பணியாளர்களை பணிபுரிய அனுமதிக்கலாம் என்ற நிபந்தனையுடன் தீர்மான எண். 146/2025, நாள்.24.07.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

******

ம.அ.8.ந.க.எண்.சி1/4559/2026

தீர்மான எண்: 281/2026 **பொருள் எண்.09**

பெருநகர சென்னை மாநகராட்சி – மண்டலம்-8 - கோட்டம்-94 முதல் 108 வரை தூய்மை பணிக்காக தற்காலிக தூய்மை பணியாளர்கள் அண்டை வீட்டு குழு மூலமாக பணிபுரியும் 850 தூய்மை பணியாளர்களுக்கு 22.06.2026 முதல் 18.11.2026 வரை பணி தொடர்வதற்கு ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது – மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்–8க்குட்பட்ட கோட்டங்களில் பணிபுரியும் 850 தற்காலிக தூய்மை பணியாளர்களின் பணிக்கான மன்ற அனுமதி 21.06.2026 அன்றுடன் நிறைவடைவதால், தூய்மை பணியின் அவசியம் கருதி 22.06.2026 முதல் 18.11.2026 வரை 150 நாட்கள் பணி தொடர்ச்சி வேண்டியும்

மேற்குறிப்பிட்ட காலத்திற்கு தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.761/– என்ற அடிப்படையில் 22.06.2026 முதல் 18.11.2026 வரை 150 நாட்களுக்கு தேவையான 850 x 761 x 150 = ரூ.9,70,27,500/– நிதி தேவைப்படுகிறது என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

திடக்கழிவு மேலாண்மை துறையின் 05.12.2025 நாளிட்ட சுற்றறிக்கையின்படி (தி.க.மே.து.ந.க.எண்.அ3/5150/2025) தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு தினக்கூலியாக நாள் ஒன்றுக்கு ரூ.761/– என்ற அடிப்படையில் 150 நாட்களுக்கு தேவையான தோராய செலவீனம் 850 x 761 x 150 = ரூ.9,70,27,500/– ஐ (ரூபாய் ஒன்பது கோடியே எழுபது இலட்சத்து இருபத்து ஏழாயிரத்து ஐந்நூறு மட்டும்) கணக்கு குறியீட்டு எண்.40 – 41 – 03, கணக்கு தலைப்பு எண்.210 – 100 – 601 என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு வேண்டியுள்ளது. பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் 09.07.2026 நாளிட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது. ஆகையால், கீழ்காணும் இனங்களின் மீது மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும், 850 தற்காலிக பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிதியாண்டில் ஊதியம் உயர்த்தி வழங்கும் பொழுது அதனடிப்படையில் தின கூலியினை உயர்த்தி வழங்கவும், வரும் காலங்களில் காலிப்பணியிடங்களை நிரந்தர பணியாளர்கள் மூலம் பணியமர்த்தும் பட்சத்தில் தற்காலிக பணியாளர்களை வெளியேற்றவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. மண்டலம்-8, கோட்டம்-94 முதல் 108 வரையில் தூய்மை பணி மேற்கொள்ள அண்டை வீட்டு குழுவின் (SHG) வாயிலாக 850 தற்காலிக தூய்மை பணியாளர்களை கொண்டு 22.06.2026 முதல் 18.11.2026 வரை 150 நாட்களுக்கு பணியமர்த்தி பணி மேற்கொண்டமைக்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
2. இப்பணிக்கு தேவையான தோராய செலவீனம் ரூ.9,70,27,500/-ஐ ஆகும் இதற்கான கணக்கு குறியீட்டு எண்.40–41–03, கணக்கு தலைப்பு எண். 210–100–601 என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"21.07.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தில் தீர்மான எண்.062/2026, நாள்.21.07.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"24.07.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் இப்பொருள் குறித்து தலைவர் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் தற்காலிக தூய்மை பணியாளர்கள் பணிக்காலம் முடிவடைந்த நாளிலிருந்து தொடர்ச்சியாக பணிபுரிய அனுமதிக்காமல் இடைவெளிவிட்டு பின்னர் தற்காலிக பணியாளர்களை பணிபுரிய அனுமதிக்கலாம் என்ற நிபந்தனையுடன் தீர்மான எண்.147/2025, நாள்.24.07.2026ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

******

த.தொ.நு.மை.ந.க.எண்.சி1/1011/2025

தீர்மான எண்: 282/2026 **பொருள் எண்.10**

பெருநகர சென்னை மாநகராட்சி – தகவல் தொழில்நுட்ப மையம் – வாட்ஸ் அப் அடிப்படையிலான தகவல் தொடர்பு அமைப்பு உருவாக்கம் மற்றும் மாநகராட்சியின் ஆன்லைன் சேவைகளுடன் ஒருங்கிணைத்தல் பணிக்கான ஒப்பந்தம் 30.06.2026 அன்றுடன் முடிவடைந்தது – தமிழ்நாடு வெளிப்படைத்தன்மை ஒப்பந்தவிதி 2000ன்படி 01.07.2026 முதல் 30.09.2026 வரை மூன்று மாதங்களுக்கு நீடிப்பு செய்தமைக்கு பின்னேற்பு அனுமதி.

வாட்ஸ் அப் அடிப்படையிலான தகவல் தொடர்பு அமைப்பு உருவாக்கம் மற்றும் மாநகராட்சியின் ஆன்லைன் சேவைகளுடன் ஒருங்கிணைத்தல் பணிக்காக M/s.Pinnacle Telservices Pvt. Ltd. நிறுவனத்திற்கு ரூ.3,56,03,904/– (GST உட்பட) மதிப்பில் பணி ஆணை வழங்கப்பட்டு, அப்பணி தற்போது செயல்பாட்டில் உள்ளது. மேற்கண்ட ஒப்பந்தகாலம் 30.06.2026 அன்று முடிவடையவுள்ளது.

இப்பணிக்கான புதிய ஒப்பந்தப்புள்ளி (Tender) கோருவதற்கான நடவடிக்கைகள் முன்னதாகவே தொடங்கப்பட்டு, அதற்கான கோப்பு உருவாக்கப்பட்ட நிலையில், தேர்தல் நடத்தை விதிமுறைகள் (Model Code of Conduct) அமலுக்கு வந்ததன் காரணமாக அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலவில்லை. பின்னர் தேர்தல் நடத்தை விதிமுறைகள்

விலக்கப்பட்டதைத் தொடர்ந்து, புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான கோப்பு மீண்டும் செயல்படுத்தப்பட்டது. எனினும், நிர்வாக ஒப்புதல் வழங்கும் நடைமுறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் காரணமாக, புதிய ஒப்பந்தத்திற்கான ஒப்புதல்களைப் பெறும் நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன . இந்நிலையில், மாநகராட்சியின் பொதுமக்கள் சேவைகள் மற்றும் ஆன்லைன் சேவைகள் தடையின்றி தொடர்ந்து செயல்பட வேண்டிய அவசியத்தையும், புதிய ஒப்பந்தத்தை இறுதி செய்ய கூடுதல் கால அவகாசம் தேவைப்படுவதையும் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு வெளிப்படைத்தன்மை ஒப்பந்தவிதிகள், 2000–இன் விதிகளின்படி, M/s. Pinnacle Telservices Pvt.Ltd. நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள தற்போதைய ஒப்பந்தத்தை 25% அளவிற்கு, அதாவது ரூ.89,00,976/– (GST உட்பட) மதிப்பில், 01.07.2026 முதல் 30.09.2026 வரை அல்லது புதிய ஒப்பந்தம் இறுதி செய்யப்படும் நாள் வரை (எது முன்னதாக நிகழுகிறதோ அதுவரை) நீட்டிப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. M/s. Pinnacle Telservices Pvt. Ltd. நிறுவனத்திற்கு, தமிழ்நாடு வெளிப்படைத்தன்மை விதிகள், 2000-இன் விதிகளின்படி, தற்போதைய ஒப்பந்த மதிப்பில் 25% அளவிற்கு, ரூ.89,00,976/- (ரூபாய் எண்பத்தொன்பது இலட்சத்து தொள்ளாயிரத்து எழுபத்து ஆறு மட்டும்) மதிப்பில், 01.07.2026 முதல் 30.09.2026 வரை மூன்று மாத காலத்திற்கு ஒப்பந்தத்தை நீட்டித்து மற்றும் அக்காலப்பகுதிக்கான ஒப்பந்தத் தொகையை வழங்குவதற்கு பின்னேற்பு அனுமதி வழங்கவும்,
2. இப்பணிக்கான உடன்படிக்கை மற்றும் 2% பிணைவைப்பு தொகை செலுத்துவதற்கு அனுமதியும்,
3. இதற்கான செலவினங்களை தகவல் தொழில்நுட்ப மையத்தின் பிரிவு எண் 000-205 கணக்கு தலைப்பு எண் 220-53-02-02 (e-Gov- Development and customisation – Vendors,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"22.07.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.57/2026, நாள்.22.07.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"24.07.2026 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.145/2026, நாள்.24.07.2026ன்படி இதற்கு

நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது."

******

மி.து. ந.க. எண். மே2/ பி10/2176/2025

தீர்மான எண்: 283/2026 **பொருள் எண்.11**

பெருநகர சென்னை மாநகராட்சி – – மின்துறை – பெருநகர சென்னை மாநகராட்சியின் 1 முதல் 15 வரை உள்ள 15 மண்டலங்களின் அனைத்து வார்டுகளிலும் 3,01,969 எண்ணிக்கையில் தெரு விளக்கு மற்றும் 507 எண்ணிக்கையிலான உயர் கோபுர மின் விளக்குகள் பராமரிப்பு ஒரு வருட காலத்திற்கு தேவையான ஆட்கள், அலுமினியம்/ஹைட்ராலிக் ஏணி வாகனங்கள் ஆகியவற்றை கொண்டு அவுட்சோர்சிங் (Outsourcing) ஒப்பந்த அடிப்படையில் பராமரிக்கும் பணி – The Tamil Nadu Transparency In Tenders Rules, 2000 ன் படி ஒப்பந்தத்தின் பணி காலத்தை 25% – மூன்று மாத காலத்திற்கு நீட்டிக்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி மின்துறையின் முக்கிய பணியான பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பயணத்திற்கான பாதுகாப்பிற்கும் தெருவிளக்குகள் அமைக்க வேண்டியது அவசியமானதாகும்.

அதனடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள 15 மண்டலங்களின் அனைத்து வார்டுகளிலும் 3,01,969 எண்ணிக்கையில் தெரு விளக்கு மற்றும் 507 எண்ணிக்கையிலான உயர் கோபுர மின் விளக்குகள் பராமரிப்பு ஒரு வருட காலத்திற்கு தேவையான ஆட்கள், அலுமினியம்/ஹைட்ராலிக் ஏணி வாகனங்கள் ஆகியவற்றை கொண்டு அவுட்சோர்சிங் (Outsourcing) முறையில் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் ஆணை வழங்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்போதுள்ள ஒப்பந்தம் ஒரு வருட காலத்திற்கு (365 நாட்கள்) ஆகும். அதன் விவரங்கள் பின்வருமாறு:

அட்டவணை 1:

Sl No.	Name of work	Work commencement Date (From LOA Date)	Contract completion Date	Name of the Contractor	Work Order value Incl. GST@18% In Rs.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	E.L.D.C.NO/SMII/P10/2176/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the	11-08-2025	10-08-2026	M/s. R.V Engineering Construction	2,96,98,678.72

	maintenance of 14,153 nos. of street light lamp post and 23 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 1				
2	E.L.D.C.NO/SMII/P10/2177/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 12,790 nos. of street light lamp post and 25 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 2	11-08-2025	10-08-2026	M/s Kumaran Industries	2,72,67,907.28
3	E.L.D.C.NO/SMII/P10/2178/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 20,004 nos. of street light lamp post and 37 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 3	11-08-2025	10-08-2026	M/s Murugan Electrical Traders	3,79,96,169.09
4	E.L.D.C.NO/SMII/P10/2179/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 19,747 nos. of street light lamp post and 29 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 4	11-08-2025	10-08-2026	M/s.R.K.M. Electricals	3,89,11,781.36
5	E.L.D.C.NO/SMII/P10/2180/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 15,525 nos. of street light lamp post and 47 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 5	11-08-2025	10-08-2026	M/s Murugan Electrical Traders	3,48,68,611.78
6	E.L.D.C.NO/SMII/P10/2181/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 19,159 nos. of street light lamp post and 47 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 6	11-08-2025	10-08-2026	M/s Murugan Electrical Traders	3,96,19,817.82
7	E.L.D.C.NO/SMII/P10/2182/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 27,842 nos. of street light lamp post and 59 nos.	11-08-2025	10-08-2026	M/s.V.K Contractor	4,88,00,277.06

	of high mast through private agency on contract basis for a period of one year in Zone 7				
8	E.L.D.C.NO/SMII/P10/2183/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 21,288 nos. of street light lamp post and 22 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 8	11-08-2025	10-08-2026	M/s. R.K.M Electricals	4,26,71,934.20
9	E.L.D.C.NO/SMII/P10/2184/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 23,175 nos. of street light lamp post and 57 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 9	11-08-2025	10-08-2026	M/s. Sai Enterprises	4,56,50,969.40
10	E.L.D.C.NO/SMII/P10/2185/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 23,995 nos. of street light lamp post and 34 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 10	11-08-2025	10-08-2026	M/s. R.K.M Electricals	4,64,86,772.78
11	E.L.D.C.NO/SMII/P10/2186/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 20,754 nos. of street light lamp post and 20 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 11	11-08-2025	10-08-2026	1. M/s Kumaran Industries	3,95,84,177.05
12	E.L.D.C.NO/SMII/P10/2187/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 15,870 nos. of street light lamp post and 25 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 12	11-08-2025	10-08-2026	M/s Hi Tech Tronics	3,25,93,167.63
13	E.L.D.C.NO/SMII/P10/2188/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 23,939 nos. of street light lamp post and 54 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 13	11-08-2025	10-08-2026	M/s Kumaran Industries	4,65,12,003.18
14	E.L.D.C.NO/SMII/P10/2189/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical	11-08-2025	10-08-2026	M/s. R.K.M Electricals	4,35,98,326.30

	Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 23,868 nos. of street light lamp post and 21 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 14				
15	E.L.D.C.NO/SMII/P10/2190/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 19,860 nos. of street light lamp post and 7 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 15	11-08-2025	10-08-2026	M/s Murugan Electrical Traders	3,81,85,832.15

தற்போதைய ஒப்பந்தம் 10.08.2026 அன்று முடிவடைகிறது. பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் இரவு நேர போக்குவரத்திற்கு தெருவிளக்கு பராமரிப்பு தொடர்ந்து நடைபெறவேண்டியது அவசியமாகிறது.

மண்டலம் 1 முதல் 15 வரை AEE வேண்டுகோளின்படி, 1 முதல் 15 மண்டலங்களில் தெருவிளக்குகள் மற்றும் தேவையான ஆட்கள், அலுமினியம்/ஹைட்ராலிக் ஏணி வாகனங்கள் உள்ளிட்ட உயர் கம்பங்களின் செயல்பாடு மற்றும் பராமரிப்புக்கான தொடர்ச்சியான தேவை அவசியமாகிறது, எனவே, புதிய ஒப்பந்த புள்ளி கோரும் வரை பணி தடைபடாமல் இருக்க, தற்போதைய ஒப்பந்ததாரர்களுடைய ஒப்பந்தத்தை மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பு செய்ய முன்மொழியப்படுகிறது.

மேலே குறிப்பிட்டுள்ள மண்டலங்கள் 1 முதல் 15ல் மேற்கொள்ளப்படும் தெரு விளக்கு ஒப்பந்தத்தை ஒரு வருட காலத்திற்கான (365 நாட்கள்) ஒப்பங்கள் நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் மன்றத்தின் மன்ற தீர்மான எண்;872/2025 நாள்:30.07.2025 அன்று பரிந்துரைக்கப்பட்டு, மன்றத்தில் பதிவு செய்யப்பட்டது.

"As per The Tamil Nadu Transparency In Tenders Rules, 2000, Section -14(9) 'The Tender Accepting Authority shall be ordinarily permitted to vary the quantity finally ordered only to the extent of twenty five percent either way of the requirement indicated in the tender documents" ன் படி ஒரு வருட காலத்திற்கான ஒப்பந்தத்தில் 25% மூன்று மாத காலத்திற்கு ஒப்பம் நீட்டிக்கப்படலாம். எனவே பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி மூன்று மாத (90 நாட்கள்) காலத்திற்கு நீட்டிப்புச் செய்ய நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதியின்) ஒப்புதல் வேண்டி, மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்க அனுமதி வழங்க வேண்டப்படுகிறது.

இப்பணிக்கான ஒப்பந்த நீட்டிப்பின் மதிப்பு அட்டவணை 2ல் குறிப்பிட்டுள்ளப்படி பின்வருமாறு

அட்டவணை 2:

Sl No	Name of work	Name of the Contractor	Work Order value Incl. of GST@18% In Rs.	Value of extension (3months) Incl.of GST@ 18% In Rs.	Date from which extension of work contract period is

					requested
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1	E.L.D.C.NO/SMII/P10/2176/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 14,153 nos. of street light lamp post and 23 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 1	M/s. R.V Engineering Construction	2,96,98,678.72	73,27,281.74	11-08-2026
2	E.L.D.C.NO/SMII/P10/2177/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 12,790 nos. of street light lamp post and 25 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 2	M/s Kumaran Industries	2,72,67,907.28	67,27,472.64	11-08-2026
3	E.L.D.C.NO/SMII/P10/2178/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 20,004 nos. of street light lamp post and 37 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 3	M/s Murugan Electrical Traders	3,79,96,169.09	93,74,913.32	11-08-2026
4	E.L.D.C.NO/SMII/P10/2179/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 19,747 nos. of street light lamp post and 29 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 4	M/s.R.K.M. Electricals	3,89,11,781.36	96,00,592.57	11-08-2026
5	E.L.D.C.NO/SMII/P10/2180/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 15,525 nos. of street light lamp post and 47 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 5	M/s Murugan Electrical Traders	3,48,68,611.78	86,02,412.40	11-08-2026
6	E.L.D.C.NO/SMII/P10/2181/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 19,159 nos. of street light lamp post and 47 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 6	M/s Murugan Electrical Traders	3,96,19,817.82	97,75,000.58	11-08-2026
7	E.L.D.C.NO/SMII/P10/2182/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 27,842 nos. of street light lamp post	M/s.V.K Contractor	4,88,00,277.06	1,20,41,232.12	11-08-2026

	and 59 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 7				
8	E.L.D.C.NO/SMII/P10/2183/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 21,288 nos. of street light lamp post and 22 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 8	M/s. R.K.M Electricals	4,26,71,934.20	1,05,28,194.35	11-08-2026
9	E.L.D.C.NO/SMII/P10/2184/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 23,175 nos. of street light lamp post and 57 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 9	M/s. Sai Enterprises	4,56,50,969.40	1,12,63,368.10	11-08-2026
10	E.L.D.C.NO/SMII/P10/2185/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 23,995 nos. of street light lamp post and 34 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 10	M/s. R.K.M Electricals	4,64,86,772.78	1,14,69,632.92	11-08-2026
11	E.L.D.C.NO/SMII/P10/2186/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 20,754 nos. of street light lamp post and 20 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 11	1. M/s Kumaran Industries	3,95,84,177.05	97,66,741.41	11-08-2026
12	E.L.D.C.NO/SMII/P10/2187/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 15,870 nos. of street light lamp post and 25 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 12	M/s Hi Tech Tronics	3,25,93,167.63	80,41,432.14	11-08-2026
13	E.L.D.C.NO/SMII/P10/2188/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 23,939 nos. of street light lamp post and 54 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 13	M/s Kumaran Industries	4,65,12,003.18	1,14,75,854.12	11-08-2026
14	E.L.D.C.NO/SMII/P10/2189/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 23,868 nos. of	M/s. R.K.M Electricals	4,35,98,326.30	1,07,57,413.24	11-08-2026

	street light lamp post and 21 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 14				
15	E.L.D.C.NO/SMII/P10/2190/2025 Outsourcing of manpower (Electrician Grade I & Electrical Helper), hiring of Aluminium and Hydraulic ladder vehicles for the maintenance of 19,860 nos. of street light lamp post and 7 nos. of high mast through private agency on contract basis for a period of one year in Zone 15	M/s Murugan Electrical Traders	3,81,85,832.15	94,21,679.56	11-08-2026

இப்பணிக்கான செலவினத்தை மின்துறையின் வருவாய் 2026 – 27 நிதி ஆண்டின் நிதி ஒதுக்கீட்டின் 230– 201– 305 தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்.

எனவே,

1. **அட்டவணை 2 இல் குறிப்பிட்டுள்ளப்படி, மேற்கண்ட 15 மண்டலங்களுக்கு தேவையான ஆட்கள், அலுமினியம்/ஹைட்ராலிக் ஏணி வாகனங்கள் ஆகியவற்றை கொண்டு ஒப்பந்த பணிகளுக்கு** the Tamil Nadu Transparency In Tenders Rules, 2000, Section-14(9) **இன் படி ஒப்பந்தத்தை 3 மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்யவும்,**
2. **அட்டவணை 2 ன் படி** column (5) **ல் குறிப்பிட்டுள்ளப்படி, 11.08.2026 லிருந்து மூன்று மாத** (90 நாட்கள்) **காலத்திற்கு** (11.08.2026 to 08.11.2026) **ஒப்பந்ததாரர்களுடைய ஒப்பந்தத்தை 25%க்கு மிகாமல் நீட்டிப்புக்கு கூடுதலாக நிர்வாக அனுமதி வழங்கவும்,**
3. **இப்பணிக்கான செலவினத்தை மின்துறையின் வருவாய் 2026 – 27 நிதி ஆண்டின் நிதி ஒதுக்கீட்டின் 230-201-305 தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் மற்றும் இதற்கான நிதி ஒதுக்கீடு செய்யவும்,**
4. **மேற்கண்ட பணிகளுக்கு கூடுதல் நிதி ஒதுக்குவதற்கு நிதி மேலாண்மை பிரிவுக்கு அறிவுறுத்தவும்,**

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"22.07.2026 **அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.58/2026, நாள்.22.07.2026-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வரிவிதிப்பு(ம)நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."**

"24.07.2026 **அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்**.148/2026, **நாள்**.24.07.2026**ன்படி இதற்கு**

நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.

ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது."

******

பொ.து.ந.க.எண்.ஈ3/18700/2026

தீர்மான எண்: 284/2026 **பொருள் எண்.12**

பணியமைப்பு – பொதுத்துறை – பெருநகர சென்னை மாநகராட்சியில் அயற்பணியில் பணியேற்ற அலுவலர்களின் விவரம் மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு.

அரசாணை (வாலாயம்) எண்.2181, பொது (சிறப்பு–அ) துறை, நாள். 19.06.2026, அரசாணை (வாலாயம்) எண்.2451, பொது (சிறப்பு–அ) துறை, நாள். 09.07.2026, அரசாணை (வாலாயம்) எண்.2458, பொது (சிறப்பு–அ) துறை, நாள். 09.07.2026, அரசாணை (2டி) எண்.386, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.இ.), துறை, நாள். 02.07.2026ன்படி, கீழ்காணும் அலுவலர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி அயற்பணியில் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

வ. எண்.	பெயர் மற்றும் பதவி	அரசாணை எண். மற்றும் நாள்.	அயற்பணியில் சேர்ந்த நாள்.
1.	திருமதி.ஸ்ரேயா பி.சிங், இணை ஆணையர் (சுகாதாரம்) பெருநகர சென்னை மாநகராட்சி	அரசாணை (வாலாயம்) எண்.2181, பொது (சிறப்பு–அ), நாள்.16.06.2026.	01.07.2026 மு.ப.
2	திருமதி.ஸ்வேதா சுமன், வட்டார துணை ஆணையர் (வடக்கு). பெருநகர சென்னை மாநகராட்சி	அரசாணை (வாலாயம்) எண். 2451, பொது (சிறப்பு–அ), நாள்.09.07.2026.	15.07.2026 மு.ப.
3.	டாக்டர்.சங்கீதா,	அரசாணை (வாலாயம்)	13.07.2026

வ. எண்.	பெயர் மற்றும் பதவி	அரசாணை எண். மற்றும் நாள்.	அயற்பணியில் சேர்ந்த நாள்.
	மாவட்ட வருவாய் அலுவலர் (அம்மா உணவகம்) பெருநகர சென்னை மாநகராட்சி	எண். 2458, பொது (சிறப்பு–அ), நாள்.09.07.2026	பி.ப.
4.	திரு.அ.சங்கர், இணை இயக்குர்/ உதவி ஆணையர் முதுநிலை (மண்டலம்) மண்டலம்–1, பெருநகர சென்னை மாநகராட்சி	அரசாணை (2டி) எண்.386, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.இ–) துறை, நாள் 02.07.2026	13.07.2026 மு.ப.
5.	திரு.தட்சணா மூர்த்தி, இணை இயக்குநர்/ உதவி ஆணையர், முதுநிலை (மண்டலம்), மண்டலம்–11, பெருநகர சென்னை மாநகராட்சி	அரசாணை (2டி) எண்.386, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.இ–) துறை, நாள் 02.07.2026	13.07.2026 மு.ப.
6.	திருமதி.N.ஸ்ரீதேவி, இணை இயக்குநர்/ உதவி ஆணையர், முதுநிலை (மண்டலம்), மண்டலம்–14, பெருநகர சென்னை மாநகராட்சி	அரசாணை (2டி) எண்.386, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.இ–) துறை, நாள் 02.07.2026	13.07.2026 மு.ப.

"இதனை நியமனக்குழு பதிவு செய்து

மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு சமர்ப்பிக்கின்றது."

மாண்புமிகு மேயர்

இப்பொருள் குறித்து கருத்துக்களை தெரிவிப்போர் முன் அனுமதியுடன் தற்போது பேசலாம்.
ஏற்போர் ஆம் என்க, எதிர்ப்போர் இல்லை என்க, ஏற்போரே அதிகம்.

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது."
******

ச.கு.ந.க.எண்.ச.கு.01/00933/2026

தீர்மான எண்: 285/2026 **பொருள் எண்.13**

பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி – சட்ட குழுமம் – நிலை வழக்குரைஞர்களை பணிக்கால நீட்டிப்பு செய்யவும் – தொடர் கட்டணம் (Retainer Fees) வழங்கவும் மன்றத்தின் அனுமதி.

மன்ற தீர்மான எண்.326/2022, நாள். 30.07.2022, மன்ற தீர்மான எண்.358/2022, நாள்.30.08.2022 மற்றும் மன்ற தீர்மான எண்.710/2022, நாள்.28.11.2022 ஆகிய மன்ற தீர்மானங்களின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக நீதிமன்ற வழக்குகளை கையாளுவதற்காக 24 நிலை வழக்குரைஞர்கள் பணி நியமனம் செய்யப்பட்டனர்.

மேற்காணும், 24 நிலை வழக்குரைஞர்களில் திரு. நூருதின் அவர்கள் குற்றவழக்கில் சம்மந்தப்பட்டு கைது செய்யப்பட்டதால் 19.05.2023ன் நாளிட்ட ஆணையின்படி, நிலை வழக்குரைஞர் பதவியில் இருந்து நீக்கம் செய்யப்பட்டார்.

மன்ற தீர்மான எண்.575/2023, நாள்.31.10.2023 மற்றும் மன்ற தீர்மான எண்.035/2024ன்படி, முறையே 2 (ம) 3 நிலை வழக்குரைஞர்கள் பணி நியமனம் செய்யப்பட்டு, அதில் ஒருவர் முறையாக வழக்குகளை கையாளாததால் நிலை வழக்குரைஞர் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.

மன்ற தீர்மான எண்.369/2024, நாள்.30.09.2024ன்படி மேற்காணும் 23 நிலை வழக்குரைஞர்களுக்கு முறையே 01.08.2023 முதல் 31.01.2024 வரையிலும் மற்றும் 01.02.2024 முதல் 31.05.2024 வரையிலும் காலநீட்டிப்பு செய்யவும் மற்றும் தொடர் கட்டணம் வழங்கவும் ஆணை பெறப்பட்டது.

நிலை வழக்குரைஞர்களின் விவரங்கள் பின்வருமாறு,

அட்டவணை – I

வ. எண்	நிலை வழக்குரைஞர்களின் பெயர் திரு / திருமதி	பதிவு எண்	பணி ஒதுக்கீடு

1	G.T .சுப்ரமணியன்	Ms.998/1989	உயர்நீதிமன்றம்
2	A.C.மணிபாரதி	Ms.936/1999	உயர்நீதிமன்றம்
3	G. ஸ்ரீராம்	Ms.1018/1993	நகர உரிமையியல் நீதிமன்றம்
4	D. புவனசுந்தரம்	Ms.405/1993	நகர உரிமையியல் நீதிமன்றம்
5	P .சின்னராஜா	Ms.757/2005	நகர உரிமையியல் நீதிமன்றம்
6	J .சீனிவாசன்	Ms.3191/2007	நகர உரிமையியல் நீதிமன்றம்
7	A. அருண்பாபு	Ms.98/1997	உயர்நீதிமன்றம்
8	S. கோபிநாதன்	Ms.8481/1991	உயர்நீதிமன்றம்
9	P. T .ரமாதேவி	Ms.1732/2000	உயர்நீதிமன்றம்
10	K. அஸ்வினிதேவி	Ms.1049/2009	உயர்நீதிமன்றம்
11	D.B.R. பிரபு	Ms.2187/2005	உயர்நீதிமன்றம்
12	E.C. ரமேஷ்	Ms.355/2004	உயர்நீதிமன்றம்
13	M. மணிவேலன்	Ms.226/2016	நகர உரிமையியல் நீதிமன்றம்
14	S. சந்தோஷ்	Ms.1290/2007	நகர உரிமையியல் நீதிமன்றம்
15	S.S.தேன்மொழி	Ms.2157/2006	நகர உரிமையியல் நீதிமன்றம்
16	R.ஸ்ரீதர்	Ms.1049/2006	உயர்நீதிமன்றம்
17	ப்பி.பிரித்வி சோப்டா	Ms.2817/15	உயர்நீதிமன்றம்
18	எம்.சுரேஷ்குமார்	Ms.727/1994	நகர உரிமையியல் நீதிமன்றம்
